# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை: 20

சுடர் 32 கதிர் 300 புரட்டாதி 06ஆம் நாள் வெள்ளிக்கிழமை 22 செப்ரெம்பர் 2017 வள்ளுவர் ஆண்டு 2048

பக்கங்கள்: 28


- ★ பிரிவினை பற்றிப் பேசவே முடியாது
- ★ பௌத்தத்துக்கு முன்னுரிமை
- ★ மாகாணங்களை இணைப்பதில் இணக்கமின்மை
- ★ 3 மட்டங்களில் அதிகாரப் பகிர்வு
- ★ காணிப் பயன்பாட்டு அதிகாரம் மாகாணங்களுக்கு
- ★ பகிரப்பட்ட அதிகாரங்களைத் திரும்பப்பெறுவதற்கு கட்டுப்பாடு
- ★ இரண்டாவது சபை
- ★ அரசமைப்புப் பேரவை
- ★ பெண்களுக்கு 50 வீத இடஒதுக்கீடு

# வெளியானது இடைக்கால அறிக்கை எந்தக் கட்சிக்குமே இணக்கமில்லை

யாழ்ப்பாணம், செப்ரெம்பர் 22

புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கான வழிகாட்டல் குழுவின் இடைக்கால அறிக்கை நேற்று வெளியானது. தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க அதனை நாடாளுமன்றத்தில் முன்வைத்தார். இலங்கை பிரிக்கப்படாத, பிரிக்கப்பட முடியாத நாடு என்று அந்த அறிக்கை குறிப்பிடுகிறது. பௌத்தத்துக்கு முன்னுரிமை வழங்கப்படவேண்டும் என்று பரிந்துரைக்கிறது. வடக்கு -கிழக்கு மாகாணங்களை இணைப்பது தொடர்பில் மூன்று தெரிவுகளை முன்வைத்து இணக்கமின்மையை வெளிப்படுத்தியுள்ளது. தேசியம், மாகாணம், உள்ளூரதிகார சபை ஆகிய மூன்று மட்டங்களில் அதிகாரங்களைப் பகிர்வதற்கு முன்மொழிந்துள்ளது. காணிப் பயன்பாட்டு அதிகாரத்தை மாகாணங்களுக்கு வழங்க யோசனை முன்வைத்துள்ளது. பகிரப்பட்ட

>> 25



இதுவும் பேய்க்காட்டு வேலைதான்..

## ஒற்றையாட்சியை நீக்க சுதந்திரக் கட்சி எதிர்ப்பு

யாழ்ப்பாணம், செப். 22

புதிய அரசமைப்பில் இருந்து இலங்கை ஒற்றையாட்சி நாடு என்ற பதத்தை நீக்கி ஒருமித்த நாடு என்ற பதத்தைப் பயன்படுத்துவதற்கு சிறி லங்கா சுதந்திரக் கட்சி கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது. இடைக்கால அறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ள அந்தக் கட்சியின் அறிக்கையில் இது தெளிவாகக்

>> 24

## ஒருமித்த இலங்கைக்குள் அதிஉச்ச அதிகாரப்பகிர்வு

### இடைக்கால அறிக்கையை முன்வைத்து ரணில் உரை



"ஒருமித்த நாட்டுக்குள் உயர்ந்தபட்ச அதிகாரப் பகிர்வை வழங்க அரசு தயாராக இருக்கின்றது. சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் அதற்கு இணக்கம் வெளியிட்டுள்ளது. தற்போது முன்வைக்கப்படும் இடைக்கால அறிக்கை சட்டவரைவு மட்டுமே. சட்டபூர்வமான ஆவணம் அல்ல. மக்கள் கருத்து அறிந்த பின்னரே அது இறுதி செய்யப்படும்"

இவ்வாறு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் நேற்று அறிவித்தார்.

இடைக்கால அறிக்கையை அரசமைப்பு நிர்ணய சபையில் முன்வைத்து உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

(விரிவு பக். 04)

## பிளவுபடாத இலங்கைக்குள் சகலரும் ஏற்கும் அரசமைப்பு

### உருவாகும் என சம்பந்தன் நம்பிக்கை



"பிளவுபடாத, பிரிக்கப்பட முடியாத ஐக்கிய இலங்கை என்ற உறுதியான கட்டமைப்புக்கமைவாக புதிய அரசமைப்பு உருவாக்கப் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன. அதன்படியே நாம் அனைவரும் சுயமாக விரும்பி ஒப்புக்கொள்ளவும் ஏற்றுக்கொள்ளவும் கூடிய வகையில் அரசமைப்பு உருவாக்கப்படும்"

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

புதிய அரசமைப்பை உருவாக்கும் வழிநடத்தல் குழுவின் இடைக்கால அறிக்கையை முன்வைத்து அரசமைப்பு நிர்ணய சபையில் (நாடாளுமன்றில்) இடம்பெற்ற விவாதத்தில் பங்கேற்று அவர் உரையாற்றினார். அதன்போதே சம்பந்தன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

(விரிவு பக். 09)

## ஒற்றையாட்சிக்கு மொழி ரீதியாக வேறுபட்ட பொருள் கூறி நாடகம்

### கடுமையாகச் சாடுகிறது மகிந்த அணி



"ஒற்றையாட்சி என்ற பதத்துக்கு ஆங்கிலத்தில் ஒரு பொருளும் தமிழில் வேறு பெயரும் சூட்டும் நாடகத்துக்கு இடமளிக்க முடியாது. எங்களுக்கு சிங்களம், தமிழ், ஆங்கிலம் மூன்று மொழியும் தெரியும். இடைக்கால அறிக்கையின் ஊடாக தலைமை அமைச்சர் முன்வைத்த யோசனைக்கும் கூட்டு எதிர்கட்சி, மக்கள் விடுதலை முன்னணி, சிறிலங்கா சுதந்திரக் கட்சி முன்வைத்த கருத்துக்கும் இடையே பெரும் கருத்து வேறுபாடுகள் உள்ளன"

இவ்வாறு மகிந்த அணியின் நாடாளுமன்ற உறுப்பினர் தினேஸ் குணவர்த்தன தெரிவித்தார்.

இடைக்கால அறிக்கை முன்வைக்கப்பட்ட பின்னர் நாடாளுமன்றத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

(விரிவு பக். 06)

## சகல அறிக்கைகள் மீதும் ஒக். இறுதியில் விவாதம்

யாழ்ப்பாணம், செப். 22

இடைக்கால அறிக்கை மற்றும் உபகுழுக்களின் அறிக்கைகள் மீது ஒக்ரோபர் மாதம் இறுதிப் பகுதியிலேயே விவாதம் இடம்பெறும் என்று தெரியவருகின்றது. விவாதத்துக்கான திகதியை, கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் தீர்மானிப்பது என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

புதிய அரசமைப்புக்கான வழிநடத்தல் குழுவின் இடைக்கால அறிக்கை நாடாளுமன்றில் நேற்று முன்வைக்கப்பட்டது.

இந்த அறிக்கை மீதான விவாதம் ஒக்ரோபர் மாதம் இடம்பெறும்

>> 24

## வடக்கு - கிழக்கு இணைந்த கூட்டாட்சித் தீர்வு அவசியம்

### கூட்டமைப்பின் பின்னிணைப்பில் வலியுறுத்து

>> 25

**பிரதிக்கு முந்துங்கள்**

இடைக்கால அறிக்கையின் முழு வடிவம் நாளைய உதயனுடன் வெளிவரும்.

## மகிந்தவின் இல்லத்துக்குள் கூரிய ஆயுதத்துடன் மர்மநபர்

### பாதுகாப்பு அதிகாரிகளால் தடுப்பு

யாழ்ப்பாணம், செப். 22

முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவின் கொழும்பு விஜேராம மாவத்தையில் உள்ள உத்தியோகபூர்வ

>> 24

## அதிகாரப் பகிர்வை எதிர்க்கவில்லை நிறைவேற்று அதிகாரமும் அவசியம்

சு.கவின் நிலைப்பாட்டை அறிவித்தார் நிமால்

(விரிவு பக். 04)

## பல்லினத் தேசிய நாடாக இலங்கை மாறவேண்டும்

ஜே.வி.பி வலியுறுத்து

(விரிவு பக். 04)

## பௌத்தத்துக்கான முன்னுரிமையை நீக்க ஆதரவளிக்கமாட்டாராம் மனோ

(விரிவு பக். 06)




சிறு பிள்ளைகளுடன் பரிசும் வளரும்

Vardhana JUNIOR

இன்றே DFCC வங்கிக்கு வந்து வர்தன ஜூனியர் கணக்கொன்றை ஆரம்பியுங்கள்.

நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

24 மணிநேர அழைப்பு மையம்: 011 2350000

www.dfcc.lk

DFCC வங்கி ஃபிச் ரேட்டிங் லங்கா லிமிட்டெட்டின் AA- (lka) தரப்படுத்தலைப் பெற்றுள்ளது.

DFCC வங்கி இலங்கை மத்திய வங்கியினால் மேற்பார்வை செய்யப்படும் உரிமம் பெற்ற ஒரு வர்த்தக வங்கியாகும்.

DFCC வங்கி

# காணி அபகரிப்பை எதிர்த்து மருதங்கேணியில் போராட்டம்

வடமராட்சி,செப்.22



வன ஜீவராசிகள் திணைக்களத்தினர் தேசிய சரணாலயத்துக்காக, மேலதிக காணிகளை கையகப்படுத்துவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து மருதங்கேணி மக்கள் நேற்றுக் காலை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மருதங்கேணி பிரதேச செயலகம் முன்பாக இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

"வன ஜீவராசிகள் திணைக்களத்தினர் தேசிய சரணாலயத்துக்காக 196 சதுர கிலோ மீற்றர் காணியை வர்த்தமானி ஊடாக சுவீகரித்தனர். தற்போது அதற்கான எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு எல்லைக் கற்களும் நடப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இந்த நிலையில் சுவீகரிக்கப்பட்ட காணியின் பரப்பளவை விட, மேலதிக காணிகளில் எல்லைக் கற்கள் நடப்படுகின்றன. அந்தக் காணிகளுக்குள் கடல் நீர் மற்றும் நன்னீர் மீன்பிடிகள், வயல் நிலங்கள் வாழ்விடங்கள் அனைத்தையும் இழக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அதனால் எமது வாழ்வாதாரம் பாதிக்கப்படுகிறது. ஆகவே வர்த்தமானி அறிவித்தலை மீளப்பெற்று, எமது பூர்வீக வாழ்விடங்களை விடுவிக்க வேண்டும்" என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

ஆர்ப்பாட்டத்தின் இறுதியில் மருதங்கேணிப் பிரதேச செயலர் கனகசபாபதி கனகேஸ்வரனிடம் மனுக் கையளித்தனர். இந்தப் பிரச்சினை தொடர்பில் சம்பந்தப்பட்டவர்களிடம் தொடர்பு கொண்டு, அதற்கான உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று பிரதேச செயலர் தெரிவித்தார். கட்டைக்காடு வன ஜீவராசிகள் திணைக்களம் முன்பாக இன்று ஆர்ப்பாட்டம் இடம்பெறும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-ரி2-26)

# தமிழர்களின் உரிமைகளை நசுக்கியது சிங்கள அரசு

## ஐ.நா. மனித உரிமைகள் சபையில் வைகோ எடுத்துரைப்பு



ஜெனீவா.செப்.22

கடந்த காலங்களில் இருந்து இன்று வரை தமிழர்களின் வாழ்வாதார உரிமைகள், மனித உரிமைகள் அனைத்தும் இனவாத சிங்கள அரசால் நசுக்கப்பட்டுள்ளன. நசுக்கப்பட்டு வருகின்றன. ஐ.நா. வின் அன்றைய அறிக்கைகளே அதற்குச் சாட்சி. தமிழர்களுக்கு நிகழ்ந்த கொடுமைகளைப் பார்த்து எவரும் கண்ணீர் சிந்துவர்.

இவ்வாறு இந்தியாவின் ம.தி.மு. கட்சியின் பொதுச் செயலாளர் வைகோ தெரிவித்தார்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நேற்றுச் சிறப்புரை ஆற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

ஐ.நா. அறிக்கையின் படி 2009 மார்ச் மாதம் காயப்பட்ட தமிழர்கள் இருந்த மருத்துவமனை மீது குண்டு வீசப்பட்டது. அங்கிருந்த தமிழர்கள் கொல்லப்பட்டனர். 2009 ஓகஸ்ட் மாதம் 25 ஆம் திகதி லண்டன் தொலைக்காட்சி வெளியிட்ட காணொலி வெளிப்படுத்திய காட்சி, குருதியை உறையச் செய்யும்.

தமிழ் இளைஞர்கள் எட்டுப் பேர்களின் கைகளைப் பின்புறமாகக் கட்டி, கண்களைக் கட்டி, இழுத்துச் சென்று, நிலத்தில் மண்டியிட வைத்து, உச்சந்தலையில் சுட்டார்கள். துப்பாக்கிக் குண்டுகள் பாய்ந்தன. அவர்களது தலைகள் சிதறி, குருதி நிலத்தில் சிந்தியது.

2010 டிசெம்பர் 2 ஆம் திகதி அதே சனல் 4 தொலைக்காட்சி ஒளிபரப்பிய சம்பவம் மிகவும் கொடூரமானது. சுட்டுக்கொல்லப்பட்ட தமிழ் இளைஞர்களின் நிர்வாண உடல்கள் சிதறிக் கிடந்தன. விடுதலைப் புலிகளின் தொலைக்காட்சியின் செய்தி வாசிப்பாளரான இளநங்கை இசைப்பிரியா 15 சிங்களச் சிப்பாய்களால் கொடூரமாக வன்புணர்வுக்கு உட்டுத்தப்பட்டுக் கொல்லப்பட்டார். ஆடைகள் எதுவும் இல்லாத அந்த அபலைப் பெண்ணின் உடல் சேற்றில் வீசப்பட்டது.

பாதுகாப்பு வலயத்துக்குக் கொண்டு வரப்பட்ட இலட்சக்கணக்கான தமிழர்களுள் பெண்கள், குழந்தைகள், ஆண்கள் குண்டுவீச்சால் கொன்று குவிக்கப்பட்டனர். கர்ப்பிணித் தமிழ்ப் பெண்களின் வயிறுகளை சயனைட் கத்தியால் குத்திக் கிழித்து, ஐந்த மாத, ஆறு மாதக் கருக்களை மண்ணில் தூக்கி எறிந்தனர். இந்த மிருகத்தனமான படுகொலைகள் சுட்டிக்காட்டும் உண்மை யாதெனில், தமிழர்களின் மனித உரிமைகளை ஆயிரம் அடிக்குக் கீழே சிங்கள அரசு குழி தோண்டிப் புதைத்துவிட்டது.

மனித உரிமை உறுப்பு நாடுகளை இரு கரங்களைக் கூப்பி வேண்டுகிறேன். இலங்கை அரசு இழைத்த மனித உரிமைகளை சுதந்திரமான அனைத்துலக நீதிமன்றத்தில் விசாரிக்க வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றும்படி கேட்டுக் கொள்கின்றேன் - என்றார். (ஐ)




# மியன்மார் அரசுக்கு எதிராக யாழ்ப்பாணத்தில் ஆர்ப்பாட்டம்

யாழ்ப்பாணம்,செப்.22

மியன்மார் நாட்டில் ரோஹிங்யா முஸ்லிம்கள் மீது மேற்கொள்ளப்பட்டுவரும் தாக்குதல் சம்பவங்களுக்குக் கண்டனம் தெரிவித்தும், அந்த நாட்டு அரசுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் நல்லூர் கைலாய பிள்ளையார் ஆலயத்துக்கு அருகில் நேற்றுக் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் இணைந்து முன்னெடுத்த ஆர்ப்பாட்டத்தில் வடக்கு மாகாணத்தில் பல்வேறு பகுதிகளில் இருந்தும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

"மியன்மார் படுகொலைகளை நிறுத்தி பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுக்க ஐ.நா சபை ஆணையாளர் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்புக் குழு இந்த ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்தது. ஆர்ப்பாட்டத்தின் நிறைவில் நாவலர் வீதியில் உள்ள ஐ.நா அலுவலகத்தில் மனுக் கையளிக்கப்பட்டது. (ஐ-8)

# கணித போட்டியில் வடக்கு முதலிடம்

யாழ்ப்பாணம், செப். 22

தேசிய மட்ட கணித விநாடி வினா போட்டியில் வடக்கு மாகாணம் முதலாம் இடத்தைப் பெற்றது.

போட்டியில் வடக்கு மாகாணப் பாடசாலைகளைச் சேர்ந்த 9 மாணவர்கள் பங்கேற்றனர்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவர்கள் எஸ்.கலாபவன், கே.கிரிசாந்த், கிளிநொச்சி மகா வித்தியால மாணவன் ரி.திருக்குமரன், வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய மாணவர்கள் கே ஏரகன், பி. நிகேசன், புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி மாணவி ஐ.றதுசா. றம்பைக்குளம் பெண்கள் மகா வித்தியாலய மாணவி ரி.கரிணி, யாழ்ப்பாணம் வேம்படி. பெண்கள் உயர் கல்லூரி மாணவி கே.தாரங்கா சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவி ஜே.விஸ்ணவி ஆகியோர் பங்கேற்றனர். (வ-4)



## பொலிஸார் மீது வாள்வெட்டு:

# 14 சந்தேகநபர்களினதும் விளக்கமறியல் நீடிப்பு

யாழ்ப்பாணம், செப். 22

பொலிஸ் உத்தியோகத்தர்களை வாளால் வெட்டிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 14 பேரின் விளக்கமறியல் எதிர்வரும் 4ஆம் திகதிவரை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றால் நேற்று நீடிக்கப்பட்டது.

கடந்த மாதம் கொக்குவில் பகுதியில் கடமையின் நிமித்தம் சீருடையில் சென்ற கோப்பாய் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் மீது வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது.

காயமடைந்தவர்களில் ஒருவரான தமிழ் பொலிஸ் உத்தியோகத்தர், யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று கடமைக்கு திரும்பியுள்ள போதிலும் மற்றைய சிங்கள பொலிஸ் உத்தியோகத்தர் கடும் காயங்களுக்குட்பட்ட நிலையில் தற்போதும் நாரஹேன்பிட்டியிலுள்ள பொலிஸ் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இந்த மாதம் சந்தேகநபர்களின் அடையாள அணிவகுப்பு எடுக்கப்பட்டவேளை அவர் நோயாளர் காவு வண்டியின் மூலம் கொண்டு வரப்பட்டு சக்கர நாற்காலியில் அமர்ந்தவாறு சந்தேகநபர்களை அடையாளம் காட்டியிருந்தார். இரண்டு சாட்சிகளாலும் இந்தச் சம்பவத்தில் கைது செய்யப்பட்ட 14 பேரில் மூவர் தவிர ஏனையோர் அடையாளம் காணப்பட்டிருந்தனர்.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்ட வேளையில் சந்தேகநபர்கள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகள் அவர்களை பிணையில் விடுமாறு கோரினர். எனினும் கோப்பாய் பொலிஸார் இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸ் மா அதிபரின் பணிப்புரையின் பேரில் பயங்கரவாத புலனாய்வுப் பிரிவினர் உள்பட பல பொலிஸ் குழுக்கள் விசாரணையில் ஈடுபட்டுள்ளதால் அவர்களை பிணையில் விடுவித்தால் விசாரணை நடவடிக்கைகளுக்கு இடையூறு ஏற்படும் என்று தெரிவித்து பிணையில் விடுவிப்பதற்கு ஆட்சேபனை தெரிவித்தனர்.

இதனையடுத்து 14 பேரையும் ஒக்ரோபர் மாதம் 4 ஆம் திகதி வரையும் விளக்கமறியலில் வைக்குமாறு பதில் நீதிவான் க.அரியநாயகம் உத்தரவிட்டார். (வ-103)

# போலியான டொலர்களை பரிமாற்ற முயன்றவர் யாழ். நகரில் சிக்கினார்

## விசாரணைகளின் பின் மற்றொருவரும் கைது

யாழ்ப்பாணம், செப். 22

"10 ஆயித்து 100 கனேடிய டொலர் பெறுமதியான போலி நாணயத்தாள்களை மாற்றுவதற்கு முற்பட்ட குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டார். அவர் வழங்கிய தகவலின் அடிப்படையில் மற்றொருவரும் கைது செய்யப்பட்டார்" என்று யாழ்ப்பாணப் பொலிஸார் தெரிவித்தனர்.

"யாழ்ப்பாண மாநகரில் இயங்கும் பணப்பரிமாற்று நிலையத்தில் வைத்து அவர்கள் கைது செய்யப்பட்டனர். பொலிஸ் தடுப்பில் வைத்து அவர்களிடம் விசாரணைகள் இடம்பெறுகின்றனர்.

போலி கனேடிய டொலர் நாணயத்தாள்களுடன் ஒருவர் அந்தப் பணப்பரிமாற்ற நிலையத்துக்குச் சென்றுள்ளார். தான் கொண்டு சென்றிருந்த நாணயத்தாள்களை அவர்களிடம் கொடுத்து இலங்கைப் பெறுமதியில் மாற்றித்தருமாறு கோரியுள்ளார்.

அந்த நாணயத்தாள்களை அவதானித்த பணப்பரிமாற்ற நிலையத்தி னர் அவை அனைத்தும் போலியானவை என்பதனைக் கண்டறிந்தனர். அது தொடர்பில் யாழ்ப்பாணப் பிரதிப் பொலிஸ்மா அதிபரின் தலைமையிலான புலனாய்வுப் பிரிவின ருக்குத் தகவல் வழங்கினர்.

அங்கு சென்ற புலனாய்வுப் பிரிவினர் அவரைக் கைது செய்தனர். சித்தன்கேணிப் பகுதியில் உள்ள பிரபல வர்த்தகர் ஒருவரே போலி நாணயங்களை மாற்றிவருமாறு தந்திருந்தார் என்று கைது செய்யப்பட்டவர் விசாரணையின்போது தெரிவித்தார். அதனால் சித்தன் கேணிப் பகுதியைச் சேர்ந்த அந்த வர்த்தகரும் கைது செய்யப்பட்டார்.

போலி நாணயத்தாள்கள் இலங்கை மதிப்பில் 13 லட்சம் ரூபாவுக்குச் சமமானவை.

விசாரணையின் பின்னர் இருவரும் யாழ்ப்பாணம் நீதிவான் மன்றில் இன்று முற்படுத்தப்படுவர்" என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (வ-4,106-37)

# தற்கொலைகளால் வடக்கின் நிலை பற்றி பேரதிர்ச்சி, அச்சம்

## நாடாளுமன்றில் அமைச்சர் எஸ்.பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 22

வடக்கில் தற்கொலை செய்துகொள்வோரின் எண்ணிக்கை கூடிக் குறைந்து செல்வதாகவும், இந்தப் புள்ளிவிவரங்கள் தனக்குப் பேரதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதாகவும், சமூக வலுவூட்டல் அமைச்சர் எஸ்.பி. திசாநாயக்க தெரிவித்தார்.

வடக்கு இளையோரின் விரக்தியைக் கண்டுகொள்ளாமல் விட்டால் அவர்கள் மீண்டும் சயனைட் குப்பிகளுடன் போராட்டத்தில் இறங்கிவிடுவர் என்றும் அவர் எச்சரித்தார்.

நாடாளுமன்றத்தில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கில் இடம்பெறும் தற்கொலைகள் தொடர்பான புள்ளி விவரங்கள் என்னை அதிர்ச்சியும் அச்சமும் அடைய வைத்துள்ளன. 2009ஆம் ஆண்டு 169 பேரும், 2010ஆம் ஆண்டு 137 பேரும், 2011ஆம் ஆண்டு 176 பேரும், 2012ஆம் ஆண்டு 180 பேரும், 2013ஆம் ஆண்டு 160 பேரும், 2014ஆம் ஆண்டு 168 பேரும், 2015ஆம் ஆண்டு 158 பேரும், 2016ஆம் ஆண்டு 169 பேரும், நடப்பாண்டில் 77 பேரும் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். இது மிகப் பெரிய பயங்கரமான ஒரு நிலைமையாகும்.

தற்கொலை முயற்சிகளைப் பார்க்கும் போது அச்சமாக உள்ளது. இதற்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது. விரக்தியில் உள்ள வடக்கு இளையோர்களுக்கு உளவியல் ஆலோசனைகளை வழங்க வேண்டும். அது மாத்திரமின்றி வடக்குப் பிரச்சினை தொடர்பில் சிறப்பு அவதானம் செலுத்த வேண்டியுள்ளது. இதற்கு அவதானம் செலுத்தவில்லை என்றால் வடக்கு இளைஞர்கள் சயனைட் குப்பிகளுடன் மீண்டும் போராட்டத்தில் களமிறங்கி விடுவர்.

இதற்கு நாம் மட்டும் பொறுப்பல்ல. வடக்கு மாகாண சபையும் முதலமைச்சரும் இது தொடர்பில் அவதானம் செலுத்த வேண்டும். இந்த விடயத்தில் விளையாட முனையக் கூடாது. வட மாகாணத்தில் போதியளவு உளவியல் ஆலோசகர்கள் இல்லாத குறையும் உள்ளது. ஒரு பிரதேச செயலகத்தில் குறைந்தது இருவராவது இருக்கவேண்டும் என்றார். (வ-5,31)

# உரிய ஆவணங்களை முன்வைத்த பின்னே நாவற்குழியில் விகாரை அமைக்க அனுமதி

## சாவகச்சேரி நீதிமன்று உத்தரவு

சாவகச்சேரி, செப். 22

நாவற்குழியில் விகாராதிபதி கட்டடம் அமைப்பதற்காக முன்வைத்த ஆவணங்கள் ஏற்றுக் கொள்ளக்கூடியதாக இல்லை. அதனால் பிரதேச சபையால் கோரப்படும் முக்கியமான அனைத்து ஆவணங்களையும் விகாராதிபதி முன்வைக்கவேண்டும் என்று சாவகச்சேரி நீதிமன்று உத்தரவிட்டது.

நாவற்குழியில் சட்டவிரோதமாக விகாரை அமைப்பது தொடர்பாக விகாராதிபதிக்கு எதிராக சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றில் சாவகச்சேரி பிரதேச சபை வழக்குத் தாக்கல் செய்தது.

இந்த வழக்கு கடந்த ஜூன் மாதம் விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது, "பிரதேச சபையில் கட்டடம் அமைப்பதற்கு அனுமதி பெறப்படவேண்டும். கட்டடம் அமைப்பதற்குப் பிரதேச சபையால் கோரப்படும் ஆவணங்களைச் சமர்ப்பித்து அனுமதி பெற்ற பின்னரே விகாரைக்கான கட்டடம் அமைக்கலாம். கட்டடம் அமைப்பதற்குரிய முறையான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டால் அதனைப் பரிசீலித்து அனுமதி வழங்கலாம்" என்று நீதிமன்று கட்டளையிட்டு வழக்கை நேற்றுவரை ஒத்திவைத்தது.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது, "அண்மையில் கட்டட அனுமதிக்காக விகாராதிபதியால் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணம் சபையின் கட்டட விண்ணப்பத்துக்குரியதாக ஏற்றுக் கொள்ள முடியாத நிலையில் உள்ளது. அதற்கெனச் சில நிபந்தனைகள் உள்ளன. அவற்றை நிறைவேற்றும் பட்சத்தில் அனுமதி வழங்குவது தொடர்பாக பாசீலிக்கப்படும்" என்று பிரதேச சபையின் சார்பில் நீதிமன்றில் முற்பட்ட சட்டத்தரணி தெரிவித்தார்.

அதில்,

1. புதிய மதவழிபாட்டுத்தலத்தை அமைப்பதற்கான மத அலுவல்கள் ஒழுக்க மேம்பாட்டு அமைச்சின் அனுமதிக் கடிதம்.
2. புதிதாக அமைக்கப்படவுள்ள மத வழிபாட்டுத் தல கட்டட அமைப்பின் மாதிரி வரைபடம் (மூலப்பிரதிகள் உரியவர் களின் கையொப்பத்துடன்)
3. விண்ணப்பப் படிவத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பங்கள் சில இடங்களில் இடப்படல் வேண்டும்.
4. புதிதாகக் அமைக்கப்படவுள்ள மத வழிபாட்டுத் தலக் கட்டடம் அமையப் பெற்ற காணியின் நில அளவைப் படம்.
5. புதிதாக அமைக்கப்பவுள்ள மத வழிபாட்டுத்தலம் அமையப் பெறவுள்ள தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையிடமிருந்து கையளிக்கப்படவுள்ள காணி தொடர்பான அமைச்சரவை ஒப்புதலுடனான சட்டமுறையான ஆவணத்துடன் காணிக்குரிய முறையான ஆவணம் ஆகியவற்றைச் சமர்ப்பிக்க வேண்டும்" என்று சட்டத்தரணி தெரிவித்தார்.

இதனையடுத்துப் பிரதேச சபையால் கோரப்பட்டுள்ள உரிய ஆவணங்களை ஒக்டோபர் 26ஆம் திகதி நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார். அன்றுவரை வழக்கு ஒத்திவைக்கப்பட்டது. (வ-4-9)




### பொன்சேகாவின் கருத்து தனிப்பட்டதே

# ஜெனரல் ஜெகத் ஜயசூரியவுக்கு எதிரான போர்க்குற்றச்சாட்டுகளுக்கு சாட்சியில்லை

## நாடாளுமன்றில் அரசு தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 22

முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் ஜெகத் ஜயசூரியவுக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களுக்கு எந்தவொரு ஆதாரமும் இல்லை. அமைச்சர் சரத் பொன்சேகா தெரிவித்து வரும் கருத்து, அவருடைய தனிப்பட்டதே.

இவ்வாறு அயலுறவுத்துறை அமைச்சர் திலக் மாரப்பன நாடாளுமன்றத்தில் நேற்றுத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பிரேசில் நாட்டில் முன்னாள் இராணுவத் தளபதி ஜெகத் ஜயசூரியவுக்கு எதிராக போர்க்குற்ற வழக்கு தொடரப்பட்டது. இது போன்று பல முறை இராணுவத்தினருக்கு எதிராக வழக்குகள் தொடரப்பட்டுள்ளன. 2011ஆம் ஆண்டு அமெரிக்காவிலும் வழக்குத் தொடரப்பட்டது. எனினும் சாட்சியங்கள் இல்லாத காரணத்தால் அவை நிராகரிக்கப்பட்டன.

ஜெகத் ஜயசூரியவுக்கு எதிராக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு எந்தவொரு சாட்சியங்களும் இல்லை. அவருக்கு எதிராக வழக்குத் தொடர முடியாது - என்றார்.

நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல, "அரச தலைவர் மைத்திரி சுதந்திரக் கட்சி மாநாட்டில் உரையாற்றும்போது, எந்தவொரு இராணுவத்தினருக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்க அனுமதிக்க மாட்டேன்- என்றார். ஆனால் பொன்சேகா வேறுபட்ட கருத்துக்களை முன்வைக்கின்றார். அரசின் நிலைப்பாடு என்ன ? என்று கேள்வி எழுப்பினார்.

அமைச்சர் திலக் மாரப்பன பதிலளிக்கையில், "இராணுவத்தினர் தொடர்பில் அரச தலைவரின் கொள்கையிலேயே அரசு உள்ளது. அமைச்சர் சரத் பொன்சேகாவின் கருத்து அவரது தனிப்பட்ட கருத்து - என்றார். (வ-5,31)

# தேசியப் பாதுகாப்பு, ஒற்றையாட்சியை பாதுகாக்க அரச தலைவரிடம் அதிகாரம்

## சு.கவின் நிலைப்பாட்டை வெளிப்படுத்தினார் நிமால்



கொழும்பு, செப். 22
தேசியப் பாதுகாப்பு மற்றும் ஒற்றையாட்சியை உறுதிப்படுத்துவதற்கு சகல மக்களின் வாக்குகளாலும் அரச தலைவர் ஒருவர் தெரிவு செய்யப்படுவதற்கான தேசிய பொறிமுறையொன்று கடைப்பிடிக்கப்படுவது அவசியம். நிறைவேற்று அதிகாரம் கொண்ட அரச தலைவர் இருப்பதன் ஊடாகவே நாட்டில் இன, மதரீதியான முரண்பாடுகளை களைந்து நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியும்.

இவ்வாறு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்றக் குழுத் தலைவரும் அமைச்சருமான நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

இடைக்கால அறிக்கை முன்வைக்கப்பட்டதன் பின்னர் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சகல அரசியல் கட்சிகளும் தமது நிலைப்பாட்டைத் தெரிவித்து அது பற்றி நீண்ட கலந்துரையாடல்கள் நடத்துவதற்கு வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்தமை பாராட்டத்தக்கது. தேர்தல் முறையை மாற்றுவது உள்ளிட்ட பல்வேறு நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டே சுதந்திரக் கட்சி அரசில் இணைந்து கொண்டது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் வட்டார முறையை உள்ளடக்கிய கலப்புமுறை கொண்டுவரப்பட்டுள்ளது.

மாகாண சபைத் தேர்தல்களிலும் கலப்புத் தேர்தல் முறைமையொன்றை கொண்டுவர முடிந்துள்ளது. நாடாளுமன்றத் தேர்தல்களுக்கும் இவ்வாறான கலப்புமுறையொன்று உடனடியாக கொண்டுவரப்பட வேண்டும். ஒற்றையாட்சி முறை, பௌத்த மதத்துக்கான முக்கிய இடம் என்பவற்றில் மாற்றங்கள் கொண்டுவரப்படக்கூடாது என்ற நிலைப்பாட்டில் சுதந்திரக் கட்சி உள்ளது. ஏனைய எந்தவொரு கட்சியும் முன்வைக்காத யோசனைகளை நாம் முன்வைத்துள்ளோம்.

அரசமைப்பு நீதிமன்றமொன்று உயர் நீதிமன்றத்தால் அமைக்கப்பட வேண்டும். இரண்டாவது சபை அமைக்கப்பட வேண்டும். நிறைவேற்று அதிகாரம் கொண்ட அரச தலைவர் முறை நடைமுறையில் இருக்க வேண்டும் - என்றார்.

(வ-5.31)

# பல்லினத் தேசிய நாடாக இலங்கை மாறவேண்டும்

## ஜே.வி.பி வலியுறுத்து

யாழ்ப்பாணம், செப். 22
"இலங்கையில் பல்லின மக்கள் வாழ்கின்றார்கள். அனைத்து இன மக்களினதும் உரிமைகள் சம அளவில் பாதுகாக்கும் வகையில் பல்லின தேசிய நாடாக இலங்கையை உருவாக்க வேண்டும்" என்று மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரான அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கான வழிநடத்தல் குழுவின் இடைக்கால அறிக்கை நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டதையடுத்து நிகழ்த்திய உரையின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசமைப்புத் தொடர்பான எமது பார்வை முற்றிலும் வேறுபட்ட ஒன்றாகும். தற்போது வரையில் எமது நாட்டின் அரசமைப்பில் 19 தடவைகள் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவ்வாறு திருத்தம் செய்யப்பட்ட தடவைகள் தவிர்ந்த ஏனைய தடவைகளின்போது அப்போதைய ஆளும் தரப்புக்கள் தமது அதிகாரத்தைத் தக்கவைத்துக்கொள்ளும் நோக்கத்திலேயே திருத்தங்களை மேற்கொண்டன.

எவ்வாறாயினும் சனநாயக முன்னெடுப்புச் சார்ந்த ஒரு முயற்சி என்ற வகையில் நாம் இந்தச் செயற்பாட்டுக்கு ஆதரவளிக்கத்தான் வேண்டும். ஆனால், அதற்காக மக்கள் விடுதலை முன்னணியின் பக்கத்திலிருந்து நாம் சில விடயங்களை முன்வைக்க வேண்டும்.

முதலாவதாக தனியாள் மீது தங்கியுள்ள அதிகாரத்தைக் குறைக்க வேண்டும். நிறைவேற்று அதிகாரத்தைக் குறைக்க வேண்டும் என்பதையே வலியுறுத்துகின்றோம். இந்த நிறைவேற்று அதிகாரம் கொண்ட அரச தலைவர் முறைமையானது மக்கள் உரிமைகளைப் பறிந்துக்கொள்வதற்காக உருவாக்கப்பட்ட ஒன்றாகும்.

கடந்த 39 வருடங்களாக இந்தப் பதவியில் இருந்தவர்கள் பல அநாவசியமான செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளனர் என்பதையும் கருத்தில்கொண்டு அந்தத் திருத்தங்களைச் செய்ய வேண்டும்.

தேர்தல் முறைமை மாற்றத்தையும் அரசமைப்புக்கு உட்பட்டதாக முன்னெடுக்க வேண்டும். இந்த நாட்டில் பல்லின மக்கள் வாழ்கின்றனர். இது பல்லின தேசிய நாடாக மாற்றப்பட வேண்டும். அனைத்து இன மக்களினதும் மொழி உரிமையும் மற்றைய உரிமைகளும் சம அளவில் பாதுகாக்கப்பட வேண்டும்.

அடுத்த காரணம் இந்த விடயத்தை எவரும் இனவாதமாகப் பார்க்கவும் கூடாது. இனவாத அடிப்படையிலான விவாதங்களும் இந்த இடைக்கால் அறிக்கையின் மீது இடம்பெறக் கூடாது என்றார்.

(வ-5.31)

## பௌத்த மதத்துக்கான முன்னுரிமை பாதுகாக்கப்படும்

# தீர்வொன்றின் அடிப்படையிலேயே இடைக்கால அறிக்கை முன்வைப்பு

## தலைமை அமைச்சர் ரணில் உரை



யாழ்ப்பாணம், செப். 22
"புதிய அரசமைப்பின் ஊடாக பௌத்த மதத்துக்கான முன்னுரிமை பாதுகாக்கப்படும். பிரச்சினைகளைத் தோற்றுவித்து, பொருளாதாரத்தை சீர்குலைத்து மக்களிடையே பிரிவினைவாதத்தைத் தோற்றுவிக்க நாங்கள் இடமளிக்க மாட்டோம். தீர்வொன்றின் அடிப்படையிலேயே இன்று (நேற்று) நாங்கள் இந்த இடைக்கால அறிக்கையை சமர்ப்பிக்கின்றோம்"

இவ்வாறு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் நேற்று அறிவித்தார்.

புதிய அரசமைப்பை உருவாக்குவதற்கான வழிநடத்தல் குழுவின் இடைக்கால அறிக்கையை அரசமைப்பு நிர்ணய சபையான நாடாளுமன்றில் நேற்று முன்வைத்து உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இனம், மதம், மொழி என்பவற்றைத் துறந்து அனைவரும் இலங்கையர்களாக வாழும் வகையில் புதிய அரசமைப்பை உருவாக்கும் நோக்கில் இடைக்கால அறிக்கை முன்வைக்கப்படுகிறது.

### அரசமைப்பு உருவாக்கும் பணி தொடரும்

பொருளாதார வளர்ச்சியை அனைத்து சமூகங்களும் அனுபவிக்கும் வகையில் புதிய அரசமைப்பு உருவாக்கப்படவுள்ளது. சனநாயகத்தை விரிவுபடுத்தி அமைதி மற்றும் உறுதிப்பாட்டை பேணுவதே இதன் முதன்மை இலக்காகும். மூன்று பத்தாண்டு கால போரால் பாதிக்கப்பட்ட எமக்கு இதுபோன்றதொரு அரசமைப்பு கட்டாயம் தேவை. அரசியல் ரீதியாக மோதிக்கொண்ட எமக்கு இன்று சிறந்த சந்தர்ப்பமொன்று கிட்டியுள்ளது. புதிய அரசமைப்புக்கான இடைக்கால அறிக்கையானது நாட்டில் அனைத்து மட்டங்களிலும் கருத்தாடல்கள் இடம்பெறும் வகையில் இன்று (நேற்று) சபையில் சமர்ப்பிக்கப்படுகின்றது.

வழிநடத்தல் குழுவில் அனைத்துக் கட்சிகளின் பொது இணக்கப்பாட்டுடன் தயாரிக்கப்பட்டுள்ள இந்த இடைக்கால அறிக்கையைத் தொடர்ந்து கருத்தாடல்களுடன் புதிய அரசமைப்பை உருவாக்கும் பணியை முன்னெடுத்துச் செல்லவுள்ளோம்.

### கூட்டமைப்பின் நிலைப்பாடு

இடைக்கால அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள உடன்பாடுகள் தொடர்பில் தேசிய அரசின் இரண்டு முதன்மைக் கட்சிகளும் இணங்கினால் தாங்களும் அதற்கு இணங்குகின்றோம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கூறியுள்ளது.

அறிக்கையின் முதலாவது அத்தியாயத்தில் இலங்கை ஒருமித்த நாடாகப் பிரகடனப்படுத்தப்படும் என்று கூறப்பட்டுள்ளது. அத்துடன், அதிகாரப்பரவலாக்கம் முதன்மை அம்சமாக உள்ளடக்கப்பட்டுள்ளது.

அதிகாரப் பரவலாக்கலில் எமக்குள் எவ்வாறு பொது இணக்கப்பாட்டை ஏற்படுத்திக்கொள்வது என்று ஐக்கிய தேசியக் கட்சியும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் இணைந்து கலந்துரையாடித் தீர்மானிக்க வேண்டியுள்ளது. அதிகாரப் பரவலாக்கல் தொடர்பில் நாங்கள் ஏற்படுத்திக்கொள்ளும் இணக்கப்பாட்டிலேயே இந்த நாட்டின் எதிர்காலமும் தங்கியுள்ளது.

வரலாற்றுக் காலந்தொட்டு நிலவிவரும் பிரிவினைவாதங்களையும் வைராக்கியங்களையும் மறந்து ஒருமித்த நாட்டுக்குள் அதிகாரப் பரவலாக்கலை ஏற்படுத்திக்கொள்ள அனைத்து இலங்கையர்களும் தயார். அதேபோல் அதியுச்ச அதிகாரப்பகிர்வையும் வழங்கத் தயாராகவுள்ளனர். அதன் அர்த்தமாவது அனைத்து இலங்கையர்களும் அமைதியுடன் ஒன்றிணைந்து வாழ்வதாகும்.

சந்தர்ப்பத்தை தவறவிடக்கூடாது
வரலாற்றில் இருந்த பிரிவினைவாதத்திலிருந்து விலகி எதிர்காலத்தை நோக்கிய புதிய திசைக்குப் பயணிப்பதே புதிய அரசமைப்பின் நோக்கமாகும். மூன்று பத்தாண்டு காலம் நாங்கள் கனவிலும் நினைக்காத அளவுக்குப்பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்க நேரிட்டது. தற்போது முன்னோக்கிப் பயணிக்கப் பொது மேடையொன்று கிடைத்துள்ளது.

அமைதி மற்றும் அரசியல் உறுதிப்பாட்டை ஏற்படுத்திக்கொள்ளச் செய்யப்படும் இந்த அர்ப்பணிப்புகளில் இலங்கையின் எதிர்கால சந்ததியினர் அமைதியுடன் வாழ்வதற்கான வழி ஏற்படும். இந்தப் பெறுமதி வாய்ந்த சந்தர்ப்பத்தை நழுவவிடக் கூடாது. எமது சனநாயகத்தில் வைராக்கியத்துக்கு ஒருபோதும் இடமளிக்கமாட்டோம். அதேபோல் எதிர்காலத்திலும் இதற்குச் சந்தர்ப்பமளிக்கக்கூடாது.

### பௌத்த மதத்துக்கு முன்னுரிமை

புதிய அரசமைப்பின் ஊடாக பௌத்த மதத்துக்கான முன்னுரிமை பாதுகாக்கப்படும். பிரச்சினைகளைத் தோற்றுவித்து, பொருளாதாரத்தை சீர்குலைத்து மக்களிடையே பிரிவினைவாதத்தைத் தோற்றுவிக்க நாங்கள் இடமளிக்க மாட்டோம். தீர்வொன்றின் அடிப்படையிலேயே இன்று (நேற்று) நாங்கள் இந்த இடைக்கால அறிக்கையை சமர்ப்பிக்கின்றோம்.

பொருளாதார ரீதியில் பிரதேசங்கள் அபிவிருத்தியடைவதில் அதிகாரப்பகிர்வு முன்னிலை பெறுகின்றது. அதிகாரப்பகிர்வை மேற்கொள்ள அனைத்து மாகாணங்களும் இணக்கத்தை வெளியிட்டுள்ளன. இடைக்கால அறிக்கையில் உள்ளூராட்சி சபைகள் அரச ஆட்சியில் மூன்றாவது அங்கமாகக் கணிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் அரச சேவை களை மேலும் இலகுவில் பெற்றுக்கொள்ள வழிவகுக்கமுடியும்.

எனினும், நிறைவேற்று அதிகார முறைமையில் இணக்கப்பாட்டுக்கு வரக்கூடிய பல விடயங்கள் மற்றும் அதன் அர்த்தங்களை விளக்கப்படுத்துவதில் இன்னும் பல்வேறு விடயங்களைக் கலந்துரையாட வேண்டியுள்ளது. அரச தலைவரின் ஆசியுடனேயே இவை மேற்கொள்ளப்படுகின்றன.

இடைக்கால அறிக்கையில் சுயாதீன குழுக்களில் பல மாதங்களாக விவாதத்துக்கு உட்படுத்தப்பட்ட விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன், அரச தலைவரின் முழுமையான ஆசியும் இதற்குக் கிடைக்கப்பெற்றுள்ளது. இது வரலாற்றுச் சந்தர்ப்பமாகும். பேதங்களுடனும் வைராக்கியங்களுடனும் வாழ்ந்த சமூகங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த அரசும் எதிர்க்கட்சிகளும் ஒன்றிணைந்துள்ளன.

அனைவருக்கும் பொருளாதார அபிவிருத்தியையும் அமைதியையும் பெற்றுக்கொடுக்கும் எண்ணம் இணக்கப்பாடாக எட்டப்பட்டுள்ளது. ஆறு உபகுழுக்களின் அறிக்கையும், இடைக்கால அறிக்கையும் விவாதத்துக்கு எடுக்கப்படுகின்றன. இறுதியில் முழு நாட்டுக்கும் ஏற்புடைய புதிய அரசமைப்பொன்று உருவாக்கப்படும்.

### உச்சப்பட்ச அதிகாரப் பகிர்வு

பிரிவினைவாதத்துடனும் சர்வாதிகாரத்துடனும் முன்னெடுத்த ஆட்சியின் காரணமாக எமது நாடு பாரதூரமான பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்க நேரிட்டது. பிரிவினைவாதத்துக்கு வித்திட்டதால் பன்னாட்டு ரீதியில் இலங்கைக்கு இருந்த நற்பெயரும் இல்லாதுபோனது. ஆனால், மீண்டும் நாங்கள் சனநாயகத்தை மறுசீரமைத்து மக்களுக்கு சுதந்திரத்தை வழங்கியதுடன், ஊடகச் சுதந்திரத்தையும் ஏற்படுத்தினோம்.

தற்போதைய அரசு இலங்கையின் அனைத்து மக்களும் பயனை அனுபவிக்கும் வகையில் வெளிப்படையான அதிகாரப்பகிர்வை வழங்கும். ஐக்கியத்துடன் அனைவரும் அமைதியாக வாழும் வகையில் புதிய அரசமைப்பின் ஊடாக உச்சபட்ச அதிகாரப்பகிர்வு வழங்கப்படும். இதற்குச் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் இணங்கியுள்ளது - என்றார்.

(5.31)

# சைட்டத்துக்கு எதிராக வலுக்கும் போராட்டம்

## மருத்துவர்கள், தொழிற்சங்கங்கள் நேற்று ஆதரவு

யாழ்ப்பாணம், செப்.22

மாலபே தனியார் மருத்துவக் கல்லூரிக்கு எதிர்ப்புத் தெரிவித்து அரச மருத்துவர்கள் உட்பட பல்வேறு தொழிற்சங்கங்களும் நேற்று நாடளாவிய ரீதியில் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டன. அதனால் மருத்துவமனை, பாடசாலை மற்றும் பல்கலைக்கழகங்கள் என்பவற்றின் நாளாந்த நடவடிக்கைகள் பெரிதும் பாதிப்படைந்தன எனத் தெரிவிக்கப்பட்டது.

மருத்துவர்களின் பணிப்புறக்கணிப்பால், மருத்துவமனையின் வெளிநோயாளர் பிரிவு மற்றும் மருத்துவப் பராமரிப்பு நிலையம் என்பன செயற்படவில்லை. அவசர சிகிச்சைப் பிரிவுகள் மட்டும் செயற்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டது.

மருத்துவமனைகளுக்குச் சிகிச்சை பெறச் சென்ற நோயாளர்கள் ஏமாற்றத்துடன் வீடு திரும்பினர். அதேவேளை கல்வி மற்றும் மருத்துவத் தொழிற்சங்கங்களும் நேற்றுப் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர். தொழிற்சங்கங்களுக்கு முன்பாகக் கறுப்புக் கொடிகளைப் பறக்க விட்டு அவர்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர். "சைட்டம் தொடர்பில் அரசு நியமித்த குழு ஆராய்ந்து சமர்ப்பித்த அறிக்கையில் பல தவறுகள் உள்ளன. இலவசக் கல்வியைத் தனியார் மயப்படுத்துவதை எதிர்த்து நாம் 2009 ஆம் ஆண்டிலிருந்து போராடி வருகின்றோம். அரசு எமக்குத் தீர்வு தரவில்லை. மாறாக பொது மக்களைப் பலிக்கடா வாக்குகின்றது. தீர்வு தரும்வரை நாம் தொடர்ந்து போராடுவோம்" என்று அரச மருத்து அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது. (ஐ)

## முல்லைத்தீவு நகர் கடற்கரையில் தூய்மைப்படுத்தல் நிகழ்வு நேற்று



தேசிய கரையோர மற்றும் கடல்வளங்களின் பாதுகாப்பு வாரத்தை முன்னிட்டு முல்லைத்தீவு நகர் கடற்கரையில் கரையோர தூய்மைப்படுத்தல் நிகழ்வு நேற்று முன்னெடுக்கப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களால் முன்னெடுக்கப்பட்ட இந்த வேலைத் திட்டத்தில் வடக்கு மாகாண சுற்றாடல் அமைச்சர் கந்தையா சிவநேசன் , முல்லைத்தீவு மாவட்ட செயலர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், பிரதேச செயலாளர்கள், முப்படை அதிகாரிகள், இராணுவத்தினர் , சமூக சேவகர்கள், மாவட் டச் செயலக அதிகாரிகள், பாடசாலை மாணவர்கள் ஆகியோர் கலந்துகொண்டு கரையோரப்பகுதியில்உள்ள கழிவு களை அகற்றி தூய்மைப்படுத்தும் வேலையில் ஈடுபட்டனர். (10)

## நீர்வேலி இந்துவின் பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம் நீர்வேலி இந்துக்கல்லூரியின் நிறுவுனர் தினமும் பரிசளிப்பு விழாவும் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரி பிர தான மண்டபத்தில் நடைபெறும். கல்லூரியின் முதல்வர் கு.ரவிச்சந்திரன் நிகழ்வுக்கு தலைமை தாங்குவார். முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண கல்வி அமைச்சர் க.சர்வேஸ்வரன் கலந்துகொள்ளவுள்ளார். (ய-ரி)

## வடக்குப் பண்பாட்டுப் பெருவிழா தெல்லியூர் யூனியன் கல்லூரியில்

வடக்கு மாகாணப் பண்பாட்டுப் பெருவிழா தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் இன்று வெள்ளிக்கிழமை, ஆரம்பமாகி மூன்று தினங்கள் நடைபெறவுள்ளது.


பி.ப.3மணிக்கு மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் தலைமையில் விழா ஆரம்பமாகும். முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண கல்விபண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் க.சர்வேஸ்வரன் கலந்துகொள்ளவுள்ளார்.

நாளை 23ஆம் திகதி சனிக்கிழமை பி.ப. 3மணிக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி வனஜா செல்வரட்ணம் தலைமையில் நிகழ்வு நடைபெறும்.

முதன்மை விருந்தினராக மாகாண மகளிர் விவகாரம், புனர்வாழ்வளித்தல், சமூக சேவைகள், கூட்டுறவு அமைச்சர் அனந்தி சசிதரன் கலந்து கொள்ளவுள்ளார்.

நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பி.ப.2மணிக்கு வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் இ.இரவீந்திரன் தலைமையில் விழா நடைபெறும்.

முதன்மை விருந்தினராக வடக்குமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளனர். (ய)



## வறட்சி உதவிகள் கோரி மக்கள் மனுக் கையளிப்பு

கிளிநொச்சி, செப்.22

வறட்சி உதவி வழங்குமாறு கோரி, கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கண்ணகிநகர் மேற்கு பிரதேச மக்கள், பிரதேச செயலர் மற்றும் மாவட்டச்செயலருக்கு நேற்று நேரடியாகச் சென்று மனுக்களைக் கையளித்தனர்.

"கடந்த சில மாதங்களாக கிளிநொச்சியில் நிலவிய கடும் வறட்சியால், எங்களது கிராமமும் பாதிப்புக்குள்ளாகியிருந்து. ஆனால் மாவட்டத்தின் ஏனைய கிராமங்களுக்கு வழங்கப்பட்டது போன்று, எங்களது கிராமத்துக்கு வறட்சி நிவாரணம் வழங்கப்படவில்லை. இங்கு 85 வரையான குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. மீள்குடியமர்வின் ஆரம்பத்தில் வழங்கப்பட்ட உதவித் திட்டங்களைத் தவிர வேறு எதுவும் இது வரை கிடைக்கவில்லை, கிராமத்தின் உட்கட்டுமான வசதிகள் மிகமோசமாக இருக்கின்றன. வறுமையை எதிர்கொண்டுள்ள எமது கிராமத்துக்கு உடனடியாக வறட்சி நிவாரணம் வழங்கப்பட வேண்டும்" என்று கண்ணகிநகர் மக்கள் பிரதிநிதிகள் தெரிவித்தனர். (ஐ-10)

## சிறுவர் விளையாட்டு விழா இன்று

யாழ்ப்பாணம், செப்.21

கொக்குவில் பொதுநூலக சிறுவர் பகுதியில் ஆண்டு எட்டுக்கு உட்பட்ட மாணவர்களுக்கான சிறுவர் உள்ளக விளையாட்டுகள் இன்று வெள்ளிக்கிழமை பி.ப.3.15 மணிக்கு ஆரம்பிக்கப்படவுள்ளன.

இதில் அனைத்து சிறுவர்களையும் கலந்துகொண்டு பயன்பெறுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ய)

## அபிவிருத்திகளை அடையாளப்படுத்தல்: இன்று சங்கத்தானையில் கலந்துரையாடல்

சாவகச்சேரி, செப்.22

சாவகச்சேரி நகரசபையால் அபிவிருத்திகளை அடையாளப்படுத்தல் மற்றும் முன்னுரிமைப்படுத்தல் தொடர்பானமக்களுடனானகலந்துரையாடல் இன்று சங்கத்தானைப் பகுதி (ஜே/302)யில் நடைபெறவுள்ளது.

பி.ப.2.30 மணிக்கு சங்கத்தானைசாரதாபொதுமண்டபத்தில் கலந்துரையாடல் இடம்பெறுமென சபையின் செயலாளர் கா.சண்முகதாசன் அறிவித்துள்ளார்.

மக்கள் தமது பகுதியில் மேற்கொள்ள வேண்டிய அபி விருத்தி வேலைகளை அடையாளப்படுத்தி கலந்துகொள்ளுமாறும் அவர் கேட்டுள்ளார்.

இதேவேளை, கல்வயல், கோவிற்குடியிருப்பு,மீசாலை கிழக்கு, சாவகச்சேரிவடக்கு மற்றும் மண்டுவில் ஆகிய வட்டாரங்களுக்கானகலந்துரையாடல்கள் ஏற்கனவே நடத்தி முடிக்கப்பட்டுள்ளன என்றும்அவர்தெரிவித்தார். (ய-9)



வவுனியா சிவபுரத்தில் பொது நூலகம் நேற்றுக் காலை திறக்கப்பட்டது. மாணவர்களுக்கான வாசிப்பு உபகரணங்கள் பிரதேச செயலரால் வழங்கப்பட்டன. நிகழ்வின் இறுதியில் தெமட்ட எனும் மரக்கன்று விருந்தினர்களால் நூலக வளாகத்தில்நடப்பட்டது.

கிராம அபிவிருத்திச்சங்கத்தலைவர் குணபாலன் தலைமையில் நிகழ்வு நடைபெற்றது. வவுனியா பிரதேச செயலர் கா. உதயராஜா, வவுனியா தெற்கு வலயக் கோட்டக் கல்விப்பணிப்பாளர் எம். பி. நடராஜ், மாதர் அபிவிருத்திச்சங்கம், கிராம அபிவிருத்திச்சங்கம், பொதுமக்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (ஐ-10)

## சட்ட விரோதமாக மணல் ஏற்றிய இருவர் கைது


கிளிநொச்சி, செப் 22

தருமபுரம் பகுதியில் அனுமதிப்பத்திர நிபந்தனைகளை மீறி மணல் ஏற்றிய குற்றச்சாட்டில் இருவர் டிப்பர் வாகனங்களுடன் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டனர்.

கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபரின் சிறப்புப் பிரிவினர் இவர்களைக் கைதுசெய்தனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் இருவரும் மேலதிக விசாரணை மற்றும் நீதிமன்ற நடவடிக்கைக்காக தருமபுரம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். (ய-6)

## 17 முதிரைமரக் குற்றிகளுடன் நெத்தலியாறில் இருவர் கைது



கிளிநொச்சி, செப். 22

புதுக்குடியிருப்பில் இருந்து தருமபுரத்துக்கு கடத்திச் செல்லப்பட்ட17 முதிரை மரக்குற்றிகள் கைப்பற்றப்பட்டுள்ளன. அத்துடன் இரு சந்தேக நபர்களும் கைதுசெய்யப்பட்டனர் என்று கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களின் பிரதிப் பொலிஸ்மா அதிபரின் சிறப்புப் பிரிவினர் தெரிவித்தனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை நெத்தலியாறுப் பகுதியில் வைத்து இவை கைப்பற்றப்பட்டுள்ளன.

கைதுசெய்யப்பட்ட சாரதியும் உதவியாளரும் மேலதிக விசாரணை மற்றும் நீதிமன்ற நடவடிக்கைக்காக தருமபுரம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். (ய-6)

## மாகாண மீன்பிடி அமைச்சருடன் முல்லை. மீனவர்கள் சந்திப்பு

முல்லைத்தீவு: செப்.22

வடக்கு மாகாண மீன்பிடி அமைச்சர் கந்தையா சிவனேசனுக்கும், முல்லைத்தீவுமாவட்ட மீனவசங்கப்பிரதிநிதிகளுக்குமிடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் காலை முல்லைத்தீவு மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

மீன்பிடி அமைச்சராகக் கடமைகளைப் பொறுப்பேற்ற சிவநேசன் மீனவர்களின் பிரச்சினைகள் தொடர்பில் கேட்டறிவதற்காக இந்தச் சந்திப்பை ஏற்பாடு செய்திருந்தார்.

சந்திப்பில் அமைச்சருடன், அமைச்சின் செயலாளர், கடற்றொழில் நீரியல்வள திணைக்களத்தின் உதவிப்பணிப்பாளர், புதுக்குடியிருப்பு மற்றும் கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர்கள் மற்றும் மீனவ அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (ய-21)



# அனைவரும் ஏற்கும் தனித்துவமான அரசமைப்பை உருவாக்கவேண்டும்

## மு.கவின் எதிர்பார்ப்பை அறிவித்தார் ஹக்கீம்

யாழ்ப்பாணம், செப். 22

"புதிய அரசமைப்பை உருவாக்கும் வழிநடத்தல் குழுவுக்கு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸால் முன்வைக்கப்பட்ட சில யோசனைகள் நிராகரிக்கப்பட்டுள்ளன. அனைவரும் கொண்டாடக்கூடிய தனித்துவமான ஆவணமாக புதிய அரசமைப்பு இருக்க வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும்"

இவ்வாறு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்,

புதிய அரசமைப்புக்கான வழிநடத்தல் குழுவின் இடைக்கால அறிக்கை நாடாளுமன்றத்தில் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவால் நேற்று முன்வைக்கப்பட்டதையடுத்து சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் நிலைப்பாட்டை வெளிப்படுத்துகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

புதிய அரசமைப்புக்கான வழிநடத்தல் குழுவின் இடைக்கால அறிக்கையை உருவாக்குவதில் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க சிறந்த தலைமைத்துவத்தை வழங்கியுள்ளார். யோசனைகளை வழங்க அனைத்துக் கட்சிகளுக்கும் போதிய காலம் வழங்கப்பட்டது. பல்வேறு கட்சிகளின் கருத்துக்களை உள்ளடக்கியதாக இந்த அறிக்கை உள்ளது. வழிநடத்தல் குழுவின் ஒன்றுகூடலின்போது நாங்கள் பல யோசனைகளை முன்வைத்திருந்தோம். சில கட்சிகள் சமூகங்களுக்கு இடையில் பாகுபாடுகளை ஏற்படுத்தும் வகையில் கருத்துகளை முன்வைத்திருந்தன.

புதிய அரசமைப்புத் தொடர்பில் பல கட்சிகளும் பல்வேறு நிலைப்பாடுகளைக் கொண்டுள்ளன. அதிகமான செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டியுள்ளதால் இந்தப் பணியைத் துரிதப்படுத்த வேண்டும். அனைத்து சமூகங்களும் கொண்டாடக்கூடிய வகையில் புதிய அரசமைப்பு அமைய வேண்டும். வழிநடத்தல் குழுவுக்கு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பல்வேறு யோசனைகளை முன்வைத்திருந்தது. சில யோசனைகள் இதில் நிராகரிக்கப்பட்டுள்ளன - என்றார். (வ-5,31)

# பௌத்தத்துக்கான முன்னுரிமையை நீக்க ஆதரவளிக்கமாட்டாராம் மனோ

யாழ்ப்பாணம், செப். 22

பௌத்த மதத்திற்கு வழங்கப்பட்டுள்ள முன்னுரிமையை நீக்குவதற்கு நாம் ஆதரவு வழங்க மாட்டோம் என்று அமைச்சர் மனோ கணேசன் நாடாளுமன்றில் நேற்றுத் தெரிவித்தார்.

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவால் முன்வைக்கப்பட்ட வழிநடத்தல் குழுவின் அறிக்கை தொடர்பில் மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் தினேஸ் குணவர்த்தன உரையாற்றினார்.

'பௌத்த மதத்துக்கான முன்னுரிமை இல்லாமல் செய்வதற்கு நாம் இடமளிக்க மாட்டோம்' என்று அவர் உரையாற்றிக் கொண்டிருக்கும்போது, தற்போது உங்களின்நேரம்நிறைவடைந்துவிட்டது. அமருங்கள் என்று சபாநாயகர் கரு ஜயசூரிய கூறினார்.



"54 உறுப்பினர்களின் சார்பாக நான் கதைக்கின்றேன். எனக்கு இடம் வழங்குங்கள். இப்போது எனக்கு நீங்கள் தடைவிதிப்பது நியாயமில்லை. எனக்கு இறுதியாக உரையாற்ற இடம் வழங்குகின்றீர்கள்" என்று நாடாளுமன்ற உறுப்பினர் தினேஸ் குணவர்த்தன காரசாரமாகக் குறிப்பிட்டார்.

இதன்போது தனக்கு பேச சந்தர்ப்பம் வழங்குமாறு அமைச்சர் மனோ கணேசன் கூறியதை அடுத்து சபாநாயகர் கரு ஜயசூரிய சந்தர்ப்பம் வழங்கினார்.

"நானும் வழிநடத்தல் குழுவின் உறுப்பினர். எனக்குப் பேசச் சந்தர்ப்பம் வழங்காவிடின் நான் பிரதிநிதியாக இருப்பதில் பயனில்லை. இன்று (நேற்று) சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை இறுதித் தீர்மானம் அல்ல. அது தினேஸுக்கும் தெரியும். எனினும் தற்போது இணக்கப்பாட்டுக்கு வந்துள்ள விடயங்களில் பௌத்த மதத்துக்கான முன்னுரிமையும் ஒன்றாகும். நாம் பௌத்த மத முன்னுரிமைய்யை நீக்கமாட்டோம்" என்றார்.

இதன்போது ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் மேசையில் தட்டி ஆரவாரமிட்டனர். (வ-5,31)

# ஒற்றையாட்சிக்கு மொழி ரீதியாக வேறுபட்ட பொருள் கூறி நாடகம்

## கடுமையாகச் சாடுகிறது மகிந்த அணி

யாழ்ப்பாணம், செப். 22

"ஒற்றையாட்சி என்ற பதத்துக்கு ஆங்கிலத்தில் ஒரு பொருளும் தமிழில் வேறு பெயரும் சூட்டும் நாடகத்துக்கு இடமளிக்க முடியாது. எங்களுக்கு சிங்களம், தமிழ், ஆங்கிலம் மூன்று மொழியும் தெரியும். இடைக்கால அறிக்கையின் ஊடாக த்தலைமை அமைச்சர் முன்வைத்த யோசனைக்கும் கூட்டு எதிர்க்கட்சி, மக்கள் விடுதலை முன்னணி, சிறிலங்கா சுதந்திரக் கட்சி முன்வைத்த கருத்துக்கும் இடையே பெரும் கருத்து வேறுபாடுகள் உள்ளன"

இவ்வாறு மகிந்த அணியின் நாடாளுமன்ற உறுப்பினர் தினேஸ் குணவர்த்தன தெரிவித்தார்.

இடைக்கால அறிக்கை முன்வைக்கப்பட்ட பின்னர் நாடாளுமன்றத்தில் உரையாற்றுக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசமைப்பைத் தயாரிப்பதற்கான வழிநடத்தல் குழு பல மாதங்கள், பல தடவைகள் கூடியது. நாம் முன்வைத்த கருத்துக்கள், மக்கள் விடுதலை முன்னணி, சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் முன்வைத்த கருத்துக்களுக்கும் தலைமை அமைச்சரின் கருத்துகளுக்கும் இடையில் பெரும் கருத்து வேறுபாடுகள் உள்ளன.

அரசமைப்பின் போது மக்களின் கருத்துக்கள் பெறப்பட வேண்டும் என்று எப்போதும் தலைமை அமைச்சர் கூறினாலும் வழிநடத்தல் குழுவின் இடைக்கால அறிக்கையின் பிரகாரம் மக்கள் கருத்தறியும் குழுவின் ஊடாக முன்வைக்கப்பட்ட மக்களின் கருத்து என்று கூறப்பட்ட விடயங்கள் உண்மையான மக்களின் கருத்துக்கள் அல்ல. அது முற்றிலும் மக்களின் கருத்துகள் அன்றி அரச சார்பற்ற அமைப்புகளின் கருத்தாகும்.

இடைக்கால அறிக்கையில் ஒருமித்த நாடு என்ற பதம் ஆங்கில மொழியில் வேறாகவும் தமிழ் மொழியில் வேறாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. எங்களுக்கு ஆங்கிலமும் தெரியும். தமிழும் தெரியும். எங்களை ஏமாற்ற முனைய வேண்டாம்.

54 உறுப்பினர்களைக் கொண்ட மகிந்த அணியினது யோசனைகள் எதுவும் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. பௌத்த மதத்துக்கான முன்னுரிமை நீக்குவதற்கு இடமளிக்க முடியாது. நாம் நாடாளுமன்ற சனநாயகத்தை மதிக்கின்றோம். மகிந்த ராஜபக்சவின் தலைமையில் தமிழ், முஸ்லிம், மலையக மக்களின் உரிமை வழங்குவோம் - என்றார். (வ-5-31)

# பூந்தோட்டம் பாடசாலையில் நவராத்திரி தினம் சிறப்பு

வவுனியா, செப்.22

நவராத்திரி தினத்தை முன்னிட்டுவவுனியாபூந்தோட்டம் மகாவித்தியாலயத்தில் நேற்று நவராத்திரி விழா சிறப்பாக நடைபெற்றது.

பாடசாலை வளாகத்தில் அமைந்திருக்கும் வித்தியா விநாயகர் ஆலயத்தில் காலை 7.30 மணிக்கு பூசைகள் நடைபெற்றன. வழிபாடுகளுடன் சிறப்புச் சொற்பொழிவுகளும் இடம் பெற்றன.

கல்லூரி அதிபர் திருமதி கிருஸ்ணவேணி நந்தபாலன் தலைமையில் விழா நடைபெற்றது.

மாவட்ட சமூகசேவை உத்தியோகத்தரும் சொற்பொழிவாளருமான இன்தமிழ் இனியன் செ.ஶ்ரீநிவாசன் அதிதியாகக் கலந்துகொண்டு, நவராத்திரியின் பெருமை என்ற தலைப்பில் சிறப்புரை நிகழ்த்தினார் .

அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ் கே.வசந்தன், பாடசாலை பிரதி அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் எனப்பலரும் இதில் கலந்துகொண்டனர்.

நிகழ்வுக்கான ஏற்பாடுகளை கல்லூரி இந்துமாமன்றம் முன்னெடுத்திருந்தது. (ய)

# உழவியந்திரத்தை மோதித்தள்ளிய டிப்பர்: ஒரே குடும்பத்தில் மூன்றுபேர் படுகாயம்

## சாரதி தலைமறைவு: நெடுங்கேணியில் சம்பவம்

முல்லைத்தீவு, செப்.22

முள்ளியவளைப்பகுதியில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற விபத்தில் ஒரேகுடும்பத்தை சேர்ந்த மூவர் காயமடைந்தனர்.

முள்ளியவளை நெடுங்கேணி சாலையின் 7ஆம் கட்டைப்பகுதியில் உழவு இயந்திரத்தில் மண் ஏற்றிக்கொண்டு தந்தை மற்றும் இரண்டு மகன்கள் முள்ளியவளை நோக்கிப் பயணித்தனர். அவ்வேளையில் பின்னால் சாலையில் வேகமாக வந்த டிப்பர் உழவியந்திரத்தை முந்திச் செல்லமுற்பட்டது. அப்போது உழவியந்திரத்தின் பெட்டியில் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

சம்பவத்தில் முள்ளியவளை 3ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை இராசரெட்ணம் (வயது-62) இராசரட்ணம் கேதீஸ்வரன் (வயது-32) இராசரட்ணம் விதுசன் (வயது-25) ஆகியோர் படுகாயமடைந்தனர்.



இவர்கள் மாஞ்சோலை மருத்துவமனையில் சேர்க்கப் பட்டுள்ளார்கள்.

சம்பவத்துடன் தொடர்புடைய டிப்பர் சாரதி தப்பிச் சென்றுள்ளார்.

விபத்து இடம்பெற்ற இடத்தில் குவிந்த பிரதேச இளைஞர்கள் டிப்பர் சாரதியைத் தேடியுள்ளார்கள். இதனால் அங்கு சற்று பதற்ற நிலை ஏற்பட்டது.

இந்த சம்பவம் குறித்துப் பிரதேச வாசிகள் தெரிவித்ததாவது:

நெடுங்கேணி வாரிவண்ணான் எனும் பகுதியிலிருந்து கிரவல் அகழப்படுகின்றது. வெளிமாவட்டத்தைச் சேர்ந்தவர்களே கிரவல் அகழ்வு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். இரவு நேரத்தில் இந்த சாலையில் டிப்பர் பயணிப்பதற்கு யார் அனுமதி கொடுத்தார்கள் எனத் தெரியவில்லை. குறித்த இடத்தில் கிரவல் அகழ்வதற்கு அனுமதி இல்லை. ஆனாலும் சட்டவிரோதமாக இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ய-ரி3)



# வண்ணை வரதராஜர் பெருந்திருவிழா இன்று

யாழ்ப்பாணம், செப்.22

வண்ணை ஶ்ரீவேங்கடேச வரதராஜப்பெருமாள் ஆலய பெருந்திருவிழா இன்று வெள்ளிக்கிழமை மு.ப.10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 30 ஆம்திகதி சனிக்கிழமை காலை 7 மணிக்கு தேர்த்திருவிழாவும், மறுநாள் முதலாம்திகதி ஞாயிற்றுக்கிழமை தீர்த்தத்திருவிழாவும் நடைபெறவுள்ளது. (ய)

# குறிகாட்டுவான் பொலிஸ் காவலரண் இன்று திறப்பு

யாழ்ப்பாணம், செப்.22

புங்குடுதீவு குறிகாட்டுவான் பகுதியில் அமைக்கப்பட்ட உப பொலிஸ் நிலையம் இன்று வெள்ளிக்கிழமை காலை பத்து மணிக்கு திறந்துவைக்கப்படவுள்ளது.

தீவக சிவில் சமூகம், புங்குடுதீவு உலகமையம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் நிகழ்வு நடைபெறும்.

ஊர்காவற்றுறை, வட்டுக்கோட்டை மற்றும் நெடுந்தீவு உதவி பொலிஸ் அத்தியட்சகர் சரித்த ஜயசுந்தர பொலிஸ் நிலையத்தைத் திறந்துவைப்பார்.

இந்த பொலிஸ் உப பொலிஸ் நிலையத்தில் பொறுப்பதிகாரி உட்பட 13 பொலிஸ் உத்தியோகத்தர்கள் கடமையிலீடுபவர். விரைவில் இதனை 25ஆக அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ய)




வடக்கில் பல இடங்களில் எச்சரிக்கை வெளிச்சம் மற்றும் எச்சரிக்கை ஒலி எழுப்பும் கருவி பொருத்தப்பட்ட பாதுகாப்பற்ற கடவைகளுக்கு இலங்கைத் தொடருந்துத் திணைக்களத்தினரால் எச்சரிக்கை அறிவிப்புப் பலகைகள் பொருத்தப்பட்டுள்ளன. (9)

## வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த தொழில்தர வேலை மேற்பார்வையாளர்

# 37 பேர் பணிநீக்கம்

## சம்பள நிலுவையும் வழங்கப்படவில்லை

யாழ்ப்பாணம், செப்.22

..க்கு மாகாணக் கல்வியமைச்சு மற்றும் வலயக்கல்விக் காரியாலங்களில் நியமித்த வேலைமேற்பார்வையாளர்களாகக் கடமையாற்றி வந்த 37 பேரை மாகாணக் கல்வி அமைச்சு பணிநீக்கம் செய்துவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பல மாதங்களாக சம்பள நிலுவை உள்ள நிலையில் எவ்வித முன் அறிவித்தலுமின்றி தாம் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர் என பாதிக்கப்பட்டவர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

கல்வி அமைச்சின்கீழ் கடந்த இரண்டு வருடங்களாக தொடர்ச்சியாக பணியாற்றி வருகின்றோம். எங்களது பணி கடந்த 4 ஆம் திகதியுடன் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

மீண்டும் மேற்படி பதவிக்கு ஆள்களை உள்ளீர்ப்பதற்கு பத்திரிகைகளில் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மேற்படி விளம்பரத்தில் கோரப்பட்ட கல்வித்தகைமையானது தொழில்நுட்ப உத்தியோகத்தருக்கு உரியதாக காணப்பட்டது. அத்துடன் தொழிலாளர்தர வேலை மேற்பார்வையாளர்களுக்கு மேற்பட்டதாகவும் இருந்தது

கல்வி அமைச்சால் கோரப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரிகளில் பயிற்சிநெறிகளை பயில்பவர்களுக்கான விண்ணப்பத்தில், விண்ணப்பதாரர்கள் மேற்படி துறைசார்ந்த நிறைவுசெய்த ஏனைய கற்கைநெறி மற்றும் தொழில்சார் முன் அனுபவம் சம்பந்தமாக கோரப்படவில்லை. தொழிலாளர்தர வேலை மேற்பார்வையாளராகப் பணியாற்றுவதற்குரிய கல்வித்தகைமைகளை நாம் கொண்டுள்ளோம்.

இருந்தபோதும், கல்வி அமைச்சால் கோரப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் அடிப்படையில் அதே கல்வித்தகைமை உடைய ஏனையோருக்கு நேர்முகத் தேர்வு இடம்பெற்றது. எமக்கு நேர்முகத் தேர்வு இடம்பெறவில்லை. எமது கல்வித் தகைமையைக் கொண்டிருந்த ஏனையோருக்கு நேர்முகத்தேர்வு இடம்பெற்றதும் குறிப்பிடத்தக்கது.

குறித்த துறையில் 2வருட அனுபவம் எமக்கு இருக்கின்றது. எனினும், கோரப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் மூலம் நாம் நிராகரிக்கப்பட்டுள்ளோம்.

கடந்த இரண்டு வருடங்களாக சீரற்ற முறையில் சம்பளம் வழங்கப்பட்டது. எமது குடும்ப சூழ்நிலையையும் பொருட்படுத்தாது, நேரப்பாகுபாடு இன்றி இரவு பகலாக உழைத்தோம். எந்தவொரு மேலதிக கொடுப்பனவுகளையும் எதிர்பாராமல் எமது பணியை திறம்பட ஆற்றியுள்ளோம்.

மேற்படி காலத்தில் பணியாற்றியதற்கான சம்பள நிலுவைகள் இன்றுவரை வழங்கப்படவில்லை. அதற்கான நடவடிக்கைகளும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை. ஆனால், அதேபதவிக்கு புதியவர்களை நியமிப்பதற்கு நேர்முகத் தேர்வு இடம்பெற்றுள்ளது. இது எந்தவகையில் நியாயமானது. இதுதொடர்பாக கல்வி அமைச்சருக்குத் தெரியப்படுத்தியும் இதுவரை நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை என பாதிக்கப்பட்டவர்கள்தரப்பில்தெரிவிக்கப்பட்டது.

இதுதொடர்பாக வடக்கு மாகாணக் கல்வி அமைச்சர் மற்றும் செயலாளருடன் பலமுறை தொடர்புகளை ஏற்படுத்திய போதும் அது பயனளிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ய-8)

## வடக்கு தாதியச் சகோதரிகள் பதவிகளைஏற்பதில்தாமதம்;

யாழ்ப்பாணம், செப்.22

சேவைமூப்பு அடிப்படையில் பதவி உயர்வு வழங்கப்பட்டது. எனினும் நியமனத்தைப் பொறுப்பேற்பதற்குமுடியவில்லை. நிறுவனத் தலைவர்களால் நாம் இன்னமும் விடுவிப்பு செய்யப்படவில்லை என பதவியுயர்வுபெற்றதாதியர்கள் தெரிவித்தனர்.

வடக்கு மாகாண சுகாதார நிறுவனங்களில் கடமையாற்றும் தாதிய அலுவலர்கள் விடுதிச் சகோதரிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதற்காகவடக்குமாகாண சுகாதார திணைக்களத்தினால் விண்ணப்பங்கள் கோரப்பட்டன.

சேவைமூப்பு அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்ட 30 ஆண், பெண் தாதிய அலுவலர்கள்கடந்த14ஆம் திகதி (14.09.) தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் விடுதிச்சகோதரிகளாக நியமிக்கப்பட்டனர்.

மன்னார் மாவட்டத்திற்கு 7 பேரும், யாழ்ப்பாணம் மற்றும்வவுனியாமாவட்டங்களுக்குத்தலா6பேர்வீதமும், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்குத் தலா 5 பேர் வீதமும் விடுதிச் சகோதரிகளாக நியமிக்கப்பட்டனர். வடக்கு மாகாண மருத்துவமனைகளில் ஏற்கனவே தாதிய அலுவலர்களுக்குப் பற்றாக்குறை காணப்படுகின்றது. இந்த நிலையில் சில மருத்துவமனைகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட தாதிய அலுவலர்களை விடுவிப்பதற்கு நிர்வாகங்கள் முன்வரவில்லை. இதனால்கிடைத்த பதவியுயர்வுகளைப் பொறுப்பேற்க முடியவில்லை எனத் தெரிவித்தனர்

யாழ்ப்பாண மாவட்டத்தில் தெல்லிப்பழை ஆதார மருத்துவமனைக்குஇருவரும், பருத்தித்துறை, சாவகச்சேரி, ஊர்காவற்றுறை ஆதாரமருத்துவமனைகள் மற்றும்சங்கானைமருத்துவமனை ஆகியவற்றுக்கு தலா ஒருவர் வீதமும் தாதியச்சகோதரிகள்நியமிக்கப்பட்டுள்ளனர். (ய-9)

## யாழ்ப்பாண மின்மாற்றிகளில் பியூஸ் கட்டைகள் திருட்டு

### பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு

யாழ்ப்பாணத்தில் பொருத்தப்பட்டுள்ள மின்மாற்றிகளில் பியூஸ் கட்டைகள் திருட்டுப்போவதாக சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இலங்கை மின்சாரசபையின் சுன்னாகம் பிரதேச மின்சரா நிலையப் பொறுப்பதிகாரி இதுதொடர்பில் முறைப்பாடு செய்துள்ளார். இதுதொடர்பில் மேலும் தெரியவருவதாவது:

சுன்னாகம்மின்சாரசபையின்எல்லைக்குட்பட்ட இணுவில் மற்றும் புத்தூர் பகுதிகளில் உள்ள மின்மாற்றிகளில் பியூஸ் கட்டைகளைஇனம்தெரியாதநபர்களால்திருடப்படுகின்றன. இதனால் தொடர்ச்சியாக மின்தடைகள் ஏற்பட்டுள்ளன.

சம்பவம்தொடர்பில்ஆராய்ந்தஇலங்கைமின்சாரசபைஅதிகாரிகள் அங்கிருந்த பியூஸ் கட்டைகள் களவாடப்பட்டுள்ளமையைக் கண்டுபிடித்துள்ளனர். அதனைத்தொடர்ந்து பொறுப்பதிகாரி,சந்தேகநபர்களைக்கைதுசெய்யுமாறுகோரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது . (ய-8)

## வடக்கில் காலநிலை மாற்றத்திலும்51அரியவகை மூலிகைகள் உற்பத்தி

சுதேச வைத்தியத் திணைக்களம் தகவல்

யாழ்ப்பாணம், செப்.22

வடக்கு மாகாணத்தில் நிலவும் கர்லநிலை மாற்றத்தி லும்கூட மருந்து உற்பத்திப் பிரிவுக்கு 51 வகையான அரிய வகை மூலிகைகள் விநியோகிக்கப்ப டுகின்றன என மாகாண சுதேச வைத்தியத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதுபற்றி மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாணத்தில் திணைக்களத்துக்கு சொந்தமான 7 மூலிகைத் தோட்டங்கள் உள்ளன. இவற்றில் ஏராளமான வகையான மூலிகைகள் அதிகமாக உற்பத்தித் செய்யப்படுகின்றன. இதில் மருந்து உற்பத்தித் தேவைகளுக்காக 51 மூலிகை இனங்கள் சிறப்பாக உற்பத்தி செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

இவற்றில்இருந்துபத்துவிதமான மருந்துவகைகள் 15 மில்லியன் ரூபா செலவில் தயாரிக்கப்பட்டு வருகின்றன. வருடம்ஒன்றுக்கு14ஆயிரம்கிலோக், கிராம் வரையிலான உற்பத்திகள் நடைபெறுகின்றது.

அத்துடன் அதிகளவான மூலிகைகள் யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள மூலிகைத் தோட்டங்களிலேயே உற்பத்தி செய்யப்படுகின்றன.

நடப்பு வருடத்தில் ஏற்பட்ட காலநிலை மாற்றத்தின்போதும் இந்த மூலிகை உற்பத்திகள் சிறப்பாக நடைபெற்றன.

இதுதவிர மூலிகைகளின் தேவைகருதி நெடுங்கேணி பிரதேசத்தில் புதிய மூலிகைத் தோட்டம் 5 ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கப்பட்டு வருகின்றது. இங்கே மூலிகை உற்பத்தியுடன் அதுசார்ந்த பயிற்சிகளும் வழங்கப்படவுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது. (ய-ரி)

## வடக்கின் தொல்லியல் இடங்களின் பெயர்கள்மாறியமைகுறித்துஆய்வு

### முதலமைச்சர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப்.22

வடக்குமாகாணத்தில்உள்ளசுற்றுலாத் தளங்கள் மற்றும் தொல்லியல் இடங்களின்பெயர்கள்மாற்றமடைந்தமைக்கு காரணம் என்ன என்பது தொடர்பாக ஆராய்ந்து வருவதாக முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாணத்தில் ஏராளமான இடங்கள் பெயர்மாற்றம் அடைந்துள்ளன. கடந்த1975ஆம்ஆண்டுவடக்கில் உள்ள பிரசித்தி பெற்ற எல்லா இடங்களினதும்பெயர்களை சேகரித்து வருகின்றேன். அதன் அடிப்படையில் ஏன் பெயர்களை மாற்றினீர்கள் என்பது தொடர்பில் ஆராயவுள்ளேன். முன்னைய காலத்தில் இருந்த தமிழ்ப்பெயர்களை மாற்றுவதற்கான காரணம்என்னஎன சம்பந்தப்பட்டதரப்புகளிடம்விளக்கங்களைக்கோரவுள்ளேன்.

தொல்லியல் சம்பந்தமாக நிறையப் பிரச்சினைகள்இருக்கின்றன.13ஆவது திருத்தச்சட்டத்தின் படி நாம் மத்திய அரசிற்குரியவர்கள். ஆகவே அவர்களிடம் பேசவேண்டிய தேவையுள்ளது. எம்முடன் கதைக்கும் போது நன்றாக கதைக்கின்றனர். எனினும் ஒரு நடவடிக்கையும் இடம்பெறுவதில்லை.

உலக வங்கி யாழ்ப்பாணத்தை மையமாக வைத்து 55 ஆயிரம் மில்லியன் அமெரிக்க டொலர்கள் ஊடாக திட்டம் ஒன்றை வகுத்து வருகின்றது.

அவர்கள் கொழும்பு அரசுடன் கதைத்து நடவடிக்கைஎடுக்கலாம். மந்திரிமனை போன்றஇடங்களைஅபிவிருத்திசெய்ய நடவடிக்கை எடுத்து வருகின்றனர். உலகவங்கிதலையிடுவதால்அவர்கள் அபிவிருத்தி செய்யவருகின்றனர்.

இராணுவத்தினர் வெளியேற வேண்டும். அவர்கள்வர்த்தகஇடங்கள், மக்கள் காணிகள், சுற்றுலாத்துறை இடங்களைகையகப்படுத்திவைத்துள்ளனர். இவற்றைநாம்அரசியல்ரீதியாகவே கையாளவேண்டும் என்றார். (ய-8)

## உழவு இயந்திரத்தில் இருந்து தவறிவீழ்ந்த இளைஞர் உயிரிழப்பு

*சட்டவிரோத மணல் அகழ்வால் விபரீதம்*

முல்லைத்தீவு, செப்.22
சுதந்திரபுரம் கொலனி பகுதியில், உழவு இயந்திரத்தில் இருந்து வீழ்ந்த இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.

வள்ளிபுனம் முருகன் கோவிலடியைச் சேர்ந்த செல்லையா செல்வன் (வயது-20) என்ற இளைஞரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சம்பவம் பற்றித் தெரியவருவதாவது:
சம்பவதினம் மாலை சுதந்திரபுரம் கொலனிப் பகுதியில் சிலர் அனுமதியின்றி மணல் அகழ்வில் ஈடுபட்டுள்ளார்கள். மணல் ஏற்றிக்கொண்டு பயணித்த உழவு இயந்திரத்தை வனவளப் பிரிவினர் துரத்திச் சென்றனர்.

அவ்வேளையில் உழவு இயந்திரம் அதி வேகமாக செலுத்தப்பட்டுள்ளது. அதன் மக்காட்டில் இருந்து பயணித்த மேற்படி இளைஞர் தவறிவீழ்ந்து உயிரிழிந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் குறித்து புதுக்குடியிருப்பு பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றார்கள். (ய-ரி3)

### வடக்கு மாகாண விவசாயக் கண்காட்சி:

# முதல் நாளில் மட்டும் 10,000 பேர் பார்வை

## 5 நாள்களுக்கு கண்காட்சி நீடிப்பு

யாழ்ப்பாணம், செப்.22
வடக்கு மாகாண விவசாயக் கண்காட்சி ஆரம்பிக்கப்பட்ட நாளில் மாத்திரம் சுமார் பத்தாயிரம் பேர்வரையில் அதனைப் பார்வையிட்டுள்ளனர்.

கண்காட்சியைப் பார்வையிடுவதற்காக வடக்கு மாகாணத்துக்கு வெளியே இருந்தும் முன்பதிவுகள் செய்யப்பட்டுள்ளன. இதனால் காட்சி நடைபெறும் நாள்கள் மேலும் இரு தினங்கள் வரை நீடிக்கப்பட்டுள்ளன.



இதுதொடர்பாக மாகாண விவசாயப் பணிப்பாளர் எஸ்.சிவகுமார் தெரிவித்த தாவது:
மாகாண விவசாயத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் திருநெல்வேலி விவசாயப் பயிற்சிப் பாடசாலை மற்றும் விவசாயத்திணைக்கள வளாகத்தில் கண்காட்சி நடைபெற்று வருகின்றது.

கண்காட்சி வளாகத்தில் மாகாணப் பணிப்பாளர் மற்றும் மாவட்ட விவசாயப் பணிப்பாளர்கள் கண்காட்சியை நெறிப்படுத்தி வருகின்றனர். பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பொதுமக்கள் எனப் பல்வேறு தரப்பினரும் ஆர்வத்தோடு கண்காட்சியைப் பார்வையிடுகின்றனர். காட்சிக்கூடங்களில் வழங்கப்படும் விளக்கங்களையும் செவி மடுத்து வருகின்றனர். கண்காட்சியை முன்னிட்டுகோண்டாவில் சந்திக்கும்திருநெல்வேலிச் சந்திக்கும் இடையே பெருமளவில்வாகன நெரிசல் ஏற்பட்டுள்ளது. சாலைப் போக்குவரத்துப் பொலிஸார் பொருத்தமான முறையில் போக்குவரத்தை ஒழுங்குபடுத்தி வருகின்றனர். பாதுகாப்புக் கடமையிலும் ஈடுபட்டுள்ளனர்.

விவசாயக் கண்காட்சி ஐந்து தினங்களுக்கு நடைபெறுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. 19ஆம்திகதி செவ்வாய்க்கிழமை மட்டும் 10 ஆயிரம் பேர் கண்காட்சியைப் பார்வையிட்டனர். கண்காட்சியை வசதியான முறையில் கண்டுகளிப்பதற்காக முனபதிவு செய்து வருகின்றனர். கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை மட்டக்களப்பு, கம்பகா, நீர்கொழும்பு, புத்தளம் மற்றும் சிலாபம் பகுதியில் இருந்தும் பார்வையிடுவதற்கான முற்பதிவுகள் செய்யப்பட்டுள்ளன. 23ஆம் திகதிவரை கண்காட்சி தினங்கள் நீடிக்கப்பட்டுள்ளன -என்றார். (ய-8-11)

## வடக்கு விவசாயக் கண்காட்சியில் முல்லைத்தீவு தேனுக்கு சிறப்பிடம்

முல்லைத்தீவு, செப்.22
முல்லைத்தீவு தேனீ வளர்ப்பாளர்களால் உற்பத்தி செய்யப்பட்ட ஆரோக்கியமானதேன், வடக்கு மாகாண விவசாயக் கண்காட்சியில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது. 'ஆரோக்கியா சுத்தமான தேன்' என்ற பெயரில் அந்த தேன் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.


இதுதொடர்பாக முல்லைத்தீவு மாவட்ட பிரதி விவசாயப்பணிப்பாளர் பொ.அற்புதச்சந்திரன் தெரிவித்ததாவது:
முல்லைத்தீவு மாவட்ட விவசாயத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் 2016ஆம் ஆண்டு தொடக்கம் முல்லைத்தீவில் தேனீ வளர்ப்பு ஏற்பாடுசெய்யப்பட்டது. மாவட்டம் முழுவதும் உள்ள கிராமங்களில் இருந்து பயனாளிகள் தெரிவுசெய்யப்பட்டனர். அவர்களுக்கான தேனீக்கள் வழங்கப்பட்டன. இவ்வாறு 145 பயனாளிகள் தேனீவளர்ப்பில் ஈடுபட்டிருந்தனர். மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதியில் அவர்களுக்கு தேனீக்கள் வழங்கப்பட்டன.

2017ஆம் ஆண்டில் 30 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டனர். அதேபோன்று தேசிய உணவு உற்பத்திச் செயற்றிட்டத்தில் இருந்து 60 பயனாளிகள் தெரிவுசெய்யப்பட்டனர். இந்தச்செயற்றிட்டத்தில் கொல்லவிளாங்குளம், பாண்டியன்குளம், புதுக்குடியிருப்பு போன்ற கிராமங்களைச் சேர்ந்தவர்கள் உள்வாங்கப்பட்டிருந்தனர்.

தேனீ வளர்ப்பவர்களுக்கு என முல்லைத்தீவில் சங்கம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 'தேனீ வளப்போர் சங்கம்' என்ற பெயரில் செயற்படுகிறது. தேனீவளர்ப்பின் அறுவடைக் காலமும் நிறைவுற்றது. இவ்வாறு அவர்களால் அறுவடை செய்யப்பட்ட தேன் தற்போது யாழ்ப்பாணத்தில் நடைபெற்றுவரும் மாகாண விவசாயக் கண்காட்சியில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. மாகாண அபிவிருத்தித் திட்டத்தில் தேனீ வளர்ப்பும் உள்வாங்கப்பட்டுள்ளது. அதன்படி முல்லைத்தீவு மாவட்டத்திலும் தேனீவளர்ப்பு மேற்கொள்ளப்பட்டது. பயனாளிகளுக்குத் தேன் பெட்டிகள் விநியோகிக்கப்பட்டன. தேனீ வளர்ப்பு ஒரு பொழுது போக்காகச் செய்யும் தொழில் அல்ல. மூலதனமில்லாத வருவாயைப் பெறக்கூடிய தொழிலாகும். தேனீ வளர்ப்புப்பற்றியும், அதனை எவ்வாறு கையாள்வது, அதன் வருவாய் பற்றிய விளக்கங்களை வழங்கிய பின்னரே பயனாளிகள் தேனீவளர்ப்பில் ஈடுபடுகின்றனர். இதனால் அவர்கள் சிறந்த பயனைப் பெறுகின்றனர் -என்றார். (ய-21)

# வடக்கில் மரமுந்திரிகைச் செய்கையை ஊக்குவிப்பதற்கு அமைச்சு நடவடிக்கை

யாழ்ப்பாணம்.செப்.22
வடக்கு மாகாணத்தில் மரமுந்திரிகைச் செய்கையை ஊக்குவிப்பதற்கான ஆரம்பக்கட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று மாகாண விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.



இதுபற்றி மேலும் தெரிவித்ததாவது:
வடக்கு மாகாணத்தில் உள்ள விவசாயிகள் கடன் இல்லாதவர்களாக வாழ வேண்டும். அதற்கு அவர்களுக்கான வாழ்வாதார உதவிகள் வழங்கப்படல் அவசியம். அவர்களுக்கான் உதவிகளை வழங்க அமைச்சு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது.

மரமுந்திரிகை தற்பொழுது கடைகளில் 2 ஆயிரத்து 200 ரூபாமுதல் விற்பனை செய்யப்படுகின்றது. இதற்குக் காரணம் வடக்கில் மரமுந்திரிகைச் செய்கையில் விவசாயிகள் ஆர்வம் காட்டாமையே.

மரமுந்திரிகையைத் தோட்டங்களாக அமைத்துப் பராமரிக்க வேண்டிய தேவை இல்லை. விவசாயிகள் தான் இதனை மேற்கொள்ளவேண்டும் என்ற தேவையும் இல்லை. மக்கள் தங்களிடம் உள்ள காணிகளில் இதனைப் பயிரிட்டு குறுகிய காலம் பராமரித்தால் போதும் அதன்பயன் மிக உயர்வாக இருக்கும்.

இதனைக் கருத்திற் கொண்டு வடக்கு மாகாணத்தில் மரமுந்திரிகைச் செய்கையை ஊக்குவிப்பதற்கு சிறப்பான செயற்றிட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. இதற்கு இலங்கை மர முந்திரிகைக் கூட்டுத்தாபனம் உதவிகளையும், ஆலோசனைகளையும் வழங்குவதாகத் தெரிவித்துள்ளது.

இதன் முதற்கட்டமாக விவசாயிகளின் நிலப்பரப்பில் உள்ள மண்பரிசோதனை செய்யப்படவுள்ளது. அதன்பின்னர் மரமுந்திரிகைக் கன்றுகள் மானிய முறையில் வழங்கப்படவுள்ளன. விவசாயக் காணிகள் தவிர்ந்த ஏனைய காணிகளில் இதனைப் பயிரிடவேண்டும். இதன்மூலம் காணிகள் துப்புரவாக்கப்படும். அத்துடன் விவசாயிகளின் வாழ்வாதாரத்துக்கான ஒருசிறு முயற்சியாகவும் இது அமையும்.

சில வருடங்களுக்குப் பின்னர் இதன்பயனை மிகையாகப் பெற்றுக்கொள்ளலாம். மரமுந்திரிகை ஏற்றுமதி செய்யக் கூடிய பொருள். இதனை கிலோ ஆயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்யலாம்.

ஆகவே மரமுந்திரிகையை அதற்கு ஏற்ற மண்வளம் உள்ள இடங்களில் அதிகளவில் பயிரிட நடவடிக்கை எடுக்கப்படும் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (ய-ரி)

## ஆட்டிசம் கொள்கை தொடர்பாக எவரும் கருத்து தெரிவிக்கவில்லை

யாழ்ப்பாணம், செப்.22
வடக்கு மாகாணத்தில் ஆட்டிசம் கொள்கை தொடர்பில் எவரும் கருத்துத் தெரிவிப்பதற்கு முன்வரவில்லை. இதனால் செயற்குழுவினரால் தயாரிக்கப்பட்ட கொள்கையைநடைமுறைப்படுத்த நேரிடும் என்று மாகாண சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதுபற்றி மேலும் தெரிவித்ததாவது:
வடக்கு மாகாணத்தில் மூளை மற்றும் நரம்பு குறைபாட்டால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை வழங்க 5 ஆண்டு செயற்றிட்டமாக அமைச்சினால் ஆட்டிசம் கொள்கை வெளியிடப்பட்டது.

ஆட்டிசம் செயற்குழுவினால் பல பரிந்துரைகளும் முன்வைக்கப்பட்டன. அதன் பின்னர் அனைத்துத் தரப்பினரதும் கருத்துகள் பெறப்படுவதற்காக செயற்குழுவால் தயாரிக்கப்பட்ட கொள்கை வெளியிடப்பட்டது.

இதன்போது பெறப்படும் கருத்துகள் பரிசீலிக்கப்பட்டு அதனையும் இணைத்து ஆட்டிசம் கொள்கையை நடைமுறைப்படுத்த தீர்மானிக்கப்பட்டது.

இதற்கமைய கடந்த ஜூலை மாதம் 19ஆம்திகதி கொள்கை வெளியிடப்பட்டது. எனினும் கொள்கை சார்பாகக் கருத்துத் தெரிவிக்க பெரிதாக எவரும் முன்வரவில்லை. மக்களுக்குப் பயனுள்ளதாக அமையும் இந்த சிகிச்சை முறையை ஆரம்பிப்பதற்கு கொள்கை அவசியமாகும்.

வடக்கு மாகாணசபையின் அனுமதிக்காக கொள்கை சமர்ப்பிக்கப்படவுள்ளது. இந்தநிலையில் பெரும்பாலான கருத்துகள் கிடைக்கவில்லை.

எனவே, ஆட்டிசம் குழுவினரால் இறுதியாக்கப்பட்ட கொள்கை சமர்ப்பிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ய-ரி)

# புதிய அரசமைப்பை உருவாக்க அனைவரும் ஒன்றிணைவோம்

## சபையில் சம்பந்தன் அழைப்பு

யாழ்ப்பாணம், செப். 22

"நாட்டின் வளர்ச்சியை கவனத்திலெடுத்து அரசமைப்பை உருவாக்குவதன் ஊடாகப் புதிய எதிர்காலத்தை உருவாக்க வேண்டிய கட்டாயத்தை ஏற்படுத்தியுள்ளன. இந்தப் புனிதமான பணியை வெற்றிகரமாக முழுமைப்படுத்துவதற்காக நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவோம்" என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

புதிய அரசமைப்பை உருவாக்கும் வழிநடத்தல் குழுவின் அறிக்கை நேற்று அரசமைப்பு நிர்ணய சபையில் (நாடாளுமன்றில்) முன்வைக்கப்பட்டது. அதில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இரா.சம்பந்தன் மேலும் தெரிவித்ததாவது:

**அனைவரும் ஏற்கும் அரசமைப்பு உருவாகும்**

இடைக்கால அறிக்கையிலும் அதனோடு சேர்த்து முன்வைக்கப்பட்டுள்ள இணைப்புக்களிலும் அடங்கியுள்ள விடயங்கள் பற்றிய கருத்துக்களைத் தற்பொழுது கூறுவது எனது எண்ணமல்ல. அத்தகைய நோக்கத்துக்காக அரசமைப்புச் சபையின் எதிர்காலத்தில் நடைபெறவுள்ள கூட்டங்களில் அந்த விடயங்கள் ஆராயப்படவுள்ளன.

நாங்கள் ஈடுபட்டுள்ள செயன்முறையின் சில விடயங்களின் அவசரமான தொடர்பு மற்றும் முக்கியத்துவம் பற்றியே குறிப்பிட்டுக் கூற விரும்புகின்றேன். எமது நாட்டுக்கான அரசமைப்பை உருவாக்கும் செயன்முறையிலேயே நாம் அனைவரும் ஈடுபட்டுள்ளோம். அடிப்படை மீயுயர் சட்டமாகிய இலங்கையின் அரசமைப்பை உருவாக்கும் பணியில் நாம் பிரதிநிதித்துவப்படுத்தும் மக்களின் சார்பாக நாம் அனைவரும் ஈடுபட்டுள்ளோம்.

பிளவுபடாத, பிரிக்கப்பட முடியாத ஐக்கிய இலங்கை என்ற உறுதியான கட்டமைப்புக்கமைவாக இது மேற்கொள்ளப்படுகின்றது. இந்தக் கட்டமைப்பின்படியே நாங்கள் யாவரும் சுயமாக விரும்பி ஒப்புக்கொள்ளவும் ஏற்றுக்கொள்ளவும் கூடிய வகையில் அரசமைப்பு உருவாக்கப்படும்.

**பிரிக்கப்படாத இலங்கை தொடரும்**

நியாயமான, ஏற்புடையதான, போதியளவான தேசிய ஒருங்கிசைவின் அடிப்படையில் உருவாக்கப்படும் அரசமைப்புச் செயற்பாடுகள் வெற்றிகரமாக முடிவுறும்போது அது இந்தப் பிரச்சினைக்கான உறுதியான முடிவைக் கொண்டுவரும். நாட்டின் மீயுயர் சட்டத்தின் அடிப்படையிலும், அதன் மக்களுடைய சுயவிருப்பத்துடனும், சம்மதத்துடனும் இலங்கை ஐக்கியமான, பிளவுபடாத, பிரிக்கப்பட முடியாததாகத் தொடர்ந்தும் இருக்கும்.

வித்தியாசமான அடையாளங்களைக் கொண்டுள்ள வேறுபட்ட மக்களான சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள் மற்றும் பறங்கியர் போன்றோர் வாழுகின்ற நாடாக இலங்கை உள்ளது. இலங்கை பல்வேறு அரசியற் கட்சிகள் செயற்படுகின்ற சனநாயகம் தொழிற்படுகின்ற நாடாகும். முதன்மை அரசியற் கட்சிகள் இரண்டும் மாறிமாறி இந்த நாட்டின் அரசை அமைத்து ஆட்சி செய்திருக்கும் அதேவேளை, ஏனைய கட்சிகளும் தங்களுடைய வகிபாகத்தைக் கொண்டிருந்தன.

**தமிழரின் ஆதரவு கிட்டவில்லை**

இலங்கையில் இதுவரை கட்டமைக்கப்பட்ட அரசமைப்புக்கள் எதுவும் அதன் வேறுபட்ட மக்களின். குறிப்பாகத் தமிழ் மக்களின் இருதரப்பு ஒருங்கிசைவைப் பெற்றிருக்கவில்லை. அல்லது இரு முதன்மைக் கட்சிகளின் மற்றும் ஏனைய அரசியற் கட்சிகளின் இருதரப்பு ஒருங்கிசைவையும் பெற்றிருக்கவில்லை. அரசமைப்பு உருவாக்கத்தின் தற்போதைய செயற்பாடுகள் அதற்கான ஒரு வாய்ப்பை முதல் தடவையாகத் தந்துள்ளன. அத்தகைய நியாயமான ஒருங்கிசைவின் அடிப்பண்டயிலான அரசமைப்பே நாட்டின் அடிப்படையான மீயுயர் சட்டமாக நாட்டின் அரசமைப்புக்குத் அவசியமாகத் தேவையாகவுள்ள சட்டரீதியான தகுதியையும் நம்பகத்தன்மையையும் பெற்றுத்தரும்.

அரசமைப்பை அரசியல் சூழ்நிலைகளின் பிடிக்குள் இருந்து வெளியே கொண்டு வந்து, இலங்கையை ஒரு தேசமாகவும் இலங்கையர் என்ற அடையாளத்தையும் காட்டும் பண்புகளை உருவாக்கக்கூடிய அரசமைப்பைப் பெற்றுத் தரும். இலங்கை சுதந்திரம் அடைந்த எழுபது ஆண்டுகளாக இந்த நிலமையை அடைய எம்மால் முடியவில்லை.

**கடந்த கால தீர்வு முயற்சிகள்**

1987 - 1988 ஆண்டு தொடக்கம் அரசமைப்பு உருவாக்கச் செயற்பாடுகள் தொடர்கின்றன. செயல்வலு குறைந்ததாக இருந்தபோதும், அரசமைப்புக்கான 13ஆவது திருத்தமே கொழும்புக்கும் மாகாணங்களுக்குமிடையிலான அதிகாரப் பங்கீட்டை முதல் தடவையாக அரசமைப்புக்குள் உள்ளடக்கியது. அப்பொழுது தொடக்கம் பின்வந்த அரச தலைவர்களும், அரசுகளும் தேசியப் பிரச்சினைக்கு இறுதித் தீர்வைக் காண்பதற்குப் பங்களிப்புச் செய்யக்கூடிய முன்னேற்றகர மான பிரேரணைகளை முன்வைத்தனர். அரச தலைவர் ஆர்.பிரேமதாஸ ஆட்சிக் காலத்தில் மங்கள முனசிங்க தெரிவுக்குழுவின் பிரேரணைகள் வந்தன. முன்னாள் அரச தலைவர் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க வின் ஆட்சிக் காலத்தில் அமைச்சரவையின் அனுமதியுடன் 2000 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் அரசமைப்

(தொடர்ச்சி பக்.11)

17ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
சுந்தரம் யோகானந்தா

மலர்வு 20.10.1954
உதிர்வு 30.09.2000



பதினேழாண்டுகள் சென்றதப்பா
மாறவில்லை எம் மனங்கள்

மனைவி, பிள்ளைகள்,
மருமகள் - பேரன்
நீர்வேலி தெற்கு,
நீர்வேலி.

THE HALO TRUST

அனுபவமுள்ள
ஒட்டுத் தொழிலாளர்களுக்கான
(WELDERS) பதவிவெற்றிடம்

ஹெலோட்ரஸ்ட் ஆனது பிரித்தானியாவைத் தளமாகக் கொண்டு உலகளாவிய ரீதியில் 17 நாடுகளில் இயங்கிக் கொண்டிருக்கின்றது. இலங்கையில் 2002 ஆம் ஆண்டு தொடக்கம் மிதிவெடிகள் மற்றும் வெடிக்கத்தக்க பொருள்களை அகற்றிக் கொண்டி ருக்கின்றது.

கிளிநொச்சியைத் தளமாகக் கொண்டு இயங்கிவரும் எமது வாகனத் திருத்தகத்திற்கும் மற்றும் இயந்திரம் மூலம் மிதிவெடி அகற்றும் உபகரணங்களைத் திருத்துவதற்காகவும் அனுபவமுள்ள இயந்திரத்தொகுதி, வாகனத்திருத்துனர்களையும் ஆட்சேர்த்துக் கொண்டிருக்கின்றோம்.

**அத்தியாவசிய தகுதிகள்:**

- குறைந்தது மூன்றுவருடங்கள் இத்தொழிலில் அனுபவம் கொண்டிருத்தல் வேண்டும்.
- கடின வேலை செய்யக்கூடிய ஆர்வமுடையவராகவும் நல்ல தேகாரோக்கிய முடையவராகவும் இருக்கவேண்டும்.
- கிளிநொச்சியைச் சார்ந்தவர்கள் விரும்பத்தக்கது.

ஆர்வமுள்ளவர்கள் உங்களுடைய சுயவிபரக் கோவை மற்றும் தொடர்பு கொள்ள வேண்டிய விவரங்களைக் கீழ் உள்ள முகவரிக்குச் சமர்ப்பிக்கவும்.

**ஹெலோ ரஸ்ட், 450, திருநகர் மேற்கு,கிளிநொச்சி.**

அனைத்து விண்ணப்பங்களும்
(29/09/2017)வெள்ளிக்கிழமைக்கு முன்னதாக சமர்ப்பிக்கப்பட வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட குறுகிய விண்ணப்பதாரிகளுக்கு மட்டும் நேர்முகத் தேர்விற்கான- அழைப்பு விடுக்கப்படும் என்பதைநினைவில் கொள்ளவும்.

## மாவட்டச் செயலகம், கிளிநொச்சி
## குடிசார் வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல்


**கிளிநொச்சிமாவட்டச்செயலாளரினால் பின்வரும் விபரங்களைக்கொண்டகுடிசார் வேலைகளுக்குகேள்விகள் கோரப்படுகின்றன.**

| | ஒப்பந்த இலக்கம் | ஒப்பந்தபெயர் | மதிப்பீட்டுத் தொகை | வேண்டப்படும் ICTAD தரம்/பதிவு | கேள்விப் பிணைப்பணம், செல்லுபடியாகும் காலம் | மீளளிக்கப் படாத கட்டணம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | KN/DPS/D14 /Rod/427-1 | Concrete வீதிநிர்மாணம்-கரைச்சிபிரதேசசபைக்கு உட்பட்ட உருத்திரபுரம் கிழக்கு 4th குறுக்குவீதி | 8.66 மில்லியன் (வற், ஏனைய நீங்கலாக) | C7 Highway | ரூபா87,000.00 வங்கிப்பிணை 19/01/2018வரை | ரூபா 2,000.00 |
| 2 | KN/DPS/D14 / Rod/427-2 | Concrete வீதிநிர்மாணம் -கரைச்சி பிரதேச சபைக்கு உட்பட்ட வட்டக்கச்சி தபால் பெட்டிச் சந்திவீதி | 8.66மில்லியன் (வற், ஏனைய நீங்கலாக) | C7 Highway | ரூபா 87,000.00 வங்கிப்பிணை 19/01/2018 வரை | ரூபா 2,000.00 |
| 3 | KN/DPS/D14 / Rod/427-3 | Concrete வீதிநிர்மாணம் -கரைச்சி பிரதேசசபைக்கு உட்பட்ட உதயநகர் மேற்கு இந்து இளைஞர்மன்ற வீதி | 8.66 மில்லியன் (வற், ஏனைய நீங்கலாக) | C7 Highway | ரூபா 87,000.00 வங்கிப்பிணை 19/01/2018 வரை | ரூபா 2,000.00 |

1. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்ததாரர்களும் கேள்வி கோருவதற்குத் தகுதியுடையவராவார்.
   I. நிர்மாணப் பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தால் இக்ராட் (ICTAD/CIDA) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்ததாரரைப் பதிவு செய்யும் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்ததாரர் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும்.
   II. இக்ராட் (ICTAD/CIDA) வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதியளவு ஒப்பந்தங்களை மேற்கொண்ட ஆற்றலைக் கொண்டிருக்க வேண்டும்.
   III. நிதிஅமைச்சினால் வெளியிடப்பட்ட 04/2016 (i) இலக்க 16.03.2016 ஆம் திகதிய நிதிச் சுற்றறிக்கைக்கு அமைவாக வடக்கு மாகாணத்தைச் சார்ந்தவர்களுக்கு முன்னுரிமையளிக்கப்படும்.
   IV. ஒப்பந்ததாரர் மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்ற வேலைச் செயற்திறனுக்கு உட்பட்டுத் தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் இருக்க கூடாது.
2. ஆர்வமுள்ள தகுதிவாய்ந்த கேள்விதாரர்கள் கேள்விகள் தொடர்பான மேலதிக தகவல்களை கிளிநொச்சி மாவட்டச் செயலக நிர்வாகக்கிளையில் பெற்றுக் கொள்ளலாம். (தொ.பே.இல:-0212285357, பக்ஸ் இல:-0212283966)
3. கேள்வி ஆவணங்களை 22.09.2017 ஆம் திகதியிலிருந்து 04.10.2017 ஆம் திகதிவரை முற்பகல் 9.00மணி முதல் பிற்பகல் 3.00 மணிவரை வேலை நாள்களில் கிளிநொச்சி மாவட்டச் செயலக நிர்வாகக் கிளையில் பெற்றுக்கொள்ளலாம்.
4. இரு அரக்குமுத்திரை இடப்பட்ட உறைகளில் (மூலப்பிரதி.பிரதி) தனித்தனியாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலையிடப்பட்ட கேள்வியையும், கேள்வி கோருவோரின் முன் தகுதிக்கு அவசியமான ஆவணத்தையும் கேள்விகள் கொண்டிருக்கவேண்டும் என்பதுடன் அது தொடர்பாகப் பந்தி5 இல் குறிப்பிடப்பட்டுள்ள இடம் திகதி மற்றும் நேரம் ஆகியவற்றுக்கு ஒப்படைத்தல் வேண்டும்.
5. அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் யாவும் **தலைவர், திணைக்களபெறுகைக் குழு, மாவட்டச்செயலகம் கிளிநொச்சி** எனும் விலாசத்திற்கு 06.10.2017 ஆம் திகதி முற்பகல் 11.00 மணிக்கு முன் கிடைக்கப்பெறல் வேண்டும் உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரர்கள் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமூகமளிக்கமுடியும்.
6. கேள்விகள் தயாரிப்பு அல்லது ஒப்படைப்புக்கு கேள்விதாரர்களுக்கு ஏற்படும் ஏதாவது செலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்குத் தொழில் தருநர் பொறுப் பாக மாட்டார்.
7. கேள்வி தொடர்பான முதற்கூட்டம் (Pre bid meeting) 02.10.2017 ஆம் திகதிமுற்பகல் 11.00 மணிக்கு மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.
8. தாமதமாக கிடைக்கும் விலையிடப்பட்ட கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

**சுந்தரம் அருமைநாயகம்,**
**திணைக்களபெறுகைக் குழுவின் தலைவரும், அரசாங்க அதிபர்/ மாவட்டச்செயலாளர், கிளிநொச்சி மாவட்டம்.**

## கண்ணீர் அஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 23 . 04 . 1948 | 20 . 09 . 2017 |

### சங்கரப்பிள்ளை சூரியகுமார்

(வவுனியா N. S. ரட்ணம் பிரதர்ஸ் நிறுவனம்
Honda Service Station முகாமையாளர்)

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வவுனியா கந்தசாமி கோயில் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சங்கரப்பிள்ளை சூரியகுமார் நேற்றுமுன்தினம் (20.09.2017) புதன்கிழமை தெய்வபதமடைந்தார்.

எங்களில் ஒருவராக உற்ற சகோதரராக பழகிய உங்கள் பிரிவை எங்களால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. எமது கண்ணீர் அஞ்சலியை செலுத்தும் வேளை உங்களது பிரிவினால் வாடும் உங்களின் அன்பு மனைவி, பிள்ளைகள் மற்றும் குடும்பத்தினருக்கு எங்களின் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.


உங்களின் ஆன்மா சாந்திக்காக பிரார்த்திக்கும்

**கந்தசாமி கோயில் வீதி,
வவுனியா.**

**N. S. ரட்ணம் பிரதர்ஸ் நிறுவன
உரிமையாளர் மற்றும்
ஊழியர்கள்.**

**077 301 7779**

## மரண அறிவித்தல்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 23 . 04 . 1948 | 20 . 09 . 2017 |

### சங்கரப்பிள்ளை சூரியகுமார் பொன்னையா
**(தம்பா)**

காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும், வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட சங்கரப் பிள்ளை சூரியகுமார் பொன்னையா 20.09.2017 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை - மனோன்மணி தம்பதிகளின் ஏகபுதல்வனும், காலஞ்சென்றவர்களான கோபாலப்பிள்ளை - முத்தம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், புஸ்ப்பராணியின் (புஸ்பா) அன்புக் கணவரும், இராசலட்சுமி, மகேசன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், குருசங்கர் (லண்டன்),கோகுலசங்கர் (செலான் வங்கி), ஹம்சாயினி (SLIATE) ஆகியோரின் அன்புத் தந்தையும், நிலக்ஷி (லண்டன்), தர்ஷிகா (கொமர்ஷல் வங்கி) ஆகியோரின் அன்பு மாமனாரும், ஆதர்ஸ் (லண்டன்) அன்புப் பேரனும், சந்திரனின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.09.2017) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் வவுனியாவில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இறம்பைக்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**137/4, கந்தசாமி கோயில் வீதி,
வவுனியா.**

**தகவல்:
குடும்பத்தினர்.**

**077 375 2273**

## கண்ணீர் அஞ்சலி



எனது அன்பு நண்பன்

**கணபதிப்பிள்ளை
கிருஷ்ணராஜன்**

(B.A.M.A சமாதான நீதவான்)
(அபிவிருத்தி உத்தியோகத்தர் - கிராம அபிவிருத்தி திணைக்களம்,
வடமாகாணம்,
உறுப்பினர் - தேசோதய சபை கோப்பாய் பிரதேசசபை.
உபதலைவர் - நிழற் பிரதேசசபை - கோப்பாய் )

அவர்கள் 19.09.2017 செவ்வாய்க் கிழமை காலமான செய்தி அறிந்து ஆழ்ந்த கவலையடைவதுடன் அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் எமது அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**துயருறும் -S.பிறின்ஸ் செல்வகுமார்
குடும்பத்தினர்.**

**நீர்வேலி.**

## 56 ஆவது ஆண்டு நினைவு நாள்

**22.09.2017**



அமரர்

### முகாந்திரம் முதலியார் அ.அத்தியார் (J.P)

மலர்வு
27.08.1887

உதிர்வு
22.09.1961


பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்
நற்றவ வானினும் நனி சிறந்தனவே
என்ற கூற்றை யுணர்ந்து வாழ்ந்து
காட்டிய உத்தமரை நினைவு கூர்வோம்.

நினைவு....

அத்தி அகம்,
பருத்தித்துறை வீதி, நீர்வேலி.

திரு. திருமதி ந.சிவகுமாரன்,
(பேரத்தி குடும்பம்)

## மரண அறிவித்தல்



| அன்னை மடியில் | ஆண்டவன் அடியில் |
|---|---|
| 24 | 20 |
| 03 | 09 |
| 1932 | 2017 |

### வல்லிபுரம் நாகேஸ்வரன்
(பிரதம லிகிதர் - Forest Department )

யாழ் சாவகச்சேரியை பிறப்பிடமாகவும், நுணாவிலில் வசித்து தற்போது கொழும்பில் வசித்தவருமாகிய இளைப்பாறிய வல்லிபுரம் நாகேஸ்வரன் 20.9.2017 புதன்கிழமை அன்று சிவ்பதம் எய்தினார். அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம் அருளம்மாவின் அன்பு மகனும்,காலஞ்சென்ற பவளரத்தினம் (இளைப்பாறிய ஆசிரியை),அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற நாகராஜா, மகேஸ்வரன்,நாகமலர்,சிவராஜா ஆகியோரின் அன்புச் சகோதரரும், பண்டிதர் தம்பாப்பிள்ளை சின்னம்மாவின் அன்பு மருமகனும்,குமரேசன் (London), விசாகன் (Australia-Melbourne) தபேசன் (Australia - Melbourne),ஆகியோரின் அன்பு தந்தையும், பிரபோதினி, பிரமிளா ஆனந்தி,யசிந்தா கவிதாங்கனி ஆகியோரின் அன்பு மாமனாரும், திவியா,தர்சன், அக்சனா, அஸ்மிதா, அன்ரனி யோன், அனிசியா யூலி ஆகியோரின் பேரனும் ஆவார். அன்னாரின் பூதவுடல் 23.9.2017 சனிக் கிழமை மதியம் 01 மணிமுதல் மாலை 06 மணிவரை கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 24.09.2017ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு இறுதிக் கிரியைகள் நடைபெற்று 02 மணியளவில் கல்கிசை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : குமரேசன், விசாகன், தபேசன், ( பிள்ளைகள் )
0777 560380, 011 2739584

## பேஸ்புக் மோசடி பாட்டி கைது

கொழும்பு, செப். 22

முகநூலைப் பயன்படுத்தி பலரை ஏமாற்றிப் பணம் பறித்த அறுபத்து நான்கு வயதுப் பாட்டியைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

தனது முகநூல் கணக்கில் உள்ள நண்பர்களிடம், வெளிநாட்டில் இருந்து அன்பளிப்பு கிடைத்திருப்பதாகவும், அதைப் பெற்றுக்கொள்வதற்குப் பணம் தேவைப்படுவதாகவும் கூறியுள்ளார். வங்கிக் கணக்கிலக்கத்தைக் குறிப்பிட்டு அதில் பணம் செலுத்தி உதவுமாறு கேட்டிருக்கிறார். அதை நம்பி பலரும் குறித்த கணக்கில் பணத்தைச் செலுத்தியுள்ளனர். இது குறித்துக் கிடைத்த தகவலையடுத்து பொலிஸார் அந்தப் பெண்ணைக் கைது செய்தனர். (5)

## சான்றிதழ் வழங்கல் நாளை

கொழும்பு, செப். 22

இலங்கைத் திறந்த பல்கலைக்கழக யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தின் டிப்ளோமா மற்றும் சான்றிதழ் கற்கை நெறிகளை நிறைவு செய்த மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம், நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் தலைமை விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் ஆர். விக்னேஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளார். (5)

# புதிய அரசமைப்பை...

புப் பிரேரணைகள் நாடாளுமன்றில் சமர்ப் பிக்கப்பட்டன.

அரச தலைவர் மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக் காலத்தில் அவரால் நியமிக்கப்பட்ட பல்லின நிபுணர்களின் பிரேரணைகள் உருவாக்கப் பட்டதோடு, பேராசிரியர் திஸ்ஸ விதாரண வைத் தலைவராகக் கொண்ட சகல கட்சிக ளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் குழு அதன் அறிக்கையை அரச தலைவர் மகிந்தவிடம் சமர்ப்பித்திருந்தது. இப்போதைக்கு அவை பற்றிய விவரங்களுக்குள் நான் போக வில்லை.

**வெற்றிக்குச் சாதகமான நிலமைகள் உள்ளன**

அத்தகைய பிரேரணைகள் பல்வேறு புறம் பான காரணங்களுக்காக அரசமைப்புடன் சேர்க்கப்படாவிட்டாலும் அந்தப் பிரேரணை கள் தொடர்பாகக் கணிசமான ஒருங்கிசைவு காணப்பட்டதென்பதைத் தெரிவிப்பது போது மானதென எண்ணுகிறேன். உண்மையில் இதுமுன்னைய செயற்பாடுகளின் தொடர்ச்சி யெனக் குறிப்பிட்டுக் கூறுவதோடு, இந்தச் செயற்பாடு முழுமையாக வித்தியாசமான ஒரு சூழ்நிலையில் இடம்பெறுவதனால், இந் தச் சந்தர்ப்பத்தைத் தவறவிடக் கூடாதென எல்லோரும் நியாயமாகவும் உறுதியுடனும் இருந்தால், இது வெற்றியடையக் கூடிய எல் லாச் சாதகமான நிலமைகளும் உள்ளன.

தமது அடையாளமும், மதிப்பும் ஒப்புதலளிக் கும் நியாயமானதும் ஏற்றுக்கொள்ளப்படக் கூடியதுமான அரசமைப்பு ஏற்பாடுகளே தமிழ்பேசும் மக்களின் நீண்டகால வேணவா வாக இருந்து வருகின்றது. உலகத்தில் பரவ லாக இத்தகைய ஒழுங்கு முறைகள் இருக் கின்றன. தீர்வு காணப்படாத நிலமைகளின் விளைவாக முழு நாட்டுக்கும், தமிழ் மக்க ளுக்கும் பல்வேறு பக்க விளைவுகள் ஏற்பட் டுள்ளன.

கல்வியறிவுடைய தகு திவாய்ந்த இந்த நாட் டின் குடிமக்கள், குறிப் பாகத் தமிழர்களும் சிங்களவர்களும் நாட் டைவிட்டு வெளியேறி பிற நாடுகளில் புகலி டம் பெற்றுள்ளதனால் இந்த நாடு திறமையா னவர்களை இழந்துள் ளது. பல்வேறு வழிக ளிலும் இந்த நாட்டின் எதிர்காலத்துக்குப் பாதிப்பு ஏற்படும் வகையில் பன்னாட்டு ரீதியில் நாட்டின் நற்பெயருக்குக் களங்கம் ஏற்பட்டுள்ளது.

**ஒன்றிணைந்து செயற்படுவோம்**

நாங்கள் எமது நாட்டின் நற்பெயரை மீட்டெ டுத்து பன்னாட்டுச் சமூகத்தின் மதிப்பைப் பெறவேண்டிய தேவை உள்ளது. எமது பொருளாதாரம்பெரியளவில்குறைபாடுடைய தாக உள்ளதோடு, முன்னர் எமது வாழ்க் கைத் தரத்தை விடப் பின்தங்கிய நிலையில் இருந்த இந்தப் பிராந்தியத்தின் ஏனைய நாடு கள் வேகமாக முன்னேற்றமடைந்து இன்று நாம் வாழும் வாழ்க்கைத் தரத்தைவிட மிக உயர்ந்த வாழ்க்கைத் தரத்தைக் கொண்ட வர்களாக இருக்கின்றன. பொருளாதார ரீதி யில் நாம் மிகவும் பின்னடைந்துள்ளோம். பாதுகாப்புச் செலவினங்களுக்காக பெரிய தொகையைச் செலவிட வேண்டியுள்ளதால் முக்கியமான துறைகளில் அபிவிருத்திகளை மேற்கொள்ள வளப் பற்றாக்குறை தடையாக உள்ளமை பின்னடைவுக்குக் காரணமாகின் றது.

இத்தகைய காரணிகளே புதிய மீயுயர் அடிப் படைச் சட்டத்தின் மீது ஒரு புதிய எதிர்கா லத்தை உருவாக்க வேண்டிய கட்டாயத்தை ஏற்படுத்தியுள்ளன. இந்தப் புனிதமான பணியை வெற்றிகரமாக முழுமைப்படுத்து வதற்காக நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவோம் - என்றார். (வ-5)

**தேவை**

கொப்பறா, தேங்காய் கொள்வனவு செய்யப்படும். - 077 772 2215

**விற்பனைக்குண்டு**

டோமன் நாய் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு :- 077 281 8360

**உடன் தேவை**

மொத்த சில்லறை வியாபார நிலையத்தில் வேலை செய்யக் கூடிய ஒருவர் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

191A, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
(சென்.பனடிக் பாடசாலை முன்னால்)

**தேவை**

Car driver தேவை
40 வயதுக்கு மேல் உள்ளவர்
விரும்பத்தக்கதுதொலைபேசி முலம்
தொடர்புகொள்ளவும்
077 802 2844/071 089 4678

**தேவை**

வீதி வேலைக்கு இடிபாடு தேவை

தொடர்பு :- 076 699 0795

**அறை வாடகைக்குத்தேவை**

யாழ். போதனா வைத்தியசாலையில் தொழில்புரியும் பெண் வைத்தியருக்கு, வைத்தியசாலையை அண்மித்த பகுதியில், தனி வழிப்பாதையுடனான Arinex அவசரமாகத் தேவைப்படுகின்றது.

077 305 4849/077 243 5202

**MAJESTIC CINEPLEX**
A CEYLON THEATRES CINEMA Jaffna
**கார்கில்ஸ் ஸ்குவெயர்**
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)
இப்பொழுது திரையில்










விசாரணை ☎ 021- 2227712
MajesticCineplexSL
www.ceylontheatres.lk

**COMPUTER COURSES**

Diploma in Computerized **Accounting** — Tally, Quick Book, Accpack, M.Y.O.B

Diploma in **Video Editing** — Premiere Pro CS6, Adobe Photoshop, Adobe AfterEffet, Pinnacle Studio,

Diploma in **AutoCAD** — 2D & 3D Modeling

Advanced Diploma in **Hardware & Networking**

C++, JAVA

புதிய பிரிவுகள் ஆரம்பம்
Hotline:0777 173517

DMI COMPUTER EDUCATION

முழுமையானதும் தரமானதுமான கணினிக்கல்வி
இலங்கை அரசாங்கத்தாலும் சர்வதேசத்தாலும்
அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம். (TVEC REG.NO P25/0056)

**DMI COMPUTER EDUCATION**

| | |
|---|---|
| யாழ்ப்பாணம் | No.113, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். Tel:.021 222 4403 |
| நெல்லியடி | M. M. V வீதி, (மத்திய மகா வித்தியாலயம் முன்பாக) Tel:.021 226 2470 |
| சாவகச்சேரி | No.174, கண்டி வீதி, சாவகச்சேரி.(HNB அருகில்) Tel:.021 227 0775 |
| சுன்னாகம் | No.130, K.K.S வீதி, சுன்னாகம்.(NSB அருகில்) Tel:.021 224 1970 |
| கிளிநொச்சி | No.19 ஆனந்தபுரம், (மத்திய கல்லூரி முன்பாக) Tel:.021 228 5655 |

**வீடு விற்பனைக்கு**

யாழ்.நகரில் கொட்டடிச் சந்திக்கு அண்மையில் வீடு விற்பனைக்குண்டு. சுமார் 3 பரப்பில் நன்னீர் கிணற்றுடன் கூடியதுமாகும்.

077 227 9219

**பராமரிப்பாளர் தேவை**

பலாலி வீதி திருநெல்வேலியில் இயங்கிவரும் கருணாலயம் அன்னை கிருஷ்ணாபாய் மகளிர் இல்லத்துக்கு 30 தொடக்கம் 45 வயதிற்குட்பட்ட க.பொ.த. சாதாரண தர கல்வித் தகைமை உடைய, இல்லத்தில் தங்கியிருந்து பொறுப்பாகப் பிள்ளைகளைப் பராமரிக்கக் கூடிய பெண் பராமரிப்பாளர் உடன் தேவை.

தொடர்புகளுக்கு : 021 222 8490
021 721 0910

KELANI CABLES

**பொறியியற்பீடம்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**
**களனி சக்தி வீட்டு மின்னிணைப்புத்**
**தகைமைச் சான்றிதழ் கற்கைநெறி**

வீட்டு மின்னிணைப்புத் தகைமைச் சான்றிதழ் கற்கைநெறியினை களனி கேபிள்ஸின் அனுசரணையுடன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பொறியியற்பீடம் தமிழ் மொழியில் நடாத்திவருகின்றது. இக்கற்கை நெறியின் பிரதான நோக்கம் வீட்டு மின்னிணைப்பு செயல்முறை தொடர்பான தத்துவ விளக்கங்களை வழங்குவது. எனவே மின்னியல் தொழில்நுட்ப துறையில் முன்னனுபவமுள்ளோருக்கு முன்னுரிமை வழங்கப்படும். இக் கற்கைநெறிக்கு 25 மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

காலம் : ஒரு வருடம் (பகுதிநேரம்: மாதத்தின் முதலாவது சனி, ஞாயிறு தினங்களில் மட்டும்)
தெரிவு : நேர்முகப்பரீட்சை மூலம்
இடம் : பொறியியற்பீடம், அறிவியல் நகர், கிளிநொச்சி.

மேற்படி கற்கைநெறியினை பயில்வதற்காக பொருத்தமான விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் 06.10.2017 வரை பீடாதிபதி, பொறியியல் பீடத்தினால் ஏற்றுக் கொள் ளப்படும். பொருத்தமான விண்ணப்பதாரிகள் தங்களது சுயவிபரக் கோவையினை விண்ணப்ப முடிவு திகதியன்றோ அதற்கு முன்னதாகவோ கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பிவைக்க வேண்டும். அல்லது நேரில் ஒப்படைக்க முடியும் (சுயவிபரக் கோவையில் வீட்டு மின்னிணைப்பு துறையில் தொழில் செய்த சேவைக்காலம், சேவை விபரம் என்பன தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும்). அனுப்பவேண்டிய முகவரி:

**ஒருங்கிணைப்பாளர்**
**"களனி சக்தி வீட்டு மின்னிணைப்பு தகைமைச் சான்றிதழ் கற்கைநெறி"**
**பொறியியற்பீடம்,**
**அறிவியல்நகர்,**
**கிளிநொச்சி**

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "களனி சக்தி வீட்டு மின்னிணைப்பு தகைமைச் சான்றிதழ் கற்கைநெறி" எனக்குறிப்பிடுதல் வேண்டும். தெளிவற்ற மற்றும் விண்ணப்ப முடிவு திகதிக்கு பின் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
பதிவாளர்

ஓம் ஸ்ரீ சாய்ராம்



**ஸ்ரீ சீரடி சாயி பாபாவின்**
**வருடாந்த திவ்ய உற்ஷவம் - 2017**

அன்பான அடியார்களே!

23.09.2017 – கொடியேற்றம் (மாலை 4.30 மணி) – ரிஷப வாகனம்
24.09.2017 – மயில்வாகனம் – மாலை 5 மணி
25.09.2017 – பத்மாசனபீடம் – மாலை 5 மணி
26.09.2017 – அன்னவாகனம் – மாலை 5 மணி
27.09.2017 – தண்டிகை – மாலை 5 மணி
28.09.2017 – சுவான வாகனம் (நாய்) – மாலை 5 மணி
29.09.2017 – சர்ப்பவாகனம் – மாலை 5 மணி
30.09.2017 – கப்பல்வாகனம் – மாலை 5 மணி
01.10.2017 – பல்லக்கு – மாலை 5 மணி
02.10.2017 – குதிரை வாகனம்(வேட்டைத்திருவிழா) – மாலை 5 மணி
03.10.2017 – சப்பைரதம் – மாலை 5 மணி
04.10.2017 – தேர்த்திருவிழா – காலை 7 மணி.
– பச்சைசாற்றி ரத அவரோகணம் – மாலை 5 மணி
05.10.2017 – தீர்த்த உற்சவம் – காலை 7 மணி
– கொடியிறக்கம் – மாலை 5 மணி
06.10.2017 – சமுத்திரதீர்த்தம் – காலை 5 மணி
– லெண்டி உற்சவம் – மாலை 5 மணி
07.10.2017 – பைரவர் மடை – மாலை 5 மணி

**"சீரடி சாயி மந்திர்"**
**314, நாவலர் வீதி, நல்லூர்,**
**யாழ்ப்பாணம், இலங்கை.**
**தொ.பே.இல. : 077 722 2568, 077 481 5336**

**ஆலயத்தினர், உபயகாரர், பக்தஅடியார்கள்.**

## பிரான்ஸ் இளம் பெண்ணுக்கு பாலியல் துன்புறுத்தல் சந்தேக நபர் மறியலில்

பிரான்ஸைச் சேர்ந்த 21 வயது இளம் பெண்ணை அவர் தங்கியிருந்த விடுதிக்குள் புகுந்து பாலியல் துன்புறுத்தல் செய்ததாகச் செய்யப்பட்ட முறைப்பாட்டையடுத்து கைது செய்யப்பட்ட சந்தேக நபரை எதிர்வரும் 25ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு திருகோணமலை நீதிமன்ற நீதிவான் எம்.எச்.எம்.ஹம்ஸா உத்தரவிட்டுள்ளார்.

திருகோணமலை டைக் வீதியிலுள்ள உல்லாச விடுதியொன்றில் தங்கியிருந்த பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த 21 வயதுடைய யுவதியை விடுதிக்கு அருகிலுள்ள மற்றொரு விடுதியில் தங்கியிருந்த 23 வயதுடைய பல்கலைக்கழக மாணவன், யுவதி தங்கியிருந்த அறைக்குள் புகுந்து பாலியல்த் துன்புறுத்தல் செய்யதாக துறைமுகப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. (5,45)

## கூரையைப் பிய்த்துக் கொட்டிய அதிர்ஷ்டம்

கொழும்பு, செப். 22

ஹொரணைப் பிரதேசத்தில் பழைய பத்திரிகைகளைக் கொள்வனவு செய்யும் தொழிலில் ஈடுபடுவருக்கு எதிர்பாராத வகையில் அதிர்ஷ்டம் கிடைத்துள்ளது.

100 ரூபா கொடுத்து வாங்கிய பழைய பத்திரிகைக்குள் 5 ஆயிரம் ரூபா தாள்கள் 60 கிடைத்துள்ளன. 100 ரூபா கொடுத்து வாங்கிய பழைய பத்திரிகைக்குள் 3 லட்சம் ரூபா பணம் இருந்துள்ளது. அந்த நபர் தனக்குக் கிடைத்த பணத்தை உரிமையாளரிடம் ஒப்படைத்துள்ளார்.

ஹொரணை நகர்ப் பகுதியில் பழைய பத்திரிகைகளைச் சேகரிக்கும் போது அந்தப் பகுதியில் பெண்ணொருவர் 10 கிலோ கிராம் பழைய பத்திரிகைகளை 100 ரூபாய்க்கு விற்றுள்ளார். பொலித்தீன் பைகளில் பொதி செய்யப்பட்ட பத்திரிகைகளைத் தரம் பிரித்தபோது, அதற்குள் 3 லட்சம் ரூபா பெறுமதியுடைய 5 ஆயிரம் ரூபா தாள்கள் 60 காணப்பட்டுள்ளன.

பணத்தின் உரிமையாளர் பணத்தைக் காணாமல் தேடியதுடன், தனது மனைவியிடம் விசாரித்துள்ளார். இது குறித்து மனைவியிடம் வினவியபோது, அவர் நடந்த விடயத்தைக் கூறியுள்ளார்.

விற்பனை செய்யப்பட்ட பழைய பத்திரிகைகளில் வீட்டின் காணி உறுதிப் பத்திரமும் பணமும் இருந்ததாக பத்திரிகையைக் கொள்வனவு செய்தவரிடம் தெரிவித்துள்ளார்.

இதைத் தொடர்ந்து நாம் கொள்வனவு செய்த பழைய பத்திரிகைக்குள் காணி உறுதிப் பத்திரம் காணப்படவில்லை என்றும் 3 லட்சம் ரூபா பணம் மாத்திரமே இருந்ததாகக் கூறியதுடன், பணத்தை உரிமையாளரிடம் ஒப்படைத்துள்ளார். ஒப்படைக்கப்பட்ட பணத்தில் இருந்து 40 ஆயிரம் ரூபாவைக் கருணாரத்னவிற்கு அன்பளிப்பாகக் கொடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (5)

# சமூகவலைத் தளங்களும் மணநீக்கத்துக்குக் காரணமாகிறது

## சட்ட உதவிகள் ஆணைக்குழு தெரிவிப்பு

கொழும்பு, செப். 22

இலங்கையில் நிகழும் விவாகரத்துக்களுக்குப் பொருளாதாரப் பிரச்சினை, மது அருந்துதல், வரதட்சனை, மருமகள் - மாமியார் சண்டை போன்ற பிரச்சனைகளும் காரணமாக இருப்பது போன்று சமூக வலைத்தளங்கள், அலைபேசிகள் ஆகியவற்றில் நடைபெறும் கருத்துப் பரவலாக்கமும் இதற்குச் சாதகமாக அமைவதாக இலங்கை சட்ட உதவிகள் ஆணைக்குழுவின் சட்டத்தரணி சஜிவனி அபேயகோன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சமூகவலைத் தளங்கள், ஆண் - பெண் இருதரப்பும் முறையற்ற தொடர்புகளை ஏற்படுத்தி கொள்ள இவை சாதகமாக அமைகின்றன. அதுவே குடும்ப அமைதிக்குப் பாதிப்பையும் தாக்கத்தையும் ஏற்படுத்துகின்றது.

சமூக வலைத்தளங்கள் ஊடாகப் படங்களைப் பரிமாறிக் கொள்ளுதல் மற்றும் இணைய அரட்டை மூலம் தவறான உறவுகளை ஏற்படுத்திக் கொள்வதை எங்களிடம் சட்ட உதவிகளை நாடி வருவது மூலம் அறிய முடிகின்றது.

சில ஆண்கள் இணையத்தில் ஆபாசப் படங்களைப் பார்த்துவிட்டு அது போன்று மனைவியுடன் உடலுறவு கொள்ள முற்படுதல் தொடர்பாகவும் எங்களின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

சமூகத்தில் குடும்பப் பொருளாதாரப் பலம் கணவனிடமே தங்கியிருப்பதால், பெண்கள் துன்பங்களைச் சகித்துக் கொண்டு பொறுமையுடன் இருப்பதால் முறைப்பாடு செய்ய முன்வருவதில்லை.

சிலர் விவாகரத்துக்குச் செல்லாமல் பராமரிப்புப் பணத்தைப் பெற்று குடும்பத்தை நடத்திச் செல்கின்றார்கள்.

எப்படி இருப்பினும், சட்டத்தின் முன் கொண்டு வரப்படும் விவாகரத்து வழக்குகளில் கணவன், மனைவியைப் பிரிக்காமல் தீர்க்க முயற்சிகள் எடுக்கப்படும் வேளையில், சில சந்தர்ப்பங்களில் அவர்களின் பிரச்சனை உக்கிரமடையும்போது அதனைத் தீர்க்க முடியாமல் போகின்றது - என்றார்.

இதேவேளை மற்றொரு சட்டத்தரணியான நாமல் ராஜபக்ச தெரிவித்ததாவது:

கணவன் அல்லது மனைவியின் முறையற்ற தொடர்புகள், தவறான நடத்தை மற்றும் பாலியல் பலவீனம் போன்ற காரணங்களும் இலங்கையில் விவாகரத்துக்குக் காரணமாக அமைகின்றது.

மனதில் தோன்றும் சந்தேகம் காரணமாகப் பிள்ளைகள், உறவுகள் முன்னிலையில் மனைவியால் கணவன் அவமதிக்கப்படும்போது அந்தப் பெண்களே வீட்டில் கணவன் இருக்க முடியாத நிலையை ஏற்படுத்துகின்றார்கள். சில சந்தர்ப்பங்களில் அலுவலகத்தில் பணியாற்றும் பெண்களோடு தொடர்பு கொண்டிருப்பதாகச் சந்தேகம் கொள்கின்றார்கள். இந்த விடயத்தில் மனைவிக்கு அவரது பெற்றோரின் ஒத்துழைப்பும் கிடைக்கின்றது.

வீட்டு வன்முறை என்று கூறும்போது கணவன், மனைவியைக் கை மற்றும் காலால் அடிப்பது மட்டும்தான் என்று நினைக்கின்றோம். அதே நேரம் மறுபக்கத்தில் பெண்களும் அவமானத்தை ஏற்படுத்தும் வகையில் கணவனைத் தொடர்ந்து தாக்குகின்ற சம்பங்களும் எமக்கு முறைப்பாடு செய்யப்படுகின்றன - என்றார். (5)

# 33 தமிழர்களின் படுகொலை 27ஆவது ஆண்டு நினைவு

கொழும்பு, செப். 22

மட்டக்களப்புச் சவுக்கடி கிராமத்தில் இராணுவத்தால் படுகொலை செய்யப்பட்ட 33 தமிழர்களின் 27ஆவது ஆண்டு நினைவேந்தல் நேற்றுமுன்தினம் புதன்கிழமை மாலை உணர்வுபூர்வமாகக் கடைப்பிடிக்கப்பட்டது.

சவுக்கடியில் அமைக்கப்பட்டுள்ள நினைவுத் தூபியில் மலர் மாலை அணிவித்து மெழுகுவர்த்தி ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது. நினைவேந்தல் நிகழ்வில் கிழக்கு மாகாண விவசாய அமைச்சரும், தமிழ் அரசுக் கட்சியின் பொதுச் செயலருமான கி.துரைராஜசிங்கம் கலந்து கொண்டார்.

1990ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 20ஆம் திகதி சவுக்கடி கிராமத்துக்குள் நுழைந்த இராணுவத்தினர் பொதுமக்கள் பகுதிகளில் துப்பாக்கிச் சூடு நடத்தினர். இதிலிருந்து தப்புவதற்கு மக்கள் ஓடி ஒழிந்தனர். ஓடியவர்கள் தவிர அங்கிருந்த நான்கு மாதக் குழந்தை உள்ளிட்ட 26பேரைக் கொடூர



மான முறையில் படுகொலை செய்து, இரண்டு குழிகளில் புதைத்தனர். கடலில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்ட 7பேர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தி அவர்களையும் குழிகளில் புதைத்தனர்.

இந்தக் கொடூரத்தின் நினைவாக அமைக்கப்பட்டுள்ள நினைவுத் தூபியில் நினைவேந்தல் உணர்வுபூர்வமாக நடந்துள்ளது. (5,46)

## பெண் வேடமிட்ட ஆண் பொலிஸிடம் சிக்கினார்

கொழும்பு, செப். 22

பிலியந்தலைப் பொலிஸார் இரண்டு பெண்களையும், இரண்டு ஆண்களையும் கைதுசெய்த நிலையில் இரண்டு பெண்களில் ஒருவர் ஆண் என்பது விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

பிறந்த நாள் விருந்தில் கலந்து கொண்ட இரண்டு தரப்பினருக்கும் இடையில் ஏற்பட்ட வாக்குவாதம் முற்றியதில் இரண்டு தரப்பினரும் தாக்கிக் கொண்டுள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பாகப் பொலிஸார் இரண்டு ஆண்களையும், இரண்டு பெண்களையும் கைது செய்தனர்.

சந்தேக நபர்கள் அணிந்திருந்த ஆடைகள் கலைந்திருந்ததால் இவர்கள் கட்டிப்புரண்டு சண்டையிட்டிருக்கலாம் என்று சந்தேகித்த பொலிஸ் பரிசோதகர் சாராநாத் சமரகோன், பெண்களைச் சோதனையிடுமாறு பெண் பொலிஸ் அதிகாரிக்கு உத்தரவிட்டுள்ளார். பெண் பொலிஸ் அதிகாரி பெண் சந்தேகநபரை அறைக்கு அழைத்துப் பரிசோதிக்க முற்பட்டுள்ளார். அப்போது பெண் போல் ஆடை அணிந்தவர் ஆண் என்பது தெரியவந்துள்ளது.

பெண் பொலிஸ் அதிகாரி, பொறுப்பதிகாரிக்கு அறிவித்துள்ளார்.

இதனையடுத்து அந்த நபரை அழைத்து பொறுப்பதிகாரி விசாரணை நடத்தியுள்ளார்.

ஆசைப்பட்டுப் பெண் போல் உடையணிந்து வந்ததாகவும், பிறந்தநாள் விருந்தை நடத்தியவருக்கும் இது தெரியும் எனவும் சந்தேக நபர் பொறுப்பதிகாரியிடம் கூறியுள்ளார்.

கைதுசெய்யப்பட்டுள்ள மூன்று ஆண்கள் மற்றும் பெண்ணைக் குடிபோதையில் தகராறு ஏற்படுத்திய குற்றச்சாட்டில் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பெண்கள் போல் உடையணிந்த ஆண்கள் கைதான சம்பவங்கள் அண்மைக்காலமாக அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (5)

# இலங்கையராக வாழவேண்டும் நாடு சுபீட்சமடைய அதுவே வழி

## சந்திரிகா அம்மையாரின் அறிவுரை

கொழும்பு, செப். 22

இந்த நாடு எல்லோருக்கும் சொந்தமானது. இங்கு வாழும் சகல இன மக்களும் ஒற்றுமையுடன் இன, மத பேதங்களை மறந்து எல்லோரும் இலங்கையர் என்ற கோட்பாடுடன் வாழ வேண்டும். அப்போதுதான் நாட்டைச் சிறப்பாக மாற்றியமைக்கலாம். இவ்வாறு முன்னாள் அரச தலைவர் சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க தெரிவித்தார்.

தென்கிழக்குப் பல்கலைக்கழகப் பொறியியல் பீடத்தில் தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கத்துக்கான அலுவலகத்தின் மாதிரி பீடத்தை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதில் சந்திரிக்கா கலந்து கொண்டு உரையாற்றினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மக்கள் மத்தியில் நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதற்கான வேலைத்திட்டம் நாடு முழுவதும் தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கத்துக்கான அலுவலகத்தால் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

நாடளாவிய ரீதியிலுள்ள 2 ஆயிரம் பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டு இந்த வேலைகள் யாவும் மாணவர்கள் ஊடாக முன்கொண்டு செல்லப்படுகின்றன. 7 பல்கலைக் கழகங்களிலும் இவ்வாறான வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் முதலாவது வேலைத் திட்டத்தை ஆரம்பித்து வைத்துள்ளேன். இதனூடாகப் பல்கலைக்கழக மாணவர்கள் மக்கள் மத்தியில் சமாதானம், நல்லிணக்கம் தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். நிலையான சமுதாயத்தையும், நிலைபேறான அபிவிருத்தியையும் பெறமுடியும். அது மாத்திரமல்ல எமது நாட்டில் நிரந்தரமான சமாதானத்தைக்கொண்டுவர முடியும் - என்றார். (5)

# உரிமைகளை மீறுவோர் ஐ.நா. சபையில்தான்

## அமெரிக்காவின் குற்றச்சாட்டு இது

கொழும்பு, செப். 22



மனித உரிமைகளை மோசமாக மீறுகின்ற பலர் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் அமர்ந்துள்ளனர் என்று ஐ.நாவுக்கான அமெரிக்கத் தூதுவர் நிக்கி ஹாலே தெரிவித்துள்ளார்.

ஐ.நாவை மறுசீரமைப்புச் செய்வது தொடர்பாக ஐ.நா. பொதுச்சபையில் நடந்த கூட்டத்தில் உரையாற்றிய போதே, அமெரிக்கத் தூதுவர் நிக்கி ஹாலே இவ்வாறு கூறியுள்ளார்.

மனித உரிமைகள் மிகவும் முக்கியமானவை. மனித உரிமைகளை மோசமாக மீறுகின்ற பலர் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் அமர்ந்துள்ளனர்.

நம்பகத்தன்மையை மீண்டும் பெற்றுக் கொள்வதற்கு நாம் செயற்பட வேண்டும் - என்றார். (5)

# முன்னேற்றம் போதாது!

## இலங்கை தொடர்பில் ஐ.நா.வின் கணிப்பு இது

கொழும்பு, செப். 22



இலங்கையில் அமைதியைக் கட்டியெழுப்புவதற்கும், நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கும் இன்னும் அதிகமாகச் செய்ய வேண்டிய தேவை உள்ளது என்று இலங்கைக்கான ஐ.நாவின் வதிவிடப் பிரதிநிதி உனா மக்கோலி தெரிவித்துள்ளார்.

அமைதிக்கான பன்னாட்டு நாள் நேற்றுக் கொண்டாடப் பட்டது. இதனை முன்னிட்டு அவர் வெளியிட்ட அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

இன்று பன்னாட்டுச் சமூகம் என்ற வகையில், எமது கடமைகளை நினைவில் கொள்ள வேண்டும். வன்முறை மோதல்களும், பாகுபாடுகளும், மிகவும் பாதிப்புகளைத் தரக் கூடியது என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

இந்த ஆண்டு, அமைதிக்காக இணைந்திருந்தல் - அனைவருக்கும் மதிப்பளித்தல், பாதுகாப்பு மற்றும் மதிப்பு என்ற தொனிப் பொருளில் அமைந்துள்ளது.

அகதிகளையும், குடியேற்றவாசிகளையும் கவனத்தில் கொள்கிறோம்.

அனைவரதும் மனித உரிமைகளைப் பாதுகாத்து, பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு நிரந்தரத் தீர்வைக் காண வேண்டும். மோதல்களுக்கான காரணிகளுக்குத் தீர்வு கண்டு, வன்முறைகளைத் தடுத்து, ஒற்றுமையை உறுதிப்படுத்த வேண்டியது எமது கடப்பாடாகும்.

இலங்கையில் போர் முடிந்து விட்டது. இன்னமும் வெறுப்பு மற்றும் பாகுபாடுகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலைமைகள் இன்னமும் உள்ளது. நிலையான அமைதிக்காக அனைவரும் இணைந்து செயற்படுவதற்கான வாய்ப்பு இன்னமும் உள்ளது. அமைதியைக் கட்டியெழுப்புதல், மற்றும் நல்லிணத்துக்காக இன்னமும் அதிகமாகச் செய்ய வேண்டியுள்ளது.

இதன் அர்த்தம், நாம் மற்றவரின் மதத்தை, இனத்தை, கலாசாரத்தை, பெறுமானத்தை, அரசியல் நம்பிக்கையை மதிக்க வேண்டும்.

அர்த்தமுள்ள முன்னேற்றங்களுக்காக, வேறுபாடுகளை மறந்து இணைந்து செயற்பட வேண்டும். பாகுபாடு, சகிப்பற்ற தன்மை மற்றும் சமத்துவமின்மை ஊக்குவிக்கப்படுதல் அல்லது அலட்சியம் செய்யப்படும் வரை, எங்களது முயற்சிகள் பயனற்றவை - என்றார். (5)

# சீனாவை எதிர்த்து இந்தியாவை ஆதரிக்கிறது அமரபுர பௌத்தபீடம்

கொழும்பு, செப். 22

அம்பாந்தோட்டைத் துறைமுக நிலத்தைச் சீனாவுக்கு வழங்குவதை நாம் எதிர்க்கிறோம். இவ்வாறு முக்கிய பௌத்த பீடங்களில் ஒன்றான அமரபுர மகாநிக்காயவின் மகாநாயக்கரான கொட்டுகொட தம்மவன்ச தேரர் தெரிவித்தார். அத்துடன் இந்தியா தெற்காசியக் குடும்பத்தில் எமது மூத்த சகோதரன் என்றும் புகழ்ந்துள்ளார்.

இந்திய ஊடகத்துக்கு அவர் வழங்கிய செவ்வியில் மேலும் தெரிவித்ததாவது:

பாகிஸ்தான், மாலைதீவு, இலங்கை, நேபாளம் போன்ற நாடுகளை உள்ளடக்கிய தெற்காசியக் குடும்பத்தில் இந்தியா எமது மூத்த சகோதரன். அவர்கள் பரஸ்பர புரிந்துணர்வின் அடிப்படையில் அனைவரும் ஒன்றாகப் பணியாற்ற வேண்டும். பிராந்தியத்தில் அமைதியைக் கட்டியெழுப்ப இந்தியாவுடனும் பாகிஸ்தானுடனும், இணைந்து மிகச் சிறந்த பணியாற்ற இலங்கை முயற்சிக்க வேண்டும்.

இந்திய இலங்கை உறவுகள் மிக மிகப் பழமை வாய்ந்தது. வரலாற்று ரீதியானது. இந்த உறவுகளை நாங்கள் சேதப்படுத்துவதற்கு எதையும் செய்து விடக் கூடாது. வடஇந்திய இளவரசனான விஜயன்தான், சிங்கள நாகரீகத்தை உருவாக்கினார் என்பதைப் புதிய தலைமுறையினர் நினைவில் கொள்ள வேண்டும். தமிழர்களும் இந்தியாவில் இருந்தே வந்தனர். முஸ்லிம்களும் இந்தியா ஊடாகவே வியாபார நோக்கமாக இலங்கைத் தீவுக்கு வந்தனர். எமது தேசிய மதமான பௌத்தம் இந்தியாவில் இருந்தே வந்தது. எமது கலாசாரம், எழுத்துவடிவங்கள், பெயர்கள் கூட இந்தியாவில் இருந்தே வந்தன. இந்தக் காரணங்களால், இந்தியா இல்லாமல் நிற்கவோ அல்லது அதன் உறவுகளைக் காயப்படுத்தவோ முடியாது.

சீனாவுடன் நாங்கள் நீண்ட உறவுகளைக் கொண்டிருக்கிறோம். இந்தியா எமது உறவினராக இருக்கும்போது, சீனா ஒரு நண்பனாக இருக்கிறது. இரண்டு சமூகங்களுக்கும் இடையில் பௌத்தம் மூலம் தொடர்புகள் ஆரம்பித்தன. பொருளாதார ரீதியாக வளர்ச்சி பெற்று உலகின் செல்வந்த நாடுகளில் ஒன்றாக வளர்ந்திருக்கிறது. கடந்த காலத்தில் எமக்கு உணவுத் தட்டுப்பாடு ஏற்பட்டபோது, எம்மை மீட்க வந்தார்கள். இந்தியாவினால் அப்போது அதிகம் செய்ய முடியாதிருந்தது.

லருங் காரில் பௌத்த இடங்களை அழித்த சீன அதிகாரிகளை நான் கண்டிக்கிறேன். பெரும்பாலான இலங்கையர்கள் சீனாவை நண்பனாக உணர்கின்றனர். அவர்கள் எமது நண்பனாக இருந்தாலும், அம்பாந்தோட்டைத் துறைமுக நிலத்தை சீனாவுக்கு வழங்குவதை நாம் எதிர்க்கிறோம். நாம் மட்டுமல்ல ஒட்டு மொத்த நாடுமே, அரசின் இந்த முடிவை எதிர்க்கிறது - என்றார். (5)

# மட்டக்களப்பை சேர்ந்த 28பேர் இந்தோனேசியாவினால் நாடு கடத்தப்பட்டனர்

கொழும்பு, செப். 22

சட்டவிரோதமாகப் படகு மூலமாக நியூசிலாந்துக்குச் செல்வதற்காக, இந்தோனேசியாவில் தங்கியிருந்த மட்டக்களப்பைச் சேர்ந்த 28பேர் இலங்கைக்கு திருப்பியனுப்பப்பட்டுள்ளனர்.

அவர்கள், கட்டுநாயக்க பன்னாட்டு வானூர்தி நிலையத்தில், குற்றப்புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டு, மினுவாங்கொடை நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டனர்.

அவர்களைத் தலா ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான சரீரப்பிணை யில் விடுதலை செய்ய மினு வாங்கொடை நீதிவான் நீதிமன்ற நீதிவான் சிலனி சத்துரந்தி உத்தர விட்டார்.

பிணையாளர்கள் நெருங்கிய உறவினர்களாக இருக்கவேண்டும் என்று கோரிக்கை விடுத்த நீதிவான், சந்தேகநபர்களை 2018ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 6ஆம் திகதியன்று நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு கட்டளையிட்டார். (5)

# ஆயுள் தண்டனைக் கைதிகளின் சிறைக் காலத்தை மீளாய்வு செய்க

## சிறைக்கைதிகளின் உரிமைகளை காக்கும் அமைப்பு வேண்டுகோள்

கொழும்பு, செப். 22

ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ள சிறைக் கைதிகளின் தண்டனைகளை மீளாய்வு செய்து அதனைத் தளர்த்த நடவடிக்கை எடுக்குமாறு சிறைச்சாலைகள் திணைக்களத்திடம் சிறைக் கைதிகளின் உரிமைகளை காக்கும் அமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது.

அந்த அமைப்பின் செயலர் சட்டத்தரணி, சேனக்க பெரேரா இது தொடர்பில் தெரிவித்ததாவது:

தனக்கு வழங்கப்பட்டுள்ள தண்டனையைத் தளர்த்துமாறு வலியுறுத்தி ஆயுள்த் தண்டனை வழங்கப்பட்டுள்ள சிறைக் கைதிகள் அண்மையில் உணவு ஒறுப்புப் போராட்டத்தை மேற்கொண்டிருந்தனர்.

சிறைச்சாலைகள் தொடர்பான சட்டத்தின் 8ஆவது பிரிவின் கீழ் ஒரு கைதிக்கு வழங்கப்பட்டுள்ள தண்டனையை மீளாய்வு செய்து அதனைத் தளர்த்துவதற்குச் சிறைச்சாலைத் திணைக்களத்துக்கு அதிகாரங்கள் உள்ளது. ஆனால் அந்தச் சட்ட விதிமுறைகளை நடைமுறைபடுத்துவதைச் சிறைச்சாலைத் திணைக்களம் மறுத்து வருகின்றது. இதன் காரணமாக கைதிகளுக்கு அநீதி ஏற்பட்டுள்ளது.

இந்தத் திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டால் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ள கைதிகளின் சிறைத் தண்டனை 20 ஆண்டுகள் வரை குறைக்கப்படும் வாய்ப்பு உள்ளது. இதன் மூலம் தற்போது சிறைச்சாலைகளுக்குள் காணப்படும் கைதிகளின் நெரிசலைக் குறைக்க முடியும். ஆயுள் கைதிகளுக்கு வழங்கப்பட்டுள்ள தண்டனைகளை மீளாய்வு செய்து சட்ட ரீதியாகக் கைதிகளுக்கு இந்தச் சலுகையைப் பெற்றுக் கொடுக்க வேண்டும் - என்றார். (5)



# இலங்கைப் படையினருக்கு அமெரிக்கா பயிற்சி

கொழும்பு, செப். 22

இலங்கைக் கடற்படையின் மரைன் படைப்பிரிவினருக்கு, அமெரிக்காவின் மரைன் படைப்பிரிவின் அதிகாரிகள் பயிற்சி வழங்கி வருகின்றனர். வெலிசறைக் கடற்படைத் தளத்தில் இந்தப்பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றது.

கடற்படையின் மரைன் படைப்பிரிவினருக்கு, மருத்துவப் பயிற்சிகளை அமெரிக்க மரைன் படைப்பிரிவு அதிகாரிகள் வழங்கி வருகின்றனர். கடற்படையின் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள மரைன் படைப்பிரிவுக்கு அமெரிக்க மரைன் கொமாண்டோக்கள் தொடர்ச்சியாகப் பயிற்சிகளை வழங்கி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (5)

# மனித உரிமை ஆர்வலர்கள் மீதான அச்சுறுத்தல்

## இலங்கை மீது ஐ.நா.சீற்றம்

கொழும்பு, செப். 22

சிவில் சமூகப் பிரதிநிதிகள் அச்சுறுத்தப்பட்டு வருவதாக இலங்கை மீது, மனித உரிமைகளுக்கான ஐ.நாவின் உதவிச்செயலர் அன்ட்ரூ கில்மோர் குற்றம் சுமத்தியுள்ளார்.

ஜெனிவாவில் உள்ள ஐ.நா. தலைமையகத்தில் இலங்கை சிவில் சமூகப் பிரதிநிதிகள் அச்சுறுத்தப்பட்ட செய்தி தம்மைக் குழப்பத்தில் ஆழ்த்தியதாக 2017ஆம் ஆண்டு மார்ச் 22ஆம் திகதி ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் தனது உரையில் கூறியிருந்தார். அவர் இந்த விவகாரத்தை உதவிச் செயலருக்கு அனுப்பியிருந்தார்.

ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 34 ஆவது அமர்வில் கலந்து கொண்ட எஸ்.கணேசநாதன் மற்றும் சிவில் சமூகப் பிரதிநிதிகள் அச்சுறுத்தப்பட்டது தொடர்பாக ஐ.நா. சிறப்பு அறிக்கையாளர்களும் விசாரித்திருந்தனர்.

இந்த நிலையில், மனித உரிமைகளுக்கான ஐ.நா.வின் உதவிச்செயலர் அன்ட்ரூ கில்மோர் நேற்றுமுன்தினம் இது தொடர்பான அறிக்கையை வெளியிட்டுள்ளார்.

கடந்த மார்ச் அமர்வில் இலங்கையின் தற்போதைய மனித உரிமைகள் நிலமைகள் தொடர்பாகக்கணேசநாதன் உரையாற்றியிருந்தார். அதன் பின்னர் அவரது வீட்டுக்கு குற்றப் புலனாய்வுப் பிரிவினர் சென்று உறவினர்களை மிரட்டியுள்ளனர்.


இது தொடர்பில், இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்படும் நேரம் வரையில், இலங்கை அரசிடமிருந்து எந்த அறிக்கையும் கிடைக்கவில்லை. மனித உரிமைகள் தொடர்பாக ஐ.நாவுடன் ஒத்துழைக்கின்ற மனித உரிமை ஆர்வலர்கள் அச்சுறுத்தலை எதிர்கொள்வது உலகெங்கும் அதிகரித்து வருகிறது. பயணத் தடைகள், சொத்துக்கள் முடக்கம், தடுத்து வைப்பு, சித்திரவதைகள் போன்ற மிரட்டல்கள், அச்சுறுத்தல்களைத் தனிநபர்களும், குழுக்களும் சந்தித்துள்ளனர்.

இது வெளிப்படையாக வெறுக்கத்தக்க செயல். ஒவ்வொரு ஆண்டும், இத்தகைய மிரட்டல்கள் குறித்த அறிக்கைகளைச் சமர்ப்பிக்க நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளோம். அந்தந்த அரசுகள், ஐ.நா. நிறுவனங்களுடனும், பொறிமுறைகளுடனும் ஒத்துழைக்க வேண்டும்.

மக்கள், உரிமை, மதிப்புக்கு எதிரான இந்த நச்சுப்பின்னணியை மௌனமாகப் பார்த்துக் கொண்டிருக்க முடியாது.

இத்தகைய அச்சுறுத்தல்கள் அதிகரித்து வரும் நிலையில், இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு இன்னமும் விரிவான அணுகுமுறை அவசியம் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார். (5)

# ரொஹிங்யர்களின் அகதி முகாமில் நிலச்சரிவு ஏற்படும் அபாய நிலைமை



டாக்கா, செப். 22
பங்களாதேஷில், ரொஹிங்யர்கள் தங்க வைக்கப்பட்டுள்ள அகதிகள் முகாமில் நிலச்சரிவு ஏற்படக்கூடிய சாத்தியம் உள்ளது என்று பன்னாட்டு ஊடகங்கள் பலவும் எச்சரித்துள்ளன.

மியன்மார் இராணுவத்தின் மீது கடந்த மாதம் 25ஆம் திகதி ரொஹிங்ய இனக் கிளர்ச்சிக் குழுவொன்று நடத்திய தாக்குதலில் 10 சிப்பாய்கள் உயிரிழந்தனர். இதையடுத்து ரொஹிங்யர்களுக்கு எதிரான நடவடிக்கைகளைக் கடும் முனைப்பில் மேற்கொண்டு வருகிறது மியன்மார் இராணுவம். தினம்தினம் ஆயிரக்கணக்கான ரொஹிங்யர்கள் பங்களாதேஷுக்குச் சென்று தஞ்சமடைகின்றனர். அவ்வாறு செல்பவர்கள் பங்களாதேஷ் எல்லையில் தங்கவைக்கப்படுகின்றனர். இதுவரை 4 லட்சத்து 50 ஆயிரம் ரொஹிங்யர்கள் அவ்வாறு பங்களாதேஷுக்குச் சென்றுள்ளனர். அவர்களுக்காக 14 ஆயிரம் அகதி முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்தப் பகுதியில் தற்போது கடும் மழை பெய்து வருகிறது. மண்மேடான இடங்களிலும் முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன. எந்நேரமும் நிலச்சரிவு அபாயம் உள்ளதால் பலரின் உயிருக்கு உத்தரவாதம் இல்லாத நிலை அங்குள்ளது என்று தெரியவருகிறது. (ம)

## வடகொரியாவின் அச்சுறுத்தலை அடுத்து ஏவுகணைத் தடுப்பை ஜப்பான் அமைத்தது



டொக்கியோ, செப். 22
வடகொரியாவின் அச்சுறுத்தலை சமாளிக்க ஜப்பான் இராணுவம் ஹொக்காய்டோ தீவில் அதிநவீன ஏவுகணைத் தடுப்பு சாதனத்தை (தாட்) நிறுவியுள்ளது. இந்த ஏவுகணைத் தடுப்புச் சாதனம் நகரும் தன்மையைக் கொண்டது என்றும் தெரிவிக்கப்பட்டது.
பன்னாட்டுச் சட்டதிட்டங்களை மீறிய ஏவுகணைச் சோதனைகளை தொடர்ந்தும் அரங்கேற்றி வருகிறது வடகொரியா. இந்த மாதத்தில் மட்டும் வடகொரியா இரண்டு ஏவுகணைச் சோதனைகளை ஜப்பானின் வான் பரப்புக்கு மேலாக நடத்தியது. ஜப்பானைச் சீண்டும் வகையிலும் தனது கருத்துக்களைப் பதிவு செய்தது. ஜப்பானின் தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டதை அடுத்து அந்த நாடு ஏவுகணைகளை இடைமறுத்துத் தாக்கி அழிக்கவல்ல 'தாட்' எனும் ஏவுகணைத் தடுப்பை அமைத்துள்ளது. ஹொக்காய்டா தீவில் இந்த அதிநவீன ஏவுகணை தடுப்பு சாதனம் நிறுவப்பட்டுள்ளது. ஜப்பானின் இராணுவப் பலமும் அதிகரிக்கப்பட்டு வருகிறது. (ம)



பௌத்தர்களை பெரும்பான்மை இனமாகக் கொண்ட மியன்மாரில் ரொஹிங்யர்கள் இனச் சுத்திகரிப்புக்கு உள்ளாக்கப்படுகின்றனர். மியன்மார் இராணுவத்தால் ரொஹிங்யர்களின் வீடுகள் தீக்கிரையாக்கப் படுகின்றன. இந்தக் கலவரத்தில் சுமார் 2 ஆயிரம் ரொஹிங்யர்கள் உயிரிழந்துள்ளனர். சுமார் 4 லட்சம் ரொஹிங்யர்கள் அகதிகளாக பங்களாதேஷுக்குச் சென்றுள்ளனர். "எனது வீட்டுக்கு மியன்மார் இராணுவமே தீ வைத்தது. வீடு தீக்கிரையாகும்போது நானும் வீட்டுக்குள் இருந்தேன். இதனால் எனது உடலிலும் ஏராளமான தீக்காயங்கள் ஏற்பட்டுள்ளன" என்று சாட்சியமளித்துள்ளார் ஷகேடா என்ற 40 வயதுப் பெண். இவர் தற்போது பங்களாதேஷ் அகதிகள் முகாமில் தஞ்சமடைந்துள்ளார். (ம)



# மெக்சிக்கோ நிலநடுக்கம் சாவு 280ஆக உயர்ந்தது

மெக்சிக்கன் சிற்றி, செப். 22
மெக்சிக்கோவில் நேற்றுமுன்தினம் நள்ளிரவு (இலங்கை நேரப்படி) 7.1 ரிச்டர் அளவில் ஏற்பட்ட பெரும் நிலநடுக்கத்தை அடுத்து உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 280ஆக அதிகரித்தது.
தலைநகர் மெக்சிக்கன் சிற்றியில் தாக்கம் மிகையாக உணரப்பட்டது. மிகப்பெரும் கட்டடங்களும் சீட்டுக் கட்டாக சரிந்து தரை மட்டமாயின. நேற்று மதியம் வெளியான தகவலின்படி உயிரிழப்பு எண்ணிக்கை 280ஆக அதிகரித்துள்ளது. சுமார் 250 பேர் வரை மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். பலரின் நிலைமை கவலைக்கிடம் என்பதால் உயிரிழப்பு மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளது என்று கருதப்படுகிறது. கட்டட இடிபாடுகளுக்குள் சிக்கியிருந்த 61 பேர் மீட்கப்பட்டுள்ளனர். மீட்புப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஒரு மில்லியன் அமெரிக்க டொலர்களை நன்கொடையாக வழங்குவதாக கூகிள் நிறுவனம் அறிவித்துள்ளது. மெக்சிகோவில் கடந்த 1985ஆம் ஆண்டு அதாவது 32 ஆண்டுகளுக்கு முன் இதே நாளில் மெக்சிகோ சிட்டியில் கடுமையான நிலநடுக்கம் ஏற்பட்டு ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

## ஸ்பெய்னிலிருந்து வெளியேறினார் வடகொரியத் தூதுவர்

மட்ரிட், செப். 22
ஸ்பெய்னுக்கான வடகொரியத் தூதுவரை நாட்டை விட்டு வெளியேறுமாறு உத்தரவிட்டதை அடுத்து அவர் நேற்றுமுன்தினம் வடகொரியாவுக்குத் திரும்பினார் என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.
பன்னாட்டுச் சட்டதிட்டங்களை மீறிய வடகொரியாவின் அணுவாயுதச் சோதனைகளை கடுமையாக எதிர்க்கும் நாடுகளில் ஸ்பெய்னும் ஒன்று. வடகொரியாவுக்கு எதிராக காலாகாலமாக ஸ்பெய்ன் கருத்துத் தெரிவித்து வருகிறது. இந்த நிலையில் அந்த நாடு தனக்கான வடகொரியத் தூதுவரை நாட்டை விட்டு வெளியேறுமாறு உத்தரவிட்டிருந்தது. இந்த மாத இறுதிவரை காலக்கெடு விதிக்கப்பட்டது. எனினும் நேற்றுமுன்தினம் வடகொரியத் தூதுவர் வெளியேறினார் என்று தெரிவிக்கப்பட்டது. (ம)




சிறுமியை வல்லுறவுக்கு உட்படுத்திக்

## பொதுமக்கள் ம… நிறைவேறியது …

ஈரானில் சம்பவ…

தெக்ரேன், செப். 22
ஈரானில், சிறுமியை பாலியல் பலாத்காரம் செய்து கொன்றவரை பொதுமக்கள் மத்தியில் தூக்கிலிட்ட சம்பவம் நடந்துள்ளது.
ஈரானின் அர்டிபில் மாகாணத்தில், 7 வயதான சிறுமியை பாலியல் பலாத்காரம் செய்து கொன்ற குற்றத்துக்கு இஸ்மாயில் (வயது42) என்ற நபர் நேற்றுமுன்தினம் தூக்கிலிடப்பட்டார். இஸ்மாயில் தூக்கிலடப்பட்டபோது பொதுமக்கள் கரகோசம் எழுப்பி பலத்த ஆரவாரத்தை வெளிப்படுத்தினர் என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.
இந்த தூக்குத் தண்டனை நிறைவேற்றம் குறித்து அரசு தரப்பு வழக்கறிஞர் செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கையில்,

"பொதுமக்க…
நிலையிலிரு…
முன் இந்த…
வேற்றப்பட்ட…
ஏழு வயதான…
ஜூன் மாதம்…
போயுள்ளார்…
வலைதளங்க…
பான செய்திக…
நிலையில் சிறு…
காரம் செய்ய…
வந்தது. குற்ற…
தனது குற்றத்…
டுத்தே தண்ட…
ளது. எனினும்…
ரானவர்கள் ஈ…
கருத்துத் தெரி…

## ரஷ்… 850…

கடந்த…



டமஸ்கஸ், செ…
சிரிய அதிபர் அ…
செயற்பட்டுவ…
எதிராக ரஷ்ய…
முரட்டுத்தன…
கிளர்ச்சியாள…
னர். 24 மண…
தலை நடத்தி…
சிரிய அதிபர் அ…
சேர்ந்தவர். அ…
டும் என்று தெ…
சேர்ந்த கிளர்…

# ஷ்யா ஆக்ரோசத் தாக்குதல் 850 கிளர்ச்சியாளர்கள் சாவு

## ந்த 24 மணித்தியாலத்தில்



கஸ், செப். 22
அதிபர் அல் அசாத்துக்கு எதிராகச் ற்பட்டுவரும் கிளர்ச்சிக் குழுவுக்கு ாக ரஷ்ய வான்படை நடத்திய டுத்தனமான தாக்குதலில் 850 ர்ச்சியாளார்கள் உயிரிழந்துள்ள 24 மணிநேரத்தில் இந்தத் தாக்க ல நடத்தி முடித்துள்ளது ரஷ்யா.

அதிபர் அல் அசாத், சியா பிரிவைச் ந்தவர். அவர் பதவி விலகவேண் என்று தெரிவித்து சன்னி பிரிவைச் ந்த கிளர்ச்சிக் குழுக்கள் போரிட்டு வருகின்றன. அரசுக்கு ஆதரவாக ரஷ்யா உள்ளது. சிரிய கிளர்ச்சிக் குழுவுக்கு அமெரிக்கா பெரும் இராணுவ உதவிகளையும், நிதி உதவிகளையும் செய்து வந்தது. அமெரிக்க முன்னாள் அதிபர் ஒபாமாவே ஆயுதக் குழுவுக்கு உதவி செய்யும் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.

இந்தத் திட்டம் வீண்வேலை என்று தெரிவித்த ட்ரம்ப், தற்போது இந்தத் திட்டத்தை இல்லாமல் செய்துள்ளார். இதையடுத்து கிளர்ச்சிக் குழு மீது கடும் தாக்குதல்களை தொடர்ந்து நடத்தி வருகிறது ரஷ்யா.

நேற்றுமுன்தினம் ரஷ்யப் படைகள் எதிர்பாராத விதமாக கடும் வான்தாக்குதல்களை நடத்தின. இதில் 850 கிளர்ச்சியாளர்கள் உயிரிழந்தனர் என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. பொதுமக்கள் தரப்பிலும் உயிரிழப்பு இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ள போதிலும் அது குறித்த உத்தியோகபூர்வத் தகவல்கள் எதுவும் வரவில்லை. (ம)



# முட்டையிடும் மலை!

பீஜிங், செப். 22
சீனாவில் உள்ள ஒரு குன்றை, 'முட்டையிடும் மலை' என்று மக்கள் அழைக்கிறார்கள்.

கைஸொவ் மாகாணத்தில் உள்ள சான் டா யா குன்றில் 30 ஆண்டுகளுக்கு ஒருமுறை கல் முட்டைகள் வெளிவருவதாகச் சொல்கிறார்கள். இந்த விடயம் தற்போது பன்னாட்டு ஊடகங்களின் கவனத்தைப் பெற்றுள்ளது.

9 அடி உயரமும் 65 அடி நீளமும் கொண்ட சமதளமற்ற குன்றில் கோள வடிவ முட்டைகள் வெவ்வேறு அளவுகளில் உருவாகியிருக்கின்றன. குன்றுக்கு அருகில் இருக்கும் குலு கிராமத்தைச் சேர்ந்த மக்கள், இந்த மலை நன்றாகச் சாப்பிட்டு, 30 ஆண்டுகளுக்கு ஒருமுறை கல் முட்டைகளை இடுகிறது" எனச் சொல்கிறார்கள். "இந்த விசித்திரமான முட்டை இடும் மலையை ஆய்வு செய்வதற்குப் புவியியலாளர்கள் மிகவும்சிரமப்படவேண்டியிருக்கிறது. நகரிலிருந்து நீண்ட தூரம் பயணம் செய்து, ஒதுக்குப்புறமான குன்றை அடையவேண்டும். குன்று கடினமான பாறைகளால் ஆனது.

எல்லா முட்டைகளும் ஒரே விதமான பாறையால் உருவாகவில்லை. அவற்றில்சிலசுண்ணாம்புப் பாறைகளால் ஆனவை.

இதுவரை, இந்தக் குன்றிலிருந்து ஏன் முட்டை வடிவப் பாறைகள் உருவாகின்றன என்ற கேள்விக்கு பதில் கிடைக்கவில்லை. இன்னும் சில தசாப்தங்கள்ஞக்குப் பிறகு கல் முட்டைகள் எப்படி உருவாகின்றன என்று தெரியவரலாம்என்கிறார்கள் ஆய்வாளர்கள்.

பல தலைமுறைகளாக இந்தக் குன்று முட்டைகளை இடுவது குறித்து குலு கிராம மக்கள் அறிந்து வைத்திருக்கின்றனர். அடிக்கடி குன்றுக்கு வந்து, முட்டைகளைத் தொட்டு வணங்குகிறார்கள். 'கடவுள் முட்டைகள்' என்றும் 'அதிர்ஷ்டம் தரும் முட்டைகள்' என்றும் நம்புகிறார்கள். கிராமத்தில் வசிக்கும் 125 குடும்பங்களும் குறைந்தது ஒரு கல் முட்டையையாவது வைத்திருக்கின்றன. மற்ற கிராமங்களில் இருந்தும் முட்டைகளை எடுத்துச் செல்கிறார்கள். சமீபத்தில் இந்தக் குன்று பிரபல சுற்றுலாத் தளமாக மாறிவிட்டது பெரும்பாலான கல் முட்டைகள் விற்பனை செய்யப்பட்டு விட்டன. 70 கல் முட்டைகளே தற்போது குலு கிராமத்தில் இருக்கின்றனவாம். (ம)



ித்திக் கொன்றவருக்கு

# மத்தியில் து தூக்கு!

## பவம்

துமக்களை அவர்களின் துன்பமான லயிலிருந்து மீட்கவே அவர்களின் இந்த தூக்குத் தண்டனை நிறை ற்றப்பட்டது" என்றார்.

வயதான அடனா அஸ்லானி கடந்த மாதம் வீட்டிலிருந்து காணாமல் யுள்ளார். பின்னர் தொடர்ந்து சமூக லைதளங்களில் அந்த சிறுமி தொடர் செய்திகள் பகிரப்பட்டு வந்தன. இந்த லயில் சிறுமி அடனா பாலியல் பலாத் ம் செய்யப்பட்டு கொல்லப்பட்டது தெரிய ந்தது. குற்றம் சாட்டப்பட்ட இஸ்மாயில் து குற்றத்தை ஒப்புக் கொண்டதைய த்த தண்டனை நிறைவேற்றப் பட்டுள் எனினும் தூக்குத் தண்டனைக்கு எதி வர்கள் ஈரான் அரசுக்கு எதிராகவும் ந்துத் தெரிவித்துள்ளனர். (ம)



உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## விழித்துக்கொள்வோம் விவாதிப்போம்

நீண்ட இழுபறிகள், சிக்கல்கள், அழுத்தங்களுக்குப் பின்னர் புதிய அரசமைப்புத் தொடர்பான இடைக்கால அறிக்கை நேற்று நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டது. பிரிட்டிஷாரின் அடிமைத்தனத்தில் இருந்து இலங்கை விடுவிக்கப்பட்டதன் பின்னர் உருவாக்கப்படவுள்ள மூன்றாவது அரசமைப்பு இது. இதற்கு முன்னர் உருவாக்கப்பட்ட இரு அரசமைப்புகளையும் முற்றாக நிராகரித்ததைப் போன்று அல்லாமல் தமிழர் தரப்பின் பங்களிப்புடன், உள்ளீடுகளுடன் உருவாக்கப்படுகின்ற முதல் அரசமைப்பு இது. எனவே இது உறுதியான ஒன்றாகப் பரிமளிப்பதற்கான வாய்ப்பு அதிகமுள்ளது.

இந்த இடைக்கால அறிக்கையை உருவாக்கிய வழிநடத்தல் குழுவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் நீண்ட பழுத்த அரசியல் அனுபவசாலியும் இதற்கு முன்னர் இரு அரசமைப்புக்கள் உருவாக்கப்பட்ட போதும் அரசியலில் இருந்தவருமான இரா.சம்பந்தனும் நீண்ட பங்களிப்பை வழங்கியுள்ளார். எனவே இந்த அர சமைப்பு நிறைவேறும்போது அதனை நிராகரிக்க முடியாத, அதன் பின்னரும் சிங்களத் தரப்புகளை மட்டும் குறைசொல்ல முடியாத நிலையைத் தமிழர்கள் எட்டுவர்.

இத்தகைய உறுதியான ஓர் அரசியல் களநிலையில் புதிய அரசமைப்புக் குறித்து ஒவ்வொரு தமிழர்களும் அக்கறை செலுத்த வேண்டியதும் அது பற்றிக் கலந்துரையாடி தேவையான அரசமைப்பை உருவாக்கிக்கொள்ளவேண்டியதும் அவசியம். இது அரசியல் கட்சிகளின் கடமை என்று எல்லாப் பொறுப்பையும் அவற்றிடம் மட்டுமே விட்டுவைத்துவிட்டு, இறுதியில் அரசியல்வாதிகள் எம்மை ஏமாற்றிவிட்டார்கள் என்று புலம்புவதில் அர்த்தமில்லை. அதற்கு இடம்கொடாதவகையில் அரசமைப்பு உருவாக்கம் குறித்த கலந்துரையாடல்கள் மக்கள் மத்தியில் பரவலாக நடக்க வேண்டும். அதனடிப்படையில் அரசமைப்புக்கான இறுதி வடிவம் தாயாரிக்கப்படுவதற்கான அழுத்தம் கொடுக்கப்பட வேண்டும்.

அப்படி மக்கள் மத்தியில் நன்கு கலந்துரையாடப்பட்டு முன்மொழியப்படும் ஒரு அரசமைப்பு வரைவு கொழும்பு ஆட்சியாளர்களால் நிராகரிக்கப்படும் பட்சத்தில் அத்தகைய அரைகுறைத் தீர்வை வழங்கும் அரசமைப்பை நிராகரிப்பது தமிழ் மக்களுக்கும் இலகுவாக இருக்கும். அத்தகைய ஒரு தீர்மானத்துக்கு வருவதற்கு முன்னர் இடைக்கால அறிக்கையை முழுவதுமாகப் படித்துப்பார்ப்பதும் அது பற்றிய விவாதங்களை நடத்துவதும் ஆய்வு செய்வதும் விழிப்புணர்வைப் பெறுவதும் கட்டாயம்.

நாளை உங்கள் வாழ்க்கையையும் வாய்ப்புகளையும் உங்கள் பிள்ளைகளின் எதிர்காலத்தையும் நல்ல வழியிலோ கெட்ட வழியிலோ பாதிக்கப்போகும் இந்த விடயம் குறித்து ஒவ்வொரு தமிழ் மகனும் அக்கறைப்படவேண்டும், இல்லையேல் அதன் விளைவுகளையும் நாமே அனுபவிக்கப்போகின்றோம். அத்தகைய கலந்துரையாடல்களையும் ஆய்வுகளையும் ஊக்கப்படுத்துவதற்கு உதயன் தயாராகவே இருக்கின்றது.

முன்வைக்கப்பட்டுள்ள இடைக்கால அறிக்கையில் நல்ல விடயங்கள் பலவும் இருக்கின்றன. தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ள முடியாத விடயங்களும் இருக்கின்றன. தமிழர்கள் எதிர்பார்த்தவைகள் இல்லாத நிலையும் இருக்கின்றன. இவையெல்லாவற்றையும் சீர்ப்படுத்துவதற்கு, அரசியலுக்கு அப்பால், அரசியல் கட்சிகளுக்கு அப்பால், சுயநலத் திசைப்படுத்தல்களுக்கு அப்பால் நேர்மையாக இந்த ஆவணத்தை அணுகுவதும் ஆராய்வதும் முக்கியம். மக்கள் விழித்துக்கொள்ளும் போதே அது நடைபெற முடியும். இப்போதும் விழிக்கத்தவறுவோமானால் இன்னுமொரு அரை நூற்றாண்டு காலத்துக்கு நாம் பின்னடைவுகளையே சந்திக்கவேண்டியிருக்கும். எனவே இப்போதே விழித்துக்கொள்வோம். விவாதிப்போம்.



"எமது மண்ணின் விடுதலையை நேசிக்காத எவரும் இம் மண்ணை ஆள அருகதையற்றவர்கள்."
- திலீபன்

# எங்கள் முற்றத்தி(ன்)ல் விடுதலைச் சிட்டென தியாக தீபம் நாதமுறுகிறது

செ.செந்தோழன்

"இனவிடுதலைப் போராட்டம்" என்பது அது எவ்வகையில் அமைந்தாலும், குறித்த அந்த இன மக்களின் பூரண ஆதரவு இல்லாமல் மேற்கொள்ள முடியாத ஒன்று. ஒட்டுமொத்த மக்களும் விடுதலையென்ற ஒரே இலட்சியத்துக்காகத் தமது பங்களிப்பைச் செய்ய முன்வர வேண்டும். அவ்வாறு முன்வரும் போதுதான், விடுதலைக்கான மக்கள் புரட்சியும், அதன்மூலமான விடுதலையும் சாத்தியப்படும்.

ஈழ விடுதலைப் போராட்டம் தியாகங்களின் சிகரங்களைத் தொட்ட சந்தர்ப்பங்களில், அவற்றில் தியாகச் செம்மல் லெப். கேணல் திலீபனின் தியாகம் மிகமுக்கியமானதாகும். தமிழர்களின் விடுதலைப் போராட்டம், பல சந்தர்ப்பங்களில் ஆயுத ரீதியிலான வன்முறை வழியைத் தவிர்த்து அகிம்சை வழியைக் கடைப்பிடிக்க முனைந்த போதெல்லாம், எதிர்மறையான விளைவுகளும் ஏமாற்றங்களுமே பரிசாகக் கிடைத்தன.

### அகிம்சையின் பின்னான கோரமுகம்

அகிம்சைக்கே அடையாளமெனக் கருதப்பட்ட பாரத தேசம், தமிழர்களின் அகிம்சைப் போராட்டத்தைக் காலடியில் போட்டு மிதித்தது. ஒரு துளி நீர் கூட அருந்தாமல் உணவு முழுவதுமாக ஒறுத்த திலீபனின் உடல் வாடி வதங்கி, மெலிந்து சுருண்டு, நிலை குலைந்து நினைவிழந்துபோய் அந்த உன்னத ஆத்மா, அவனது உடலைவிட்டுப்பிரிந்த போதும் மௌனமாய் இருந்து ஒட்டுமொத்தத் தமிழினத்திற்கே துரோகம் செய்ததன் மூலம் 'காந்தியம்' என்ற திரைக்குப் பின்னாலிருந்த தனது உண்மையான கோர முகத்தை வெளிக்காட்டியது காந்திதேசம்.

அன்று வெளிக்காட்டத் தொடங்கிய காந்தி தேசத்தின் துரோக நாடகம், இன்றுவரை தொடர்கதையாகத் தொடர்கின்றது. ஈழத்தின் மேல் இந்தியாவுக்கு அப்படி என்னதான் கோபம்...? காரணம் கேட்டால், ராஜீவ்காந்தி படுகொலை, இந்தியத் தேசியம், பிராந்திய நலன் என காரணமில்லாத தோரணங்களை, வார்த்தை அலங்கரிப்பாய், வாய் வீரத்தில் தொங்கவிடுவார்கள் இந்தக் காந்தியவாதிகள். இந்தப் போலிக் காந்தியவாதிகளுக்குப் புரியுமா எம் வலிகளும் வேதனைகளும்...? இவர்களுக்குத் தெரியுமா, நாம் முகம் கொடுத்த இழப்புக்களும் அவலங்களும்...? என்ன சொல்ல...! அகிம்சை எனும் உயரிய ஒழுக்கத்தின்பால் இயங்குவதாக காட்டிக்கொண்டிருந்த இந்தியா, தனது கோரமுகத்தைக் காட்டியது.

### திலீபன் கொண்ட தியாக வேள்வி

நல்லூரில் 1985 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 15 ஆம் திகதி அன்று ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து திலீபன் சாகும்வரை உணவு ஒறுப்புப் போராட்டத்தை ஆரம்பித்தான். ஒரு துளி நீர் கூட அருந்தாது பன்னிரண்டு நாள்கள் அந்தத் தியாக வேள்வியில் மெழுகாய் உருகினான். அவன் நேசித்த மக்கள் அலையலையாய் அவன் முன் திரண்டார்கள். அவன் மெல்ல மெல்ல உருகி அணைந்து கொண்டு போவதைக் கண்டு துடித்தார்கள். அந்த மக்களின் துடிப்பைக் கண்டு அவனால் பேச முடியாத நிலையிலும் பேசவேண்டும் என்கிற உத்வேகத்தோடு அவன் வார்த்தைகளை மெல்லுகின்றான். "நான் இறந்து விண்ணிலிருந்து அங்கே உள்ள என் நண்பர்களுடன் சேர்ந்து தமிழீழம் மலரப்போகும் அந்த நாளை எதிர் பார்த்துக்கொண்டேயிருப்பேன். ஒரு புனித இலட்சியம் நிறைவேற வேண்டும் என்பதற்காகத் தான் எங்களை நாங்கள் வருத்திக்கொண்டு உணவு ஒறுப்புப் போராட்டத்தை மேற்கொள்கிறோம்." என்று திலீபன் கூறிய அந்தத் தருணங்கள் ஆத்மங்களை ஊடாடிக் கலகலத்தன. தென்றல், விடுதலையின் நறுமணம் சூடி கண்ணீர்த் துளிகளை உப்பாறாய்க் கொட்டியது. நெஞ்சுரம் அயர்வின்றி உய்வு கொண்டு செந்தளித்தது. வீரத்தைப் பரிசளித்தது. ஆம், இத்தகைய நம்பிக்கையோடு பயணித்துவிட்ட அந்த வீரர்களின் நம்பிக்கை ஒருபொழுதும் தோற்றுவிடாது. பரிபூரண சுதந்திரத்தை எமது மக்கள் அடைந்தே தீருவார்கள். திலீபன் போன்றவர்கள் மிக அருமையானவர்களே.



### உரிமையின் வழி விசையுற்று அசைவோம்

எமது விடுதலைப் பயணம் அப்படிப்பட்டது தான். எம்மை மிகக் கடுமையாக வருத்தித் தான் அந்த உயரிய விடுதலையை வென்றெடுக்க முடியும். அதுவே பெறுமதி மிக்கதாயிருக்கும் என்பதை அவனது வாழ்க்கை எமக்கு உணர்த்துகிறது.

எந்த நேரமும் இயங்கிக்கொண்டிருக்கும் அவனது இயல்பு பாரதியார் கண்ட சிட்டுக் குருவியை எண்ணவைக்கும். அத்துணை துடிப்பு, அத்துணை வேகத்துடன் விசையுறத்திரிந்தான் திலீபன். இந்த வேகமும் துடிப்பும் எம் ஒவ்வொருவரையும் ஆளவேண்டும். அத்தகைய வீரனின் நினைவில் நனைவோம்.

# அரசியலில் மீண்டெழுவாரா மகிந்த ராஜபக்ச?

சேரலாதன்



> உள்ளூராட்சித் தேர்தல்கள் இடம்பெறுமானால் மகிந்தவின் கட்சியினர் வடக்கிலும் கிழக்கிலும் போட்டியிடுவதற்கான சாத்தியம் உள்ளதாகத் தெரிய வருகின்றது. சில இடதுசாரிக் கட்சியினரும் தமிழர் தரப்பிலிருந்து சிலரும் அந்தக் கட்சியுடன் இணைந்து போட்டியிடுவதற்கான வாய்ப்புக்களும் உள்ளன.

மகிந்த ராஜபக்ச சிறிலங்கா சுதந்திரக்கட்சியை விட்டு விலகிவிட்டார். அவரது தந்தையாரின் காலத்தில் இருந்து மகிந்தவின் குடும்பத்தினருக்கும் சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கும் இடையே ஆழமான பிணைப்பு நிலவிவந்தது. அவரது தந்தையார், பண்டாரநாயக்க குடும்பத்துடன் நெருக்கமான உறவைக் கொண்டிருந்ததுடன் அரசில் அமைச்சர் பதவியையும் வகித்தார். தற்போது சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடனான மகிந்தவின் உறவு கிட்டத்தட்ட துண்டிக்கப்பட்டுவிட்டது. புதிய கட்சியொன்றும் அவரால் உருவாக்கப்பட்டுள்ளது. ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் அங்கம் வகித்த இடதுசாரிகளும் வேறு சிலசிறியகட்சிகளும் மகிந்தவுடன் இணைந்து கொள்வதற்கான வாய்ப்பு பிரகாசமாகக் காணப்படுகின்றது.

இந்த நிலையில் உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல்கள் எதிர்வரும் டிசெம்பர் மாதம் இடம்பெறுமெனத் தெரிய வருகின்றது. தமது செல்வாக்கை தக்க வைப்பதற்காக உள்ளூராட்சித் தேர்தல்களை அவர் பயன்படுத்திக் கொள்வாரென எதிர்பார்க்கலாம்.

இதுவரையில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி மைத்திரி அணி, மகிந்த அணியென இரண்டாகப் பிளவுபட்ட நிலையில் காணப்பட்டது. இதன் காரணமாக அந்தக் கட்சித் தொண்டர்கள் குழம்பிய நிலையில் காணப்பட்டனர். ஓர் அணியிலிருந்து மற்றைய அணிக்குதாவிச்செல்கின்ற செயற்பாடுகளும் குறைவின்றி நிகழ்ந்தன. கூட்டு அரசை விரைவில் வீட்டுக்கு அனுப்பி வைப்பேன் இதோ அரசு கவிழ்ந்து விடப் போகின்றது. நான் விரைவில் ஆட்சியை அமைக்கப் போகின்றேன் என்றெல்லாம் கூறி வருவதைத் தவிர உருப்படியாக எதையும் மகிந்த சாதித்ததாகத் தெரியவில்லை. இவர் தம்மீதும் தமது தரப்பினர் மீதும் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களிலிருந்து தப்பிக்க வேண்டுமானால், தற்போதைய ஆட்சி கவிழ்ந்து தாம் ஆட்சி அமைப்பதே ஒரே வழியென அவர் நம்புகின்றார். இதற்காக எதையும் செய்வதற்கு அவர் தயாராகவே உள்ளார்.

**கட்சியின் போசகராக இருந்தும் கட்சி மாநாட்டில் கலந்துகொள்ளவில்லை மகிந்த**

அண்மையில் நடந்து முடிந்த சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் 66 ஆவது ஆண்டு நிறைவு விழாவில் மகிந்த கலந்து கொள்ளவில்லை. அந்தக் கட்சியின் போசகரான அவர் கலந்து கொள்ளாதது கட்சித் தொண்டர்களிடையே பெரும் ஆச்சரியத்தை ஏற்படுத்திவிட்டது. ஆனால் அதற்கான விடை தற்போது கிடைத்து விட்டது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து மகிந்த வெளியேறிச் சென்றுள்ளமை எதிர்காலத்தில் ஏற்படப் போகும் தீவிர அரசியல் மோதலுக்கான ஆரம்பம் எனக் கருத முடிகின்றது. அவருக்கு அவர் சார்ந்த மக்கள் மத்தியில் கணிசமான செல்வாக்கு உள்ளது. நீண்டகாலமாக அவர் அரசியலில் ஈடுபட்டிருப்பதுடன், அரச தலைவர் உட்படப் பல்வேறு பதவிகளையும் வகித்துள்ளார். இவற்றுக்கு மேலாக புலிகளுடனான போரை வெற்றி கொண்டவர் என்ற புகழும் இவருக்குண்டு. அவர் மீது ஊழல்மோசடிக்குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளபோதும் பெரும்பாலானவர்கள் அதை ஏற்றுக் கொண்டதாகத் தெரியவில்லை.

**தெற்கில் மகிந்தவின் தலைமையில் புதிய அரசியல் கட்சி உதயம்**

தெற்கின் அரசியல் நிலவரங்களைப் பார்க்கும் போது, ஐக்கிய தேசியக் கட்சி, சிறிலங்கா சுதந்திரக்கட்சி மகிந்தவின் கட்சி யென மூன்று அரசியல் சக்திகள் காணப்படுகின்றன. கூட்டு அரசில் இணைந்து செயற்படுகின்ற போதிலும் ஐக்கிய தேசியக் கட்சியும் சிறிலங்கா சுதந்திரக்க ட்சியும் எலியும், பூனையும்என்றநிலையிலேயே உள்ளன. உள்ளுக்குள் வெறுப்பை வைத்துக் கொண்டு வெளியில் ஒற்றுமையாக இருப்பதாகக் காட்டிக் கொள்ளும் அரசியலை அங்கு காணமுடிகின்றது. ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் தலைமை அமைச்சருமான ரணில் விக்கிரமசிங்கவுக்கு அரச தலைவராகும் கனவு நீண்ட காலமாகவே உள்ளது. கடந்த 2005 ஆம் ஆண்டு அவரது கனவு நனவாகியிருக்க வேண்டும். ஆனால் அந்த வாய்ப்பைப் புலிகள் தட்டிப் பறித்து விட்டனர். அரசதலைவர் பதவியை இல்லாமல் செய்கின்ற திட்டமும் அவரிடம் உள்ளது. அரசமைப்பில் உரிய திருத்தத்தை மேற்கொள்வதின் மூலமாகவே இதைச்சாதித்துக் கொள்ள முடியும். ஆனால் அதற்கான பலம் அரசுக்குக் கிடைக்குமா என்பது சந்தேகமே. மகிந்த ராஜபக்ச முழு அதிகாரங்களையும் கொண்டதொரு பதவியை வகிப்பதையே விரும்பி நிற்கின்றார்.

ஆகவே அடுத்த அரச தலைவருக்கான தேர்தல் இடம்பெறுமாயின் அவரையும் தேர்தல் களத்தில் இறக்க முடியும். சிறிலங்கா சுதந்திரக் கட்சியினரும் மகிந்தவுக்குத் தமது ஆதரவை வழங்கத் தவறமாட்டார்கள். மைத்திரிபால சிறிசேன தேர்தலில் போட்டியிடாது ஒதுங்கி நின்றால் மட்டுமே இது சாத்தியமாகும்.

**உள்ளூராட்சித் தேர்தலில் மகிந்தவின் கட்சி தமிழ்ப் பகுதிகளில் போட்டியிடும்**

உள்ளூராட்சித் தேர்தல்கள் இடம்பெறுமானால் மகிந்தவின் கட்சியினர் வடக்கிலும் கிழக்கிலும் போட்டியிடுவதற்கான சாத்தியம் உள்ளதாகத் தெரிய வருகின்றது. சில இடதுசாரிக் கட்சியினரும், தமிழர் தரப்பிலிருந்து சிலரும் அந்தக் கட்சியுடன் இணைந்து போட்டியிடுவதற்கான வாய்ப்புக்களும் உள்ளன. இதேவேளை கூட்டமைப்பின் தலைவரான சம்பந்தன் இரண்டாவது தடவையாகவும் புதிய அரசமைப்புத் தொடர்பாக மகிந்தவுடன் பேசியுள்ளார். மகிந்த முன்னர் போன்று இல்லாமல் சில விட்டுக் கொடுப்புக்களுடன் சம்பந்தருடன் பேசியுள்ளதாகத் தெரிய வருகின்றது.

உள்ளூராட்சித் தேர்தலை முன்னிட்டு மகிந்த இவ்வாறு நடந்து கொண்டிருக்கலாமென அரசியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். மகிந்தவின் தமிழர்கள் தொடர்பான எதிர்காலச் செயற்பாடுகளே அவருக்கு தமிழ் மக்களின் ஆதரவைப் பெற்றுக் கொடுக்கும். தமிழர்களை ஒதுக்கி வைத்துவிட்டு அவரால் அரசியலை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்ல முடியாது. கடந்த அரச தலைவருக்கான தேர்தல் இதைத்தான் எடுத்துக் காட்டுகின்றது.

## ஆசிரியருக்கான கடிதம்

### பொதுமக்களது பாதுகாப்பை உறுதிப்படுத்த நடவடிக்கை தேவை

வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் ஆலயச் சந்தி அருகில் (புளியங்கியான்பகுதியில்) குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்தும் முகமாக விசேட பொலிஸ் காவலரண் ஒன்று அமைக்கப்பட்டிருந்தநிலையில், அண்மையில் துன்னாலைப் பகுதி மாணவரொருவர் பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்ததாகக் கூறி அந்தக் காவலரணை இனம் தெரியாத நபர்கள் அடித்துடைத்துச் சேதப்படுத்தியிருந்தனர்.

சுமார் மூன்று மாதம் கழிந்த நிலையில்குறித்தகாவலரணை மீண்டும் நிறுவி செயற்படுத்துவது குறித்து பொலிஸ் தரப்பால் இன்றுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இந்தக் காவலரண் இயங்கிய காலப்பகுதியில் மண்கடத்தல், மரக் கடத்தல், கால்நடைகள் கடத்தல்போன்ற குற்றச்செயல்கள் ஓரளவு கட்டுப்படுத்தப்பட்ட நிலையிலேயே இருந்து வந்துள்ளன. பொதுமக்கள் தமது இரவுப்பயணங்களையும்ஓரளவு அச்சமின்றிமேற்கொள்ளமுடிந்ததையும் மறுப்பதற்கில்லை.

இந்தக் காவலரண் தற்போது செயற்படுத்தப்படாதுள்ளதால் மாலை வேளையின் பின்னர் பயணிகள் பயப்பீதியுடனேயே அந்தப் பாதையில் பயணிக்க நேர்கிறது. தற்போது பிரசித்தி பெற்றவல்லிபுர ஆழ்வார் உற்சவம் ஆரம்பமாகி உள்ள நிலையில், அடியார்கள் பெருமளவில் இவ்வீதியால் பயணிக்கும் ஏது நிலையில், இந்தப் பகுதி திருடர்களுக்குத் தமது திருட்டுக்களை மேற்கொள்ளவாய்ப்பான வெட்ட வெளிப்பகுதியாக உள்ளது. குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்தவும், பொதுமக்கள் போக்குவரத்தை அச்சமின்றி மேற்கொள்ள உதவவும் மீண்டும் காவல்துறை அதிகாரிகள் மற்றும் உயர் அரச அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து பழைய நடைமுறைப்படி குறித்த இடத்தில் பொலிஸ் சோதனைச் சாவடியைநிறுவிகுற்றச்செயல்களை தடுத்து நிறுத்தி பொதுமக்களது பாதுகாப்பை உறுதிப்படுத்த முன்வரவேண்டுமெனவேண்டிக் கொள்கிறேன்.

அன்பு, வரணி.

# இறக்குமதிப் பொருள்களின் விற்பனை தொடர்பில் விரைவில் வருகிறது சட்டம்

## தலைமை அமைச்சர் கருத்து

“ஏற்றுமதியின் மூலம் பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்கே நாம் முயற்சித்து வருகின்றோம். தேசிய உற்பத்திகளுக்கு மாறாக பன்னாட்டு முதலீட்டாளர்கள் உற்பத்தி சார்ந்து முதலீடுகளை மேற்கொள்வதற்கான அழைப்பினை விடுக்கிறோம்.



குறைந்த விலையில் இறக்குமதி செய்யப்படும் பொருள்களை இலங்கையில் விற்பனை செய்வதற்கு தடை விதிக்கும் வகையிலான சட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளது என்ற கருத்தை தலைமை அமைச்சர் ரணில் விக்ரமசிங்க வெளிப்படுத்தியுள்ளார்.
கடவத்தைப் பிரதேசத்தில் அமையப்பெற்றுள்ள புதிய தொழிற்சாலையொன்றின் ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துரைக்கும் போதே மேற்படி விடயங்கள் அவரால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.
அங்கு மேலும் கருத்துரைத்த அவர், “குறைந்த விலையில் இறக்குமதி செய்யப்படும் பொருள்களை இலங்கையில் விற்பனை செய்வதை தடுக்கும் வகையில் புதிய சட்டமொன்று கொண்டுவரப்படும்.
ஏற்றுமதிநடவடிக்கைகளில்ஈடுபடுவோருக்கு இயந்திரங்களை பெற்றுக்கொள்வது தொடர்பில் வரி விலக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.
ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை இலங்கைக்கு கிடைத்தது மட்டுமன்றி சீனா, ஜப்பான், இந்தியா போன்ற நாடுகள் இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்ள முன்வந்துள்ள நிலையில், நாட்டில் புதிய யுகம் ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது” - என்றார். (ஓ)

# பெப்ரவரி மாத பணவீக்கம் அதிகரித்துள்ளது

## தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிவரப் பணிப்பாளர் நாயகம் தெரிவிப்பு

“2017 பெப்ரவரி மாதத்தில் உணவல்லாப்பொருள்களின் செலவுப் பெறுமதி அதிகரிப்புக்கான காரணமாக கல்வி,மின்,வீடு,எரிவாயு, தளபாடம், குடிசார் உபகரணம் மற்றும் வழமையான குடிசார் பராமரிப்பு, ஆடை, நானாவிதப் பொருள்களும் சேவைகளும் ஆகிய பிரிவுகளில் ஏற்பட்ட செலவுப் பெறுமதியின் அதிகரிப்புகள் குறித்துக்காட்டப்பட்டுள்ளன.

தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் அடிப்படையான வருடத்தின் மீதான பணவீக்கம் நடப்பாண்டின் மார்ச் மாதத்தில் சிறிய அதிகரிப்பினை பதிவு செய்துள்ளதென தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிவரப் பணிப்பாளர் நாயகம் அமர சதரசிங்க தெரிவித்துள்ளார்.
கடந்த ஜனவரி மாதத்தில் 6.5 வீதமாக இருந்த பணவீக்கம் நடப்பாண்டின் பெப்ரவரி மாதத்தில் சிறிய அதிகரிப்பினை வெளிக்காட்டி 8.2 வீதமாகப் பதிவாகியுள்ளது.
தவிர தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் தொடர்பான அறிக்கையில் பின்வரும் விடயங்களும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.
நடப்பாண்டின் பெப்ரவரி மாதத்தில் உணவு மற்றும் உணவல்லாப் பிரிவுகளிலிருந்து பணவீக்கப் பங்களிப்பு முறையே 4.5 வீதம், 3.8 வீதமாக இருந்தது. 2016 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில் நிலவிய ஆகக் குறைந்த விலை மட்டங்களை பிரதிபலிக்கும் வகையில் பணவீக்கத்திற்கான இந்த இரு பிரிவுகளினதும் பங்களிப்புகள் முறையே 0.3 வீதம், 2.0 வீதமாகக் காணப்பட்டுள்ளது.
கடந்த பெப்ரவரி மாதத்தில் பதிவாகிய தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் 119.9 ஆக காணப்படுகிறது. இருப்பினும் தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் மாதம் மீதான மாத மாற்றங்கள் என்ற வகையிலே ஒப்பிடும் போது கடந்த ஜனவரி மாதத்தில் பதிவாகிய தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் 119.3 இருந்து 2017 பெப்ரவரி மாதத்தில் 119.9 ஆக அதிகரித்துள்ளது. இதனை ஜனவரி மாதத்துடன் ஒப்பிட்டு நோக்கும் போது 0.6 சுட்டெண் புள்ளி அல்லது 0.5 சதவீத அதிகரிப்பை வெளிக்காட்டியுள்ளது.
அதேபோன்று அரிசி, தேசிக்காய், வாழைப்பழம், பச்சை மிளகாய், உருளைக்கிழங்கு, மைசூர்ப் பருப்பு, செத்தல் மிளகாய் மற்றும் மிளகாய்த் தூள் ஆகியவற்றின் விலை நிர்ணய வீழ்ச்சிக்கு உணவுப்பொருள்களின் செலவுப் பெறுமதி.வீழ்ச்சியே காரணமெனக் கூறப்பட்டுள்ளது. (ஓ)

# வங்கியல்லாத நிதிச்சேவைகள் துறையில் தங்க விருது

## சி.டி.பி நிறுவனம் பெற்றுக்கொண்டது

CDB
Citizens Development
*Your Friend*

தேசிய வர்த்தக சம்மேளனத்தின் மூலம் ஒழுங்கு செய்யப்பட்ட தேசிய வர்த்தகச்சிறப்பு விருதுகள் விழாவில் வங்கியல்லாத நிதிச்சேவைகள் துறையில் சி.டி.பி நிறுவனம் தங்க விருதைப் பெற்றுக் கொண்டுள்ளது.
நிர்வாக நடைமுறைகளை உறுதிப்படுத்துதலில் கொண்டுள்ள நிலைபேறான தன்மைகள், கூட்டாண்மை நிர்வகித்தல் தனித்தன்மைகள் என்பவற்றுக்காக இந்த சிறப்பு விருதை சி.டி.பி நிறுவனம் பெற்றுக்கொண்டுள்ளது.
இது தொடர்பில் சி.டி.பி இன் பணிப்பாளரும் தலைமை நிறைவேற்று அதிகாரியுமான மகேஷ் நாணயக்கார கருத்துரைக்கையில்,
“எமது நிதிசார் தளத்தில் மட்டுமன்றி எமது வலிமையுடன் இணைக்கப்பட்ட சீரான முடிவுகளை நாம் வெளிப்படுத்தி வருகிறோம்.சமூக மேம்பாடு தொடர்பிலான கரிசனை மூலம் அடிப்படை நிதி உள்ளடக்கத் தத்துவத்தை பிரதிபலித்து வருகிறோம்.
முக்கிய அம்சங்களான உறுதித்தன்மை மற்றும் நீடிப்பு போன்றவற்றை இந்த விருது அங்கீகரித்துள்ளது. தேசிய அபிவிருத்திக்கு பங்களிப்பு வழங்கும் மக்களின் நீடித்த பொருளாதார மேம்பாட்டைக் கட்டியெழுப்பும் வகையிலான வர்த்தகத்தை நாம் முன்னெடுத்து வருகிறோம்” என்றார்.
மேற்படி விருது வழங்கல் முயற்சியானது தெரிவு செய்யப்பட்ட பிரிவுகளில் ஒட்டுமொத்த செயற்திறனை வெளிப்படுத்தும் நிறுவனங்களை தேசிய வர்த்தக மேன்மை விருதுகள் ஊடாக அங்கீகரிப்பதுடன் வெற்றியீட்டும் நிறுவனங்கள் தொழிற்றுறைக்கு முன்மாதிரியான வகையிலே நிலைநிறுத்தப்படுகிறது. இந்த அங்கீகாரம் என்பது உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ரீதியில் நாட்டினுள்ளான முதலீடுகளை ஈர்ப்பதுடன் தரம், புத்துருவாக்கம், உற்பத்திச் செயற்பாடுகளின் விருத்தி மற்றும் வெளிப்படைத்தன்மை போன்றவற்றை தொடர்ச்சியாக ஊக்குவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஓ)

# நுகர்வோர் விலை மாதிரிகளின் மதிப்பீடு துரித அதிகரிப்பு

கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் மேற்கொண்ட அளவீடுகளின் பிரகாரம் இலங்கையில் நுகர்வோர் விலை மாதிரிகள் கடந்த ஆறு மாத காலப்பகுதியில் துரித அதிகரிப்பினை வெளிக்காட்டியுள்ளது.
கடந்த ஜனவரி மாதத்திலே நுகர்வோர் விலை மாதிரிகள் 5.5 வீத அதிகரிப்பாக பதிவாகியுள்ளது. குறிப்பாக கடந்த டிசெம்பர் மாதத்திலே மேற்படி மாதிரியானது 4.5 வீதமாகப் பதிவாகியிருந்தது. அத்துடன் மீள் பார்வைக்குட்படுத்தப்பட்ட ஆண்டிறுதி அறிக்கை மற்றும் சந்தைப் பரம்பல் என்பவற்றின் கீழ் இந்த மாற்றங்கள் கண்டுகொள்ளப்பட்டுள்ளது. இந்தத் தகவலை தொகை மதிப்பீடு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் தெரியப்படுத்தியுள்ளது.
உணவுப்பொருள்கள்,எரிபொருள்,போக்குவரத்து,அரிசி மற்றும் தேங்காய் தவிர்ந்த அடிப்படைப் பணவீக்கம் என்பது கடந்த ஜனவரி மாதத்தில் 7 வீதமான அதிகரிப்பினை பதிவுசெய்துள்ளது. கடந்த டிசெம்பர் மாதம் காணப்பட்ட 5.8 வீத பணவீக்க மதிப்பீட்டுடன் ஒப்பிடுகையிலேயே இந்த அதிகரிப்பானது பதிவாகியுள்ளது.
இந்த மாற்றங்களின் வெளிப்பாடு சந்தையில் கிடைக்கக்கூடிய பொருள்கள் சேவைகள் மீது உள்ளார்ந்த கூட்டுறவான மாற்றங்களை ஏற்படுத்தி இருப்பதுடன் அவற்றின் மீதான செலவின மாதிரிகளில் மாற்றங்களை ஏற்படுத்திக் கொள்ள சந்தர்ப்பங்களையும் ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. (ஓ)

CSE
COLOMBO STOCK EXCHANGE


CSE COLOMBO STOCK EXCHANGE

கொழும்பு பங்குப்பரிவர்த்தனை - 147-2/3, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம் - 0212221455

21/9/2017
www.cse.lk

பங்குச்சந்தைத் தகவல்கள்

| சுட்டிகள் | | இன்று | நேற்று |
|---|---|---|---|
| ASPI | -1.36 | 6,451.55 | 6,452.91 |
| S&P SL20 | -3.03 | 3,713.22 | 3,716.25 |
| வியாபாரப்புரள்வு | | 541,418,940 | 1,592,270,080 |
| உள்நாடு:- கொள்வனவு | | 255,995,168 | 274,451,328 |
| விற்பனை | | 310,064,064 | 831,071,490 |
| வெளிநாடு:- கொள்வனவு | | 285,423,776 | 1,317,818,750 |
| விற்பனை | | 231,354,880 | 761,198,590 |




| கம்பனி-அதிகூடிய பங்குப்பரிமாற்றம் | குறியீடு | இறுதிவிலை | பங்குகள் | புரள்வு (Rs) |
|---|---|---|---|---|
| ஜோன் கீல்ஸ் கோல்டிங்ஸ் | JKH.N | 165.5 | 1,047,961 | 173,423,652 |
| அக்ஸஸ் இஞ்சினியறிங் | AEL.N | 26 | 2,564,712 | 66,612,460 |
| கொமர்சியல் வங்கி | COMB.N | 140 | 452,531 | 62,862,576 |
| ஷெவ்றோன் லூப்றிக்கன் | LLUB.N | 122 | 332,033 | 39,902,823 |
| அலயன்ஸ் பைனான்ஸ் | ALLI.N | 65 | 433,514 | 24,329,236 |
| லங்கெம் டெவெலப்மென்ட்ஸ் | LDEV.N | 8.10 | 2,058,504 | 13,410,651 |
| நேஷனல் டெவலப்மென்ட் வங்கி | NDB.N | 130 | 94,452 | 12,327,302 |
| கொமர்சியல் வங்கி | COMB.X | 108 | 85,282 | 8,742,016 |
| டி எப் சி சி வங்கி | DFCC.N | 120 | 72,364 | 8,683,895 |
| சம்பத் வங்கி | SAMP.N | 296 | 25,095 | 7,424,329 |


**அறிவித்தல்கள்**

**பங்குலாபம்**
கார்கில்ஸ் (CARG) - Rs. 1.90
சி டி கோல்டிங்ஸ் (CTHR) - Rs. 1.80
ஹன்டர்ஸ் அண்ட் கம்பெனி (HUNT) - Rs. 3.75

| சந்தைக் குறிகாட்டிகள். | |
|---|---|
| கம்பனிகள் | 295 |
| பரிமாற்றத்தில் | 237 |
| விலை உழைப்பு | 10.7 |
| புத்தகப்பெறுமதி | 1.4 |
| பங்குலாப விளைவு | 2.9 |

# யாழ்.வண்ணை வேங்கடேச வரதராஜப் பெருமாள் அருள்காண வாரீர்

இராசையா சிறீதரன்



உலகெலாம் நிறைந்து விளங்குகின்ற எல்லாம் வல்ல பரம்பொருளாகிய மகாவிஷ்ணு மூர்த்தியானவர் தம்மை வழிபடுகின்ற அடியார்களின் துன்ப துயரங்களை நீக்கி அருள் பாலிக்கின்றார். அந்தப் பரம்பொருள் வடபால் யாழ். நகர மத்தியிலே வேங்கடேச வரதராஜப் பெருமாள் என்ற திருநாமம் கொண்டு எழுந்தருளி அருள் சுரக்கும் ஆலயமாக வண்ணையம்பதி பெருமாள் கோயில் திகழ்கிறது.

> ஈழத்துத் திருப்பதி என்று பக்திபூர்வமாக அழைக்கப்பெறும் பெருமாள் கோயில் மார்க்கண்டேய கோத்திர பண்டாரவளை பத்மசாலிச் செட்டிமார் பரம்பரையினரால் பரிபாலனம் செய்யப்பட்டு அறநெறிப்படி நிர்வகிக்கப்பட்டு வருகின்றது. இந்தக் கோயிலின் தலவிருட்சம் பலாமரமாகும். நல்ல இனிப்பான பலாப்பழம் போல எமது வாழ்க்கையையும் இனிக்கச் செய்யும் பெருமாளை தினமும் சிந்தித்து வந்தித்துச் சேவைபுரிந்தால் திருவருள் கிடைக்கும் என்பது நம்பிக்கை.

### திருவிழாச் சிறப்பு

அந்தவகையிலே வேங்கடேச வரதராஜப் பெருமாளின் ஏவிளம்பி வருட மகோற்சவம் இன்றையதினம் முற்பகல் 10 மணிக்குக் கொடியேற்றத் திருவிழாவுடன் ஆரம்பமாகிறது. தொடர்ந்து பத்துத் தினங்கள் வெகு சிறப்பாகத் திருவிழாக்கள் இடம் பெறும்.

இரண்டாம் நாள் புரட்டாதிச் சனி தினத்தில், பகல் கருடசேவையும் இரவு சேஷ சயன சேவையும், மூன்றாம் நாள் பகல் மற்றும் இரவு திருவிழாக்களில் கருட சேவையும், நான்காம் நாள் பகல் கருட சேவையும் இரவு அனுமன் சேவையும், ஐந்தாம் நாள் பகல் கருடசேவையும், இரவு பூந்தண்டிகையும் , ஆறாம்நாள் பகல் கருடசேவையும் இரவு கஜேந்திரசேவையும், ஏழாம் நாள் பகல் கருட சேவையும் இரவு வெண்ணெய்த்தாழிச் சேவையும்,எட்டாம் நாள் பகல் கருட சேவையும் இரவு அஸ்வாரூட சேவையும் இடம்பெறவுள்ளன.

ஒன்பதாம் நாள் பகல் தேர்த்திருவிழா இடம்பெறும்.பத்தாம் நாள் காலை தீர்த்தோற்சவமும் இரவு சந்திரப் பிறைச் சேவையும்,கொடி இறக்கமும் நடைபெறும். பதினோராம் நாள் பூங்காவனத் திருவிழாவில் திரு க்கல்யாணம் சிறப்புற நிகழ்வுறும். அழகிய பூந்தண்டிகையில் மாப்பிள்ளைக் கோலத்தில் வேங்கடேசப் பெருமாள் தேவியர்கள் சமேதராய்,அலங்கார பூஜி தைகளாக அருகருகே அமர்ந்து வரும் காட்சி அற்புதமாக அமைந்திருக்கும்.




### ஆலய பரிபாலனமும் அருளின் சிறப்பும்

ஈழத்துத் திருப்பதி என்று பக்திபூர்வமாக அழைக்கப்பெறும் பெருமாள் கோயில், மார்க்கண்டேய கோத்திர பண்டாரவளை பத்மசாலிச் செட்டிமார் பரம்பரையினரால் பரிபாலனம் செய்யப்பட்டு, அறநெறிப்படி நிர்வகிக்கப்பட்டு வருகின்றது. இந்தக் கோயிலின் தலவிருட்சம் பலாமரமாகும். நல்ல இனிப்பான பலாப்பழம் போல எமது வாழ்க்கையையும் இனிக்கச் செய்யும் பெருமாளை தினமும் சிந்தித்து சேவைபுரிந்தால் திருவருள் கிடைக்கும் என்பது நம்பிக்கை.

காத்தற் கடவுளாகிய வேங்கடேச வரதராஜப்பெருமாள் எம்மையெல்லாம் காத்து இரட்சிக்கும் பொருட்டு தம்மிரு தேவியர்கள் சமேதராக இந்த ஆலயத்தில் எழுந்தருளி அருள்பாலிக்கும் பாங்கு வர்ணிக்க முடியாத ஒன்று. இங்கு நடைபெறுகின்ற திருவிழாக்கள் ஒவ்வொன்றும் தத்துவார்த்தமான கருத்தொன்றை வெளிப்படுத்தியே நிகழ்த்தப்பெறுகின்றன. ஆலயத்தின் உட்பிரகாரத்தில் ரெங்கநாதப் பெருமாள் தெற்கு நோக்கி அமர்ந்தவாறு அருட்காட்சி தருகிறார்.

### பரிவார மூர்த்திகளும் பொலிவும்

வேங்கடேசனின் அருட்சக்தியாகிய மகாலட்சுமி தேவியானவள் கோயிலின் தென்மேற்கு மூலையிலே கிழக்கு நோக்கிய வண்ணம் எழுந்தருளி வீற்றிருந்து அருள்பாலிக்கின்றாள்.

ஆலய மேற்கு வீதியிலே சந்தான கோபாலர் சந்நிதியும், வேணு கோபாலர் சந்நிதியும், இராமபிரான்,சீதாபிராட்டியார், லட்சுமணன், ஆஞ்சநேயர் சந்நிதியும். வடமேல் மூலையிலே சூடிக்கொடுத்த சுடர் கொடியாள் ஆண்டாள் நாச்சியார் திருக்கோயிலும் அமைந்துள்ளமை தனிச்சிறப்பாகும்.

தற்போதுள்ள ஆதீன மகாசபையினர் மேற்கொண்ட முயற்சியின் பயனாய் ஆலயத்தில் திருப்பணி வேலைகள் சிறப்புற இடம்பெற்று அற்புதவடிவமைப்பை ஆலயம் பெற்றிருப்பது யாழ்.வண்ணை வேங்கடேச வரதராஜப் பெருமாள் அடியார்கள் செய்த பெரும்பாக்கியமாகும்.

ஆக, திருவிழாக் காலத்திலே அடியார் பெருமக்கள் ஆசார சீலர்களாக வருகை தந்து எம்பெருமானின் பரிபூரண கிருபா கடாட்சத்தைப் பெற்றிடுங்கள்.

---

# ஓர் ஆன்மாவின் சிவயோக யாத்திரை

துவாரகன்

> சிவத்திரு. க. வைத்தீசுவரக் குருக்களின் பிறந்த நாள் நினைவாக இந்தக் கட்டுரை பிரசுரமாகின்றது

பண்டிதர். மூதறிஞர் சிவத்திரு. க. வைத்தீசுவரக்குருக்கள் 1916 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 22 ஆம் திகதி இப்பூவுலகில் அவதரித்தார். கடந்த 2015 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 25 ஆம் திகதி அதிகாலை 2.30 மணியளவில் இறைபதம் எய்தினார். அவருடைய ஆன்மா சிவலோகத்திலுள்ள சிவயோக சுவாமிகளின் பாதாரவிந்தங்களின் நிழலில் இளைப்பாறச் சென்றது.

### பிறப்பும் பண்பும்

இப்பூவுலகில் எம்மத்தியிலே காரைநகரிலும் கந்தரோடையிலும் வாழ்ந்து வசிட்ட மகரிசியாக விளங்கிய யோகர் சுவாமிகளின் தன்மைகொண்ட இந்தப் புண்ணிய ஆத்மாவின் வாழ்வு எண்ணுதற்கரியது.


சிவத்திரு வைத்தீசுவரக்குருக்கள் அபிதான சிந்தாமணியில் கூறப்பட்டுள்ள 32 வகை அறங்களைத் தன் வாழ்நாளில் கடைப்பிடித்து ஒழுகுதலைப் பெரும் பேறெனக் கருதுவார். பறவைகள்,விலங்குகள் என வாயில்லாத ஜீவராசிகள் தங்கள் தாகம் தீர்த்துக் கொள்ள வீட்டின் முற்றத்திலும்,கோடியிலும் பாத்திரங்களில் நீர் நிரப்பி வைப்பார்.

வட்டுக்கோட்டையில் இருந்த போது பாடசாலைக்குச் செல்கின்ற பிள்ளைகள் மற்றும் வழிபோக்கர்கள் தங்கள் தாகம் தீர்த்துக் கொள்ள வீட்டின் முற்றத்திலே வாளியில் தண்ணீர் நிரப்பி வைப்பார். எப்போதும் அன்பர்களையும்,விருந்தினரையும் எதிர்பார்த்துக் காத்திருப்பார். அனைத்து உயிர்களிலும் அன்பு கொண்டவர். தன்னிடம் நூல்ப்பிரதிகளைக் கேட்டு வருவோருக்கும், சந்தேகம் கேட்டு வருவோருக்கும் அறிவுப்பசியை உவந்தளிப்பார். அவர்களின் வயிற்றுப் பசியையும் தீர்த்து உவகையடைவார். தந்தையைப் பின்பற்றி வாழும் நன்மக்களைப் பெற்றார்.

### கனிவும் அருட்பணியும்

திருவாசக பாராயணஞ் செய்தும், சகலாகலா வல்லிமாலை பாடியும், அபிராமி அந்தாதியை பொருளுணர்ந்து பாடியும் இறை வரம் நாடினார். ஈழத்துச் சிதம்பர சௌந்தராம்பிகை சமேத சுந்தரேசப் பெருமான் பாதத்தே உருகி அவன் பாதத்திலே மனம் பற்றி நின்றார்.வியாவில் பதியுறை ஐயனிடம் தான்சேகரித்த நூல்களை காணிக்கையாக்கி மகிழ்ந்தார். எனக்குள்ள எல்லாம் அன்றே உனதென்று அளித்து விட்டேன் என்று ரைத்துப் பேரானந்தப் பெருவாழ்வு எய்தினார்.

ஈழத்துச் சிதம்பரத்திற்கு தமிழக அறிஞர்களை அழைத்து வந்தார். திருவாசக விழாவை பெருவிழாவாக நடத்தினார்.அறிஞர்களை உணவும் தேநீரும் கொடுத்து உபசரித்தார். பேருரைகளைக் கேட்டு மகிழ்ந்தார்.இறைஞானம் கண்டு காரைநகருக்குப் பெருவாழ்வு தந்தார்.



### யோகரிடம் போதல்

கடந்த 2015 ஆம் ஆண்டு சித்திரைப்-புத்தாண்டு மலர்ந்தது.சிவயோக யாத்திரைக்குத் தன்னைத் தயார் செய்வதில் ஈடுபட்டார். இறுதியாக 2015 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை உணவருந்தினார்.அதன் பின்னான இறுதி 3 நாள்களும் உணவருந்தவில்லை. 2015 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 23 ஆம் திகதி புகின் கிழமை நள்ளிரவு 1 மணிக்கு குளியலறைக்குச் சென்று நீராடினார். தனது ஆடைகளைத் தானே சலவை செய்து உலரவிட்டார். சுவாமி அறைக்குச் சென்று தூபம் காட்டி இறைவனை வழிபட்டார்.

பிள்ளைகளிடம் வந்து யோகர் சுவாமிகளிடம் செல்லப் போகின்றேன் என்று கூறினார். பிள்ளைகளும் நித்திரை இன்றி தந்தையுடன் உடன் இருந்தார்கள். தான் எங்கு இருக்கின்றேன் என்று மகள் இராணியைப் பார்த்துக் கேட்டார். வீட்டில் தான் இருக்கின்றீர்கள் என்றார் மகள். நான் இப்போது யோகர்சுவாமி யின் மடத்திலல்லவோ இருக்கின்றேன், உனக்கு விளங்காது என்றார். யாழ்ப்பாணத்து யோகர் சுவாமிகள் நித்தியமாய் வாழும் சிவயோக மடத்துக்குப் புறப்படத் தயாரானார்.

வெள்ளிக்கிழமை மாலை பிள்ளைகளின் விருப்பினை ஏற்று ஒரு குவளை பால் அருந்தினார். இரவு 10 மணிக்கு துவாரகனிடம் போகப் போகிறேன் என்று மகளிடம் கேட்டார். ஓட்டோ ஓடும் சிறீயை கூப்பிடச் சொன்னார். துவாரகனுக்கு தொலைபேசி அழைப்பு எடுக்கச் சொன்னார். இரவு 10 மணியாகிவிட்டது என்று மகள் கூறவும் நாளைக்கு நீயே எடுத்துச் சொல்லுவாய் என்றார். 2015 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 25 ஆம் திகதி சனிக்கிழமை அதிகாலை 2.30 மணியளவில் யாழ்ப்பாணத்தில் மென்புயற் காற்று வீசியது. சிவனே சிவனே என்றார். இல்லற ஞானி,சீவன் முத்தராய் பல அற்புதங்கள் புரிந்தார்.

### அருளுரைத்தல்

சிவத்திரு. க. வைத்தீசுவரக்குருக்களை அறிந்த பலரும் குறிப்பாக, படித்தவர்களும் சிவப்பணி ஆற்றுபவர்களும் கூட தொண்டர் தம் பெருமையயை அறிந்திலர் என்று கூறுமளவுக்கு சாதாரண நிலையில் நின்றே அனைத்தையும் ஏற்றிருந்தார்.எல்லோருக்கும் நல்லதையே செய்தார். தன்னுடைய பிள்ளைகளையும் அன்பர்களையும் ஆன்ம அருளால் காத்துவருகிறார். முக்காலமும் உணர்ந்தவர்.

திருவாசகத்தைப் பொருளணர்து ஓதினால் முத்தி கிடைக்கும் என்ற செய்தியை எமக்கு விட்டுச் சென்றார். நினைக்க முத்திதரும் தலமாக விளங்குகின்றார்.

# பத்தி எழுத்து

## 8 ஆண்டுகளென்பது துரிதமான கதியா?

“இலங்கைமீது பன்னாட்டுச்சமூகத்தால் வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள், பிரேரணைகள் தொடர்பாக நிதானப் பயணத்தை மேற்கொள்ள பன்னாட்டுச் சமூகம் ஒத்துழைக்கவேண்டும்”இவ்வாறு தெரிவித்துள்ளார் இலங்கை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன.

ஐக்கிய நாடுகள் சபையின் 72ஆவது பொதுச்சபைக்கூட்டம் நியூயோர்க் நகரில் நடைபெற்று வருகிறது. இதில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். ““சிலகடும்போக்காளர்கள்துரிதமானபயணத்தைஎதிர்பார்க்கிறார்கள். சில கடும் போக்காளர்கள் விரைவானதீர்வுகளைஎதிர்பார்கிறார்கள். அவர்களுக்கு ஏற்றவாறு செயற்பட முடியாது. துரிதமான பயணம் ஆபத்தானது. எமது சமூகத்திலுள்ள சிக்கலான தன்மையின் அடிப்படையில் புரிந்துகொள்வீர்கள் என நம்புகிறேன்” என்றும் அவர் அங்கு குறிப்பிட்டார்.

விடுதலைப்புலிகள் மௌனிக்கச்செய்யப்பட்டு எட்டு ஆண்டுகள் முழுவதுமாக ஓடி மறைந்துவிட்டன. இன்னனும் எமது மக்கள் ஏங்கிநிற்கும் விடயங்களில் காத்திரமான முடிவுகள், தீர்மானங்கள் எட்டப்படவில்லை. குறைந்த பட்சம் தீர்வுகளுக்கு உரிய சாதகமான நகர்வுகளையும் இலங்கை அரசு வெளிப்படுத்தவில்லை. இந்த எட்டு ஆண்டுகால அவகாசம் என்பது மைத்திரியைப் பொறுத்தவரை துரித கதி.

பலவந்தமாக காணாமல் ஆக்கப்படுதலைக் குற்றமாக அறிவிக்கும் சட்டவரைவு நாடாளுமன்றத்தின் நேற்றைய கூட்டத்தொடரில் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவிருந்தது. பின்னர் இறுதியில் நாடாளுமன்ற நிகழ்ச்சி நிரலில் இருந்து அது நீக்கப்பட்டது. மகிந்ததரப்பினரின் அழுத்தமே இந்தத் தீர்மானம் நீக்கப்படக் காரணம் என்று கொழும்பு ஊடகங்கள் குறிப்பிடுகின்றன. பன்னாட்டுச் சமூகத்தை ஏமாற்றும் செயல் இது என்று கொதித்துள்ளார் நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளருமான சுமந்திரன். மைத்திரிக்கு எதிராக காரசாரமான கருத்தையும் அவர் வைத்துள்ளார். ஒருவரை பலவந்தமாகக் காணாமல் ஆக்குதல் எந்தளவு பாரதூரமான விடயம். அதையே சட்டமாக்குவதற்கு இலங்கை நாடாளுமன்றத்தால் முடியவில்லை. எனின், மைத்திரியின் கருத்துப்படி நாம்கேட்கும்விடயங்களுக்குஉரியதீர்வு வருவதற்கு சில நூற்றாண்டுகள் ஆனாலும் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை.

# புரட்டாதி மாத ராசிபலன்

(17.09.2017 – 17.10.2017) உங்களுக்கு எப்படி?



## கன்னி

### வெற்றிகள் பெருகும்

அன்றாடவாழ்வில்ஏற்படும்நெளிவு, சுளிவுகளுக்கு தகுந்தாற்போல் வளைந்து கொடுத்து வாழக்கற்று கொண்ட நீங்கள், எப்பொழுதும் புதுமையை விரும்புவீர்கள். ராகு லாபஸ்தானத்தில்வலுவாகஅமர்ந்திருப்பதால் வசதி, வாய்ப்புகள் பெருகும். தொழிலதிபர்களின்நட்பு கிடைக்கும். சிலர் புதிதாக வீடுகட்டி கிரகப் பிரவேசம் செய்வீர்கள்.

ராஜகிரகங்களான குருவும், சனியும் வலுவாக இருப்பதால் மனோபலம் அதிகரிக்கும். தினந்தோறும் எதிர்பார்த்து ஏமாந்த தொகை கைக்கு வரும். கைமாற்றாக வாங்கியிருந்த பணத்தையும் ஒருவழியாக கொடுத்து முடிப்பீர்கள்.

குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பீர்கள். இளைய சகோதர, சகோதரிகளால் பலனடைவீர்கள். பூர்வீகச் சொத்தை விற்று உங்கள்ரசனைக்கேற்பவீடு, மனைவாங்குவீர்கள்.

ராசிக்கு12ஆம்வீட்டில்அமர்ந்திருந்தசூரியன்இப்போதுஉங்கள் ராசிக்குள் நுழைந்திருப்பதால் படபடப்பு, முன்கோபம் வரும். அவசரப்பட்டு, உணர்ச்சி வேகத்தில் பெரிய முடிவுகள் எடுக்க வேண்டாம். அரசுக்குச் செலுத்த வேண்டிய வரிகளில் தாமதம் வேண்டாம். உங்களின் ராசிநாதனாகிய புதன் 22ஆம் திகதி முதல் உங்கள் ராசிக்குள்ளேயே உச்சம் பெற்று அமர்வதால் உற்சாகம் பொங்கும். பணப்புழக்கம் அதிகமாகும். செவ்வாய் சாதகமாக இல்லாததால் வீண் அலைச்சல், செலவுகள், திடீர் பயணங்கள், சகோதரவகையில்மனத்தாங்கல், தூக்கமின்மை வந்து செல்லும்.

சுக்கிரன் சாதகமான வீடுகளில் சென்று கொண்டிருப்பதால் விசேஷங்களை முன்னின்று நடத்துவீர்கள். சிலர்நான்குசக்கர வாகனம் வாங்குவீர்கள்.

அரசியல்வாதிகளே! தலைமையிடம் சிலர் உங்களைப்பற்றி புகார் பட்டியல் வாசிப்பார்கள். கொஞ்சம் கவனமாக இருங்கள்.

கன்னிப்பெண்களே! கூடாப்பழக்கமுள்ளவர்களின் நட்பிலிருந்து விடுபடுவீர்கள். உங்களின்புதுமுயற்சிகளுக்கு பெற்றோர் ஆதரவாக இருப்பார்கள்.

மாணவ மாணவிகளே! படிப்பில் முன்னேறுவீர்கள். விளையாட்டு, கட்டுரைப் போட்டிகளில் கலந்து கொண்டு பரிசையும் பாராட்டையும்பெறுவீர்கள். வியாபாரத்தில் இலாபம் இரட்டிப்பாகும். தொழிலை விரிவுபடுத்த கடனுதவிகள் கிடைக்கும். பங்குதாரர்கள் உங்கள் ஆலோசனையை ஏற்பர்.

உத்யோகத்தில் உங்களின் திறமையை அனைவரும் பாராட்டுவார்கள். மேலதிகாரியின் தவறுகளை சுட்டிக் காட்டுவீர்கள். சக ஊழியர்களின் சம்பள உயர்விற்காக போராடுவீர்கள். மறுக்கப்பட்ட உரிமைகள் கிடைக்கும்.

கலைத்துறையினரே! கௌரவிக்கப்படுவீர்கள். உங்களுடைய படைப்புத் திறன் அதிகரிக்கும்.

விவசாயிகளே! பூச்சி, எலித்தொல்லை விலகும். புதிதாக நிலம் வாங்குவீர்கள். வெற்றிகள் தொடரும் மாதமிது.

# வரலாற்றில் இன்றைய தினம் 22.09.2017

1761 - பிரிட்டனின் அரசனாகவும் அரசியாகவும் முறையே மூன்றாம் ஜோர்ஜ் மற்றும் சார்லொட் முடிசூட்டப்பட்டனர்.

1776 - அமெரிக்கப் புரட்சியின்போது உளவு பார்த்தமைக்காக நதான்ஹேல் தூக்கிலிடப்பட்டார்.

1857- ரஷ்ய போர்க்கப்பல், ‘லெபோட்’ பின்லாந்து குடாக்கடலில் புயலால் மூழ்கியது. அதில் இருந்த 826 பேர் சாவடைந்தனர்.



1965 – காஷ்மீருக்கான உரிமை கோரி இந்தியா – பாகிஸ்தான் இடையே நடைபெற்ற போர், ஐக்கிய நாடுகள் சபையின் போர் நிறுத்தத்துக்கான அழைப்பையடுத்து முடிவுக்கு வந்தது.

1888 - ‘த நஷனல் ஜோக்றபி’ சஞ்சிகையின் முதல் இதழ் வெளியிடப்பட்டது.

1908 - பல்கேரியா சுதந்திரம் பெற்றது.

1910- பிரிட்டனில் இன்றும் செயற்பட்டுக் கொண்டிருக்கும் பழைமை வாய்ந்த திரைப்பட மாளிகை ‘டியூக் ஒப் லோக்ஸ் பிக்ஸர் கவுஸ்’ திறந்து வைக்கப்பட்டது.

1995 - நாகர்கோவிலில் பாடசாலை ஒன்றின்மீது இலங்கை வானூர்திப்படை மேற்கொண்ட குண்டுவீச்சில் 34 பேர் உயிரிழந்தனர். இவர்களில் அனேகமானோர் பாடசாலைச் சிறார்களாவர்.

2016 - புலிகள் மீதான தடையை நீக்க ஐரோப்பிய ஒன்றியம் பரிந்துரை.

2016 - இராணுவ அருங்காட்சியகம் உவர் மலையில் திறந்துவைப்பு.

## நாளை

**23.09.2017**

சனிக்கிழமை

**புரட்டாதி 7**

திதி: திருதியை மு.ப. 11.55 வரை
நட்சத்திரம்: சுவாதி பி.இ. 03.35 வரை
சுபநேரம்: 03.02–04.32 வரை
ராகுகாலம்: 09.02–10.32 வரை

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** மனதில் இருந்த குழப்பம் நீங்கும். தொழில், வியாபாரம் வளர்ச்சிக்காக கூடுதல் பணி மேற்கொள்வீர்கள். பெண்கள் வீட்டுக்குத் தேவையான பொருட்கள் வாங்குவர்.

**இடபம்**: மாறுபட்ட கருத்துக் கொண்டவரை சந்திக்க நேரிடலாம். தொழில், வியாபாரத்தில் இலாபம் சுமாராக இருக்கும். வாகன போக்குவரத்தில் மிதவேகம் கடைப்பிடிக்கவும்.

**மிதுனம்:** பெற்றோரின் அறிவுரையை ஏற்பது நல்லது. பணியில் பொறுப்பு அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் இருக்கிற அனுகூலத்தைப் பாதுகாப்பது நல்லது.

**கடகம்:** பெருந்தன்மை மிக்கவராக விளங்குவீர்கள். நற்செயலில் ஈடுபட்டு சமூகத்தில் வரவேற்புப் பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும்.

**சிங்கம்:** செயலில் திறமை வெளிப்படும். அலைச்சல் தந்த வேலை ஆதாயம் தருவதாக மாறும். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட வளர்ச்சி இலக்கு நிறைவேறும்.

**கன்னி:** மாறுபட்ட சூழ்நிலையைச் சந்திக்க நேரிடலாம். நிதானத்தை கடைப்பிடிப்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் சுமாரான இலாபம் கிடைக்கும்.

**துலாம்:** புதிய செயல் நிறைவேற தாமதம் ஆகலாம். சிறிய பணி கூட சுமையாக இருக்கலாம். தொழில், வியாபாரம் சிறக்க விடாமுயற்சி அவசியம். இலாபம் சுமாராக இருக்கும்.

**விருச்சிகம்:** செயல்களில் அதிக நேர்த்தி நிறைந்திருக்கும். அரசு தொடர்பான உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட வளர்ச்சி இலக்கு நிறைவேறும்.

**தனுசு:** சிலர் சுயநலத்துடன் உங்களிடம் பழகலாம். விழிப்புடன் விலகுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் உழைப்பிற்கேற்ப ஆதாயம் கிடைக்கும்.

**மகரம்:** இஷ்ட தெய்வ அருளால் நன்மை உருவாகும். அன்றாட வாழ்வில் புத்துணர்வுடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி வியப்பூட்டும் விதத்தில் இருக்கும்.

**கும்பம்:** முக்கிய செயலை பிறரிடம் ஒப்படைக்க வேண்டாம். தொழில், வியாபாரத்தில் உள்ள சிரமத்தை உடனடியாக சரி செய்வது நல்லது. இலாபம் சுமாராக இருக்கும்.

**மீனம்:** புதிய முயற்சி முழு அளவில் வெற்றி அளிக்கும் . ஆதாயம் கூடும். குடும்பத் தேவைகளை தாராள செலவில் நிறைவேற்றுவீர்கள். நண்பரைச் சந்திக்கும் வாய்ப்பு உருவாகும்.

# தெறிக்கிறது 'மெர்சல்' முன்னோட்டக் காணொலி

தமிழ் திரையுலக முன்னணி நடிகர் விஜயின் நடிப்பில் தயாராகியுள்ள 'மெர்சல்' படத்தின் முன்னோட்டக் காணொலி நேற்று மாலை 6 மணியளவில் வெளியிடப்பட்டது.

"நீ பற்றவைத்த நெருப்பொன்று, பற்றி எரிய உனைக் கேட்கும். நீ விதைத் வினையெல்லாம் உனை அறுக்கக் காத்திருக்கும்" என்று அடுக்கடுக்கான கம்பீரமான வசனங்களுடன் வருகிறார் விஜய். 'சர்க்கஸ்' கூடாரத்தில் வேலை பார்க்கும் வித்தைக் காரர், ஜல்லிக்கட்டுப் பின்னணியில் உள்ள கிராமத்தவர், வழக்கமான விஜய் கதாபாத்திரம் ஆகியவற்றில் அவர் தோன்றுகிறார். முன்னோட்டக் காணொலி வெளியான 30 நிமிடங்களில் சுமார் 5 லட்சம்பேர் அதைப் பார்வையிட்டனர். இந்த முன்னோட்டக் காணொலி சமூக வலைத்தளங்களிலும் மிக விரைவாகப் பரவி வருகிறது. (ம)





கார்டூனிஸ்டை உள்ள போட்டது தப்பா போச்சு.

உடலில் வலி இருந்தா அந்த இடத்தில் 'மூவ்' தடவனும். மனசில வலி வந்தா அந்த இடத்தில இருந்து 'மூவ்' ஆயிடனும்...

விருப்பத்துக்கு ஏற்ப வாழ்வதை விட வருமானத்திற்கு ஏற்ப வாழ்வது அவசியம்.

டாக்டர் நீங்க பல் எடுப்பீங்களா...?
டாக்டர்: கண்டிப்பா எடுப்பேன். ஒரு பல்லுக்கு 100 ரூபாய்...



அப்ப இந்த பையில் 4 பல்லு இருக்கு எடுத்துக் கொண்டு 400 ரூபா கொடுங்க...

எங்கடா இருக்க...?
நடுத்தெருவில நிற்கிறேன் வந்து கூட்டிட்டுப் போ....




## யதார்த்தமான உண்மைகள்

★ எந்த பூச்சிகள் இறந்தாலும் எறும்புகளே அதை இறுதி ஊர்வல மாய் எடுத்து செல்கின்றன.
★ தெருவில் குப்பை போடுகிறவனை மரியாதையாகவும் அதை பொறுக்கிச் சுத்தம் செய்பவனை கேவலமாகவும் பார்க்கும் சமுதாயம் உள்ளவரை என் நாடு சுத்தம் ஆகாது.
★ ஒரு மெழுகுவர்த்தியின் தியாகத்திற்கு சற்றும் குறைவில்லாதது ஒரு தீகுச்சியின் சாவு.
★ இறுதி வரை வாழ்க்கை இப்படியே இருக்க வேண்டுமே என்ற கவலை சிலருக்கு. இப்படியே இருந்துவிடுமோ என்ற கவலை சிலருக்கு!!
★ மொபைல் போனை முதலில் வைத்திருந்தவர்கள் ஆச்சர்யப் படுத்தினார்கள். இப்போது வைத்திருக்காதவர்கள் ஆச்சர்யப் படுத்துகிறார்கள்.
★ தூக்கம் வராமல் முதலாளி. தூங்கி வழியும் காவலாளி - முரண்.
★ கடவுளுக்கு நீங்களாகவே ஒரு உருவம் கொடுத்து விட்ட படியால் கடவுள் உங்கள் எதிரில் இருந்தாலும் தெரிவதில்லை!



நாம் சிலரை வெறுப்பதற்குக் காரணம், அவர்களைச் சரியாகப் புரிந்து கொள்ளாதது தான். அவர்களைச் சரியாகப் புரிந்து கொள்ளாததற்குக் காரணம், நாம் அவர்களை வெறுப்பது தான்!

**மனைவி :** ஏங்க, எனக்கு இந்த புது ட்ரெஸ் எப்பிடி இருக்கு?
**கணவன் :** உன்னை மாதிரியே இருக்கு
**மனைவி :** : அவ்வளவு அழகாவா?.
**கணவன் :** இல்ல லூசா.



## சுடோக்கு
எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 5 | | | 9 | | | | |
| 4 | | | 7 | | | 3 | | |
| 3 | | | | | 1 | | | |
| | | 3 | | | 6 | 5 | 4 | |
| | 4 | | | 5 | | | 3 | |
| | 9 | 7 | | | | 6 | | |
| | | | 4 | | | | | 2 |
| | | 2 | | | 7 | | | 3 |
| | | | | 1 | | | 7 | 5 |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 7 | 4 | 6 | 9 | 8 | 2 | 1 | 5 |
| 9 | 6 | 1 | 3 | 2 | 5 | 8 | 7 | 4 |
| 2 | 8 | 5 | 7 | 1 | 4 | 9 | 6 | 3 |
| 6 | 5 | 3 | 9 | 4 | 1 | 7 | 8 | 2 |
| 8 | 4 | 9 | 2 | 3 | 7 | 6 | 5 | 1 |
| 7 | 1 | 2 | 8 | 5 | 6 | 3 | 4 | 9 |
| 5 | 3 | 6 | 4 | 8 | 9 | 1 | 2 | 7 |
| 1 | 2 | 7 | 5 | 6 | 3 | 4 | 9 | 8 |
| 4 | 9 | 8 | 1 | 7 | 2 | 5 | 3 | 6 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளே 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டி ருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக் கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை.



# எதிலும் நிறைவைக் காணுதல்

ஓர் ஊரில் ஒரு குயவனும் ஒரு வைரம் தீட்டுபவனும் அருகருகே தமது தொழிலைச் செய்து வந்தனர். இருவரும் தத்தம் தொழிலில் சிறந்தவர்கள். அவர்கள் செய்யும் பொருள்களைப் பல ஊர்களிலும் உள்ள மக்கள் விரும்பி வந்து வாங்கிச் சென்றனர். குயவனிடம், வைரம் தீட்டுபவன் ஒரு நாள் "எப்படி இருக்கிறாய்? உன் வேலை எப்படிப் போகிறது? என்று கேட்டான். குயவன், "அட போப்பா எனக்கு களி மண்ணில் வேலை. நாளெல்லாம் சகதியை மேலே அப்பிக் கொண்டு வேலை செய்ய வேண்டியிருக்கிறது. உன்னைப் போல சுத்தமும் பத்தமுமாகவா இருக்க முடிகிறது. அலுப்புத் தட்டுகிறது போ!" என்று கொட்டாவி விட்டான் குயவன். அதற்கு வைர வியாபாரி, "உனக்கு என்ன தெரியும் என் வேலையைப் பற்றி நாளெல்லாம் வைரத்தைத் தீட்டுகிறேன் என்று எத்தனை முறை நான் என் கையை அறுத்து இரத்தக் காயப்படுத்திக் கொள்கிறேன் தெரியுமா உனக்கு உன் வேலையில் இந்த ஆபத்தெல்லாம் கிடையாதே! எனக்கு வேலை செய்து கையெல்லாம் புண்ணாகிப் போனது தான் மிச்சம். இன்றும் நாள் முழுவதும் இந்த வேலையைத் தான் ஆபத்து என்று தெரிந்தே செய்ய வேண்டியிருக்கிறது" என்று அலுத்துக் கொண்டே புண்ணாகிப் போன தன் கைகளைக் காட்டினான். எல்லோருக்குமே அவரவர் வேலையில் மகிழ்ச்சி இல்லையா? மகிழ்ச்சியான வேலைதான் எது? என்று இருவரும் சிந்தித்தார்கள். அவர்களுக்கு எதுவும் பிடிபடவில்லை. எல்லோரினதும் மதிப்பைப் பெற்ற பெரியவர் ஒருவர் இருந்தார். இருவரும் அவரிடம் சென்று "ஐயா எங்கள் வேலையில் அலுப்பும் ஆபத்தும்தான் தெரிகிறது. எப்போதும் மகிழ்ச்சியாகச் செய்யக் கூடிய வேலை ஏதாவது இருந்தால் சொல்லுங்கள்" என்று கேட்டார்கள். பெரியவர் புன்னகைத்துக் கொண்டே "உங்கள் இருவருக்கும் நீங்கள் செய்வதைத் தவிர வேறு வேலை ஏதாவது தெரியுமா என்று கேட்டார். அவர்கள் தத்தம் வேலைகளை மட்டுமே தமக்குச் செய்யத் தெரியும்? என்று பதில் கூறினர். பெரியவர் "உலகிலே மண்பாண்டங்களும் தீட்டிய வைரங்களும் இயற்கையாகவே கிடைத்தால் என்ன நடக்கும்? என்று அவர்களிடம் கேட்டார். " நாம் செய்யும் வேலைகளுக்கே மதிப்பில்லாமல் போய்விடும்" என்று பயத்துடன் பதில் கூறினார்கள். "அப்படியானால் உங்கள் வேலைகளுக்கு இதுவரையும் இருந்த மதிப்பு என்ன? பெரியவர் கேட்டார். "களி மண்ணைப் பண்டமாக உருவாக்குவதும் இயற்கையில் கிடைக்கும் வைரத்தை மின்னல் போல் பளபளக்கச் செய்வதும் தான்" என்று இருவரும் கூறினார்கள்.


"பார்த்தீர்களா? உலகில் குறைகள் இருப்பதால் தான் உங்கள் இருவருக்கும் வேலை இருக்கிறது. அந்தக் குறைகளை நிறைவு செய்யும் திறமை உங்களுக்கு இருப்பதால் தான் உங்களை மக்கள் மதிக்கிறார்கள். அந்தத் திறமை மற்றவர்களை விட உங்களுக்கு அதிகமாக இருப்பதால்தான் உங்களைத் தேடி அவர்கள் வருகிறார்கள். நீங்கள் அதனைப் பெரிதாக நினைக்காமல் குறைகளால் ஏற்படும் வருத்தங்களைப் பெரிதாக நினைக்கிறீர்கள். மகிழ்ச்சியும் மகிழ்ச்சியின்மையும் உங்கள் நோக்கிலேயே இருக்கிறது. செய்யும் வேலையில் இல்லை. குறைகளை அவற்றை நிறைவாக்கும் வாய்ப்பாகப் பார்ப்பவன் மகிழ்ச்சியுடன் இருக்கிறான். குறையை அதில் உள்ள சிரமங்களைப் பார்ப்பவன் வருத்தத்துடன் இருக்கிறான்" என்று சொல்லி முடித்தார்.

# சுவீடன்



சுவீடன் ஐரோப்பாவின் ஸ்கன்டிநேவியப் பகுதியில் உள்ள ஒரு நாடாகும். பின்லாந்தும் நோர்வேயும் இதன் அண்டை நாடுகள். பரப்பளவின் அடிப்படையில் இது ஐரோப்பிய ஒன்றியத்தின் மூன்றாவது பெரிய நாடு. 17ஆம் நூற்றாண்டின் மத்தியில் நாட்டின் மாகாணங்களை விரிவாக்கி சுவீடப் பேரரசு உருவாக்கப்பட்டது. சுவீடன் தெற்கில் ஐரோப்பாவையும் நீண்ட கடற் பரப்புக் கொண்டது கிழக்கில் பால்திக் கடலையும் மேற்கில் ஸ்கன்டிநேவியத் தீபகற்பத்தையும் கொண்டுள்ளது. இங்குள்ள ஸ்கன்டிநேவிய மலைத்தொடர் சுவீடனையும் நோர்வேயையும் பிரிக்கின்றது. பின்லாந்து நாட்டின் வட கிழக்கு எல்லையாக இது அமைந்துள்ளது. மேலும் டென்மார்க், ஜேர்மனி, போலந்து, லதுபானா, லாத்வியா, எஸ்னிதோனியா ஆகிய நாடுகள் சுவீடனின் அயல் நாடுகளாகும். ஓரிசன்ட் பாலத்தில் மூலம் டென்மார்க்குடன் இணைந்து ஐரோப்பாவின் மிக நீண்ட எல்லையை சுவீடன் கொண்டுள்ளது.

## புள்ளிகளை இணைத்து உருவைப் பூர்த்தி செய்க







# சாதனைகள் செய்வதற்கு வயது தடையில்லை

சாதனைகள் புரிய முடியாததற்கு வயதாகி விட்டதை ஒரு சாரார் காரணமாகக் காட்டுகிறார்கள். சாதனை புரிய இன்னும் வயது வரவில்லை என வயதுக் குறைவை இன்னொரு சாரார் காரணமாகக் காட்டுகிறார்கள். ஆனால் இரு சாராருமே சாதனைகள் புரிவதில் ஆர்வம் இல்லாதவர்கள் என்பதுதான் உண்மை.

ஏறத்தாழ இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்பு எழுபது வயதைத் தாண்டிய முதியவர் ஒருவர் விசாரணை மன்றத்தின் முன்னால் நின்று வாக்கு மூலம் கொடுக்கிறார். அந்த வயோதிபர் கண்டு பிடித்த விஞ்ஞான உண்மைகளைசத்தியப் பிரமாணம் செய்து பொய் யென்று ஒப்புக்கொள்ள வேண்டும் என்பது விசாரிப்பதற்காக அமர்ந்திருக்கும் மதபோதகர்களின் நிபந்தனை. உலகம் உருண்டை என்று ஆதாரங்களோடு சொன்னார் அந்த வயோதிபர். ஆனால் பைபிளில் சொல்லப்பட்டிருந்த தகவலுக்கு அது மாறுபட்டதாக இருந்தது. மத போதகர்கள் அந்தக் கிழவனின் கூற்றை ஏற்றுக் கொள்ளவில்லை. ஏற்காவிட்டாலும் பரவாயில்லை. ஆராய்ந்து அறிந்ததைச் சொன்னதற்காக சிறைத் தண்டனை விதிக்கப் போவதாக அவரை மிரட்டினார்கள். அவர்களைத் திருத்த முடியாது என்று உணர்ந்த கிழவன் அவர்கள் சொன்ன படியே ஒப்புக் கொண்டு விட்டு விசாரணை மன்றத்திலிருந்து வெளியே வந்ததுடன் தன்னுடைய நண்பர்களிடம் "அவர்களுக்கு உலகம் தட்டையாகவே இருந்து விட்டுப் போகட்டும் நமக்கெல்லாம் உலகம் உருண்டை தான்" எனச் சிரித்துக் கொண்டே சொன்னார். அந்த வயோதிபர் வேறு யாருமல்ல உலகப் புகழ்பெற்ற விஞ்ஞானி கலிலியோ.

அதற்குப் பின்பும் கலிலியோ பல கண்டு பிடிப்புகளைச் செய்தார். சாதனைகள் புரிந்தார். வயோதிபம் அவருடைய சாதனைகளுக்குத் தடையாக இருக்கவில்லை. வயோதிபத்தில் அவருக்குக் கொடுக்கப்பட்ட தொல்லைகளும் அவருடைய சாதனைகளைத் தடை செய்து விட முடியவில்லை.



## இருபடங்களிலும் 10 வித்தியாசங்கள் உள்ளன கண்டுபிடியுங்கள்

**இது புதுசு**



ஆண்களுக்கான நவீன காலணி வகை கள்சந்தைக்கு அறிமுகமாகி யுள்ளன. இவை ஆயிரத்து 350 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படு கின்றன.



# கேள்விஅறிவித்தல் யாழ்ப்பாணம் மாநகர சபை சபைநிதி - 2017

01.யாழ்ப்பாணம் மாநகரசபையின் உள்ளூராட்சி மன்ற பெறுகைகள் குழுத்தலைவரால் தற்போது தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளைக் கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைகளுக்காகக் கோரப்படுகின்றன.

02.கேள்வியானது தேசிய போட்டி விலைக் கேள்வியின் மூலம் நடாத்தப்படும்.

03.ஒப்பந்தமானது நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA), கட்டடம் மற்றும் வீதி நிர்மாணத்திற்கு கீழ்க்குறிப்பிட்படும் தரத்தினைக் கொண்டிருப்பதோடு, பொது நிதி சுற்றறிக்கை, இல.04/2016(i) ற்கு அமைவாக இவ்விலை மனுக்கோரலானது தகுந்த வியாபார அல்லது கம்பனிப் பதிவுகளை வடமாகாணத்திற்குள் கொண்டுள்ளதும் கறுப்புப்பட்டியலில் (Black list) சேர்த்துக் கொள்ளப்படாததுமான கேள்விதாரரிற்கு வழங்கப்படுவதற்கு உரித்துடையதாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. தகுதியான கேள்விகள் கிடைக்காத பட்சத்தில் கீழ் குறித்த அட்டவணையில் உள்ள CIDA தரத்திற்கு மேற்பட்ட கேள்விதாரரின் கேள்விகள் கருத்திற் கொள்ளப்படும்.

04.தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4ல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி 5ல் காட்டப்பட்டுள்ளது.

05.ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் **ஆணையாளர், மாநகர சபை,யாழ்ப்பாணம் (தொலைபேசி இல - 021 2216468, 021 2222019)** என்னும் முகவரியிலிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்வதுடன் வேலைநாட்களில் காலை 9.00 மணி முதல் மாலை 2.00 மணி வரை 22.09.2017 - 13.10.2017 வரையான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களைப் பார்வையிடலாம்.

06.ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் பூரணப்படுத்தி **ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம்** என்னும் முகவரியிலிருந்து 22.09.2017ம் திகதியில் இருந்து 13.10.2017 வரை காலை 9.00 மணிக்கும் மாலை 2.00 மணிக்கும் இடையில்மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.2,000.00 மற்றும் வரியினைச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். இத் தொகை பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.

07.கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து **ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம்** என்னும் முகவரிக்கு 16.10.2017ம் திகதி மாலை 2.00 மணிக்கு முன்பதாகக் கிடைக்கக் கூடியதாகச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரர் அல்லது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

08.கீழ்க்காட்டப்படும் கேள்விகள் கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியிலிருந்து 77 (எழுபத்தேழு) நாட்களுக்கு (01.01.2018 வரை) செல்லுபடியாகும்.

09.கேள்விப் பிணை வைப்புத்தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

10.கேள்வி தொடர்பான முன் கேள்விச் சபைக்கூட்டம் பொறியியலாளர் அலுவலகம், மாநகர சபை, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் 06.10.2017 அன்று காலை 10.30 மணிக்கு இடம்பெறும்.

11.கேள்விகளை ஏற்றுக்கொள்வதும் நிராகரிப்பதும் பெறுகைக் குழுவின் இறுதித் தீர்மானத்திற்கு அமைவானதாகும்.

| இல | ஒப்பந்த இலக்கம் | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) (வற் நீங்கலாக) | ஒப்பந்தக் காலம் | வேண்டப்படும் தரம் | வேண்டப்படும் கேள்விப்பிணை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பாதுகாப்புப் பிணை தொகை | செல்லு படியாகும் காலம் |
| 1 | JMC/WD/01/CF.Bu/2017/35 | செங்குந்தா சந்தையில் மீன் சந்தை கட்டடம் அமைத்தல் | 20.50 | 04 மாதங்கள் | C6 & C5 கட்டடம் | 205,000.00 | 29.01.2018 |

தலைவர் / ஆணையாளர்
உள்ளூராட்சி மன்ற பெறுகைகள் குழு.
மாநகரசபை. யாழ்ப்பாணம்.

21.09.2017

## விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள TATA வடி வாகனம் PX - XXXX மற்றும் Mahendra Diesel Auto மானிப்பாயில் விற்பனைக்கு உண்டு.

- 076 703 3461, 077 757 4564

## பராமரிப்பாளர் தேவை

நடமாடும் உடல்வலுவுள்ள வயோதிப அன்னையை பராமரிப்பதற்கு. நாற்பது வயதுக்கு மேற்பட்ட பெண் பராமரிப்பாளர் உடனடியாகத் தேவை. உணவு, தங்குமிடம் இலவசம். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

**தொடர்பு**, அ.ம.கொண்ஸ்ரன்ரைன்,
சென். ஜேம்ஸ் வீதி, சில்லாலை தெற்கு.
பண்டத்தரிப்பு. **077 613 4539**

## உடன் தேவை

**PLOD SECURITY SERVICES** இல் பணிபுரிவதற்குப் பாதுகாப்பு உத்தியோகஸ்தர்கள் ஆண், பெண் இருபாலாரும் தேவை.

**பணிபுரியும் இடம்- உயர்தொழில்நுட்பவியல் கல்லூரி. குருநகர் - யாழ்ப்பாணம்.**

**தொடர்பு - 077 176 9063**

## வேலைவாய்ப்பு

தேசிய அபிவிருத்தி லொத்தர் விற்பனை நிலையங்களுக்கு விற்பனையாளர், உதவியாளர் மற்றும் அலுவலக வேலைகளுக்கு ஆண்/பெண் பணியாளர்கள் பின்வரும் இடங்களுக்கு தேவை. (யாழ். நகர், திருநெல்வேலி, நல்லூர், காங்கேசன்துறை)

**- 077 516 4928, 0212215777**

## பால்மாடு விற்பனைக்கு

முதல் ஈற்று கன்று போட்ட பால் கறக்கும் ஜேசி கலப்பின பசுமாடு விற்பனைக்குண்டு.

**077 004 4653**

## விற்பனைக்குண்டு

ஒரு மாதம் நிரம்பிய ஊர்க் கோழிக்குஞ்சுகள் விற்பனைக்குண்டு.

**077 267 7372**

# பொது வைத்தியசாலை வவுனியா
## பெறுகை அறிவித்தல்
## பாதுகாப்பு மற்றும் சுத்திகரிப்பு சேவை
## 2017/2018

1. **வவுனியா பொது வைத்தியசாலையில் 2017 / 2018 ஆம் ஆண்டிற்கான பாதுகாப்பு மற்றும் சுத்திகரிப்பு சேவைக்காக முத்திரையிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.**

| இல | விபரம் | ஊழியர் எண்ணிக்கை | மீளளிக்கப்படாத வைப்புத்தொகை | கேள்வி பிணை |
|---|---|---|---|---|
| அ) | பாதுகாப்பு சேவை | 14 | 2000.00 | 50,000.00 |
| ஆ) | சுத்திகரிப்பு சேவை | 29 | 2000.00 | 100,000.00 |

02. மீளளிக்கப்படாத வைப்புக்கள் வைத்தியசாலையின் நிதிப்பிரிவில் காசாக செலுத்திப் பற்றுச்சீட்டுக்கள் பெற்றுக் கொள்ளவேண்டும்.அங்கீகரிக்கப்பட்ட வங்கியொன்றிலிருந்து 31.12.2017 வரை செல்லுபடியாகக் கூடிய பிணைப்பொறுப்பொன்று கேள்வி ஆவணத்துடன் இணைக்கப்படல் வேண்டும்.

03. பெறுகைப்பத்திரம் கோரும் நிறுவனங்கள் குறித்த சேவையினை வழங்குவதற்கான வியாபார பெயர்ப்பதிவினை கொண்டிருப்பதுடன் அது தொடர்பான அனுபவத்தினையும் கொண்டிருத்தல் வேண்டும்.

04. பெறுகை ஆவணங்கள் 20.09.2017 தொடக்கம் 09.10.2017 வரை பெற்றுக் கொள்ளலாம்.

05. பிரதியுடன் கூடிய சகல பெறுகை ஆவணங்களும் **தலைவர், பிராந்திய பெறுகைக் குழு, மாவட்ட பொது வைத்தியசாலை, வவுனியா** என்ற முகவரிக்கு அனுப்பப்படுவதுடன் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் 2017 / 2018 ஆம் ஆண்டுக்கான ........................ சேவை வழங்கல் என குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.

07. சகல முத்திரையிடப்பட்ட பெறுகைகளும். 10.10.2017 முற்பகல் 10.30 மணி வரை மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும்.

08. பெறுகை நேரம் முடிவடைந்தவுடன் 10.10.2017 முற்பகல் 10.30 மணிக்கு திறக்கப்படும். பெறுகை திறக்கும் போது விண்ணப்பதாரரோ அல்லது எழுத்து மூலம் நியமிக்கப்பட்ட பிரதிநிதியோ சமூகமளிக்கலாம்.

09. மேலதிக விவரங்களை அலுவலக நேரத்தில் நேரடியாகவோ அல்லது 024-2222715 / 024-2228094 என்ற தொலைபேசி இலக்கத்துடனோ தொடர்பு கொண்டு அறிந்து கொள்ளலாம்.

10. பெறுகை தொடர்பாக பெறுகைக்குழுவின் தீர்மானமே இறுதித்தீர்மானமாகும்.

**தலைவர்**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**மாவட்ட பொது வைத்தியசாலை,**
**வவுனியா.**
**20.09.2017**

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 15.01.1948 மறைவு 16.10.2015

## அமரர் வைத்திலிங்கம் பாலேந்திரன்

(ஓய்வு பெற்ற உபஅதிபர், யா/ இராமநாதன் கல்லூரி)



மாதங்கள் நாலாறானதுவோ ?
புன்னகை முகமதுவும்
நன்னடத்தை வாழ்வதுவும் சீரிய வழிகாட்டலதுவும்
போதும் என நீங்கள் நினைத்து!
ஏழேழு ஜென்மங்கள் கரையலாம்
கரையாது உங்கள் நினைவும்
பிறழாது நீங்கள் காட்டிய தடமும்.


**இணுவில் கிழக்கு,**
**சுன்னாகம்.**

**மனைவி, மக்கள்.**

# மரண அறிவித்தல்

## கணபதிப்பிள்ளை கிருஷ்ணராஜன்

**(B.A, M.A, சமாதான நீதிவான்)**
**(அபிவிருத்தி உத்தியோகத்தர், கிராம அபிவிருத்தி திணைக்களம் வடக்கு மாகாணம்)**



தோற்றம் 28.04.1966 மறைவு 19.09.2017

"கந்தன் இல்லம்", அல்வாய் மேற்கைப்பிறப்பிடமாகவும்கயட்டைஆவரங்கால் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை கிருஷ்ணராஜன் கடந்த (19.09.2017) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை-மரகதம்தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும் காலஞ்சென்ற அண்ணாச்சாமி(முன்னாள் இ.போ.ச.), இராசகிளி தம்பதியரின் பாசமிகு மருமகனும் யசோதா (ஆசிரியை - யா/அச்சுவேலி சரஸ்வதி வித்தியாலயம்) வின் அன்புக் கணவரும் வியாஷன் (மாணவன் - யாழ். இந்துக்கல்லூரி) பர்ஷித் (மாணவன் - யாழ். இந்துக்கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற அருமைராஜன் (பொறியியலாளர்), அன்னலக் ஷமி, எதிர்வீரசிங்கம் (முன்னாள் உற்பத்தி முகாமையாளர் - ப.தெ.வ.அ.கூ.சங்கம் - பருத்தித்துறை), செல்வபதி, வரதராணி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் காலஞ்சென்றவர்களான J.S.சத்திய நாதன் (முன்னாள் கணக்குப்பதிவாளர் - பனை அபிவிருத்திச் சபை, யாழ்ப்பாணம்),தமிழ்மோகன், தெய்வேந்திரம் மற்றும் ரஜனி, யசோதரன் (சுவிஸ்), யசோக்குமார் (சுவிஸ்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.09.2017) வெள்ளிக் கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக "கௌடுது" இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

**077 596 2340**

## பகிரங்க ஏல விற்பனை

**போதனா வைத்தியசாலை யாழ்ப்பாணம்.**

யாழ். போதனாவைத்தியசாலையில் பாவனையிலிருந்து நீக்கப்பட்ட மத்திய காற்று சீராக்கியின் (Air Conditioning) பின்வரும் பொருள்கள் 2017.10.02 ஆம் திகதி திங்கட்கிழமை மு.ப. 10 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்கத் தீர்மானிக்கப் பட்டுள்ளது.

**01. காற்று குளிர்விப்பான்கள் - 02**
**02. மின் நீர் இறைப்பான்கள் - 07**
**03. காற்று குளிர்விக்கும் பகுதிகள் - 02**
**04. குளிரூட்டியின் குழாய் அமைப்புக்கள் - 1000Kg இற்கு மேல்**
**05. பனை மரங்கள் - 25**
**06. தீராந்தி மரங்கள் - 06**
**07. கூரை தகடுகள் - 30**

இவ் ஏல விற்பனையில் கலந்துகொள்ள விரும்புவோர் யாழ். போதனா வைத்தியசாலையின் விடுதி இலக்கம் 24 இற்கு அருகில் மேற்படி பொருட்களை 2017.10.02 ஆம் திகதி காலை 8.00 - 10.00 மணிவரை பார்வையிடமுடிவதுடன் அதனைத்தொடர்ந்து ஏல விற்பனையில் கலந்து கொள்ள முடியும் ஏலத்தில் தெரிவானவர்கள் பணத்தை காசாளரிடம் செலுத்தி பற்றுச்சீட்டைப் பெற்று பொருள்களை அன்றைய தினம் பி.ப. 5 மணிக்கு முன்னர் போதனா வைத்திய சாலையிலிருந்து அப்புறப்படுத்தல் வேண்டும்.

**பணிப்பாளர்**
**போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.**


## மரண அறிவித்தல்கள்

### செல்வி சுப்பிரமணியம் பரமேஸ்வரி



இல. 26, பாரதி வீதி, கச்சேரி - நல்லூர் வீதியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி சுப்பிரமணியம் பரமேஸ்வரி நேற்று (21.09.2017) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - சின்னம்மா தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்றவர்களான சிதம்பரநாதன், தங்கராசா, கமலாவதி, தனலட்சுமி, முத்துராசா, இராசமணி, துரைராசா, சற்குணராஜா ஆகியோரின் அன்புச்சகோதரியும் காலஞ்சென்றவர்களான பாக்கியம், சுப்பிரமணியம், பொன்னுத்துரை, தங்கராணி, கனகசபாபதி மற்றும் யோகராணி ஆகியோரின் மைத்துனியும் றொலிண்டன் - நந்தினியின் சிறிய தாயாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இல.26 பாரதி வீதி, கச்சேரி - நல்லூர் றோட்டிலுள்ள அவரது இல்லத்திலிருந்து இன்று (22.09.2017) வெள்ளிக்கிழமை பி.ப. 4 மணிக்கு தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

### மணிமேகலா சந்திரசேகரம்

(சங்கானை)



அராலி வீதி, சங்கானையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட மணிமேகலா சந்திரசேகரம் நேற்று (21.09.2017) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா - நல்லம்மா தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்றவர்களான பொன்னையா - தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் பொன்னையா சந்திர சேகரம் (ஓய்வு பெற்ற சாரதி, வீடமைப்பு அதிகாரசபை, யாழ்ப்பாணம்) அவர்களின் அருமை மனைவியும் சண்வியா (ஆயுள் வேத வைத்திய கலாநிதி இராமிய சித்த மருத்துவமனை, பண்டத்தரிப்பு), சுரேஷியா (ஆசிரியை மாதகல் சென்.ஜோசெப் ம.வி.) ஆகியோரின் அன்புத்தாயும் கயமுகவரதன், யோகமலர், வரதராசன், நடனமலர், கோடீஸ்வரி (லண்டன்) ஆகியோரின் சகோதரியும் பரராசசேகரம், செகராசசேகரம், இந்திராணி, தேவராணி (ஓய்வு பெற்ற ஆசிரியை, சங்கானை சிவப்பிரகாச ம.வி.), பரராசசிங்கம் (திருமகள் கொமினிக்கேசன், சங்கானை) ஆகியோரின் மைத்துனியும் கமலகாந்த் (பொறுப்பதிகாரி வலிமேற்கு பிரதேசசபை உப அலுவலகம், அராலி), சுபாஸ் ஆகியோரின் அன்புமாமியும் வர்சிகன், சர்விகா (இருவரும் சோதி வேம்படி வித்தியாலயம், மானிப்பாய்), ஜதுர்னா (யூப்பீற்றர் முன்பள்ளி சங்கானை), கிஷோராம் ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.09.2017) வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சங்கானை கரைச்சி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அராலி வீதி, சங்கானை.
077 4195 964

தகவல்:
குடும்பத்தினர்.

## நால்வர் கொலை; இளைஞருக்கு தூக்கு

கொழும்பு,செப்.22

நால்வரைக் கொலை செய்த இளைஞருக்கு அனு ராதபுரம் மேல் நீதிமன்றம் நேற்றுச் சாவுத் தண்டனை விதித்தது.

அனுராதபுரம் எப்பாவலைப் பகுதியில் 2010ஆம் ஆண்டு ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தாய், தந்தை, மகள் மற்றும் மகன் ஆகியோர் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டனர். இந்தக் கொலைக் குற்றச்சாட்டில் எப்பாவலப் பகுதியைச் சேர்ந்த 28 வயதான இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டார். அவர் தொடர்ந்து விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்தார். இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இளைஞர் குற்றவாளியாக இனங்காணப்பட்டார். அவருக்கு நீதிமன்றால் சாவுத் தண்டனை விதிக்கப்பட்டது. குற்றவாளி உயிரிழந்தவர்களின் உறவினர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## படகு கவிழ்ந்து மீனவர் இறப்பு

அம்பாறை, ஒலுவில் கடலில் மீன்பிடிக்கச் சென்ற மீனவரது படகு கடுங்காற்றால் கவிழ்ந்தது. அதில் பயணித்த மீனவர் கடலில் தவறி வீழ்ந்து உயிரிழந்தார் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்தத் துயரச் சம்பவம் நேற்று அதிகாலை நடந்தது. ஒலுவில் 4 ஆம் பிரிவைச் சேர்ந்த சம்சுதீன் பலீல் (வயது- 44) என்பவரே உயிரிழந்தவராவார். சடலம், அக்கரைப்பற்று மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பாக அக்கரைப்பற்றுப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## 9 பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல்

சாவகச்சேரி சுகாதாரத் திணைக்களத்தினரால் மட்டுவில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவில் நேற்று நடத்தப்பட்ட டெங்கு பரிசோதனையில், டெங்கு நுளம்பு உற்பத்தியாகக்கூடிய நீர் நிலைகள் காணப்பட்ட 9 குடியிருப்பாளர்களுக்கு எதிராக பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்யவுள்ளனர். பொலிஸார், படையினர், உள்ளூராட்சி சபையினர், பிரதேச செயலகத்தினர், பிரதேச அமைப்புகளின் பிரதிநிதிகள் இணைந்து பரிசோதனைகளில் ஈடுபட்டனர். அவற்றில் 9 பேருக்கு எதிராக பொலிஸார் வழக்குப் பதிவு செய்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ -9)

## ஒற்றையாட்சியை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பிடப்பட்டுள்ளது.

புதிய அரசமைப்பில் தமிழ் மொழியிலும் சிங்கள மொழியிலும் இலங்கை ஒற்றையாட்சி அரசு என்பது குறிப்பிடப்படுவதோ அதன் பொருள்கோடல் சிங்கள மொழியில் இடப்பட்டதாகவே இருத்தல்வேண்டும் என்று அந்தக் கட்சி குறிப்பிட்டுள்ளது.

வழிகாட்டல் குழுவின் இடைக்கால அறிக்கை தொடர்பில் அந்தக் கட்சி முக்கியமாகத் தெரிவித்துள்ளதாவது:

இணக்கப்பாட்டின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட இடைக்கால அறிக்கை என்று குறிப்பிடக்கூடாது. கலந்துரையாடப்பட்ட உருவாக்கங்கள், கோட்பாடுகள் பற்றிய இடைக்கால அறிக்கை என்றே முன்பக்கத்தில் குறிப்பிடப்படவேண்டும். (அறிக்கையில் அந்தத் திருத்தம் செய்யப்பட்டுள்ளது) இது தொடர்பில் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு மாற்று முன்மொழிவுக்கும் கட்சி உடன்படவில்லை.

தற்போதைய அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதில் உடன்பாடு உண்டு.

இன மற்றும் மத அடிப்படையில் அடிப்படைவாதக் கருத்துக்களைத் தெரிவித்தல் மற்றும் நடைமுறைப்படுத்தலைத் தடுக்கும் சட்ட ஏற்பாடுகள் அரசமைப்பில் உள்வாங்கப்படுதல் வேண்டும்.

அரசமைப்பு நீதிமன்றமானது உயர் நீதிமன்றத்தால் குறிப்பிடப்படுகின்ற நீதிபதிகளால் நியமிக்கப்படுவதாக இருக்கவேண்டும்.

தேசியக் கொள்கைகளை இயற்றுவதற்கு நாடாளுமன்றத்திற்கு உள்ள அதிகாரம் மட்டுப்படுத்தப்படலாகாது. வைவரீதியான ஆளுநர் என்பதற்கும் கட்சி இணங்கவில்லை.

தேசிய பாதுகாப்புக்குக் காணிகளைப் பெறுவதற்கு மத்திய அரசுக்குள்ள அதிகாரம் எந்தச் சந்தர்ப்பத்திலும் சவாலுக்கு உட்படுத்தப்படக் கூடாது. மாகாணங்களில் மக்களைக் குடியமர்த்துதல் குறித்து ஒரு கொள்கை தயாரிக்கப்படவேண்டும்.

ஆகிய கருத்துக்களை அந்தக் கட்சி முன்வைத்துள்ளது. வழிகாட்டல் குழுவின் இடைக்கால அறிக்கையுடன் இந்த விடயங்களில் அனேக மானவை முரண்படுகின்றன. அதனாலேயே கட்சிகள் இடையிலான இணக்கப்பாட்டின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட இடைக்கால அறிக்கை என்று குறிப்பிடப்படக்கூடாது என்று கட்சி வலியுறுத்தியிருந்தது. (உ)

## மகிந்தவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இல்லத்துக் குள் கூரிய ஆயுதத்துடன் செல்ல முயற்சித்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். மகிந்த ராஜபக்சவைப் பார்வையிட வேண்டும் என்று தெரிவித்து அவரது வீட்டுக்கு மேற்படி நபர் சென்றுள்ளார். பாதுகாப்பு அதிகாரிகள் பார்வையிட முடியாது என்று திருப்பி அனுப்ப முயற்சித்துள்ளனர். தனது உடமையிலிருந்து கூரிய ஆயுதத்தை எடுத்து கழுத்தை அறுத்து தற்கொலை செய்யப் போவதாகவும், மகிந்த ராஜபக்சவை பார்வையிட உடனே அனுமதிக்குமாறும் அவர் கோரியுள்ளார்.

பாதுகாப்பு அதிகாரிகள் அவரை மடக்கிப் பிடித்து கறுவாத் தோட்டப் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். (வ-5,33)

## சகல...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று தெரிவிக்கப்பட்டது. ஒக்ரோபர் முதல் வாரங்களில், சபாநாயகர், தலைமை அமைச்சர் ரணில் உள்ளீட்டோர் நாட்டில் இருக்க மாட்டார்கள் என்பதால், ஒக்ரோபர் மாதத்தின் இறுதியில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த விவாதத்தில் முன்வைக்கப்படும் திருத்தங்களின் அடிப்படையில் நவம்பர் மாதம், புதிய அரசமைப்பை வரையும் பணிகள் ஆரம்பமாகும். (வ-5)


ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1400
சீட்டிழுப்பு திகதி 2017.09.21
வெற்றி இலக்கங்கள்: 18 23 26 61 E
21 35 36 49
ரூ. 10,570,300/-

சீட்டிழுப்பு வாரம்: 22
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 56,060,040/-
சீட்டிழுப்பு திகதி: 2017.09.21
அத கோடிபதி
வெற்றி இலக்கங்கள்: 14 18 41 66 D
01 40 45 58

SUPER BALL
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 705
சீட்டிழுப்பு திகதி 21.09.2017 வியாழக்கிழமை
K 06 10 14 29
சுப்பர் ஜக்பொட் ரூ.60, 138, 140/=
22 44 48 60

உத்தியோகபூர்வ முடிவுகள்
சௌபாக்ய வாசனாவ
Development Fortune
சீட்டிழுப்பு வாரம் 076
சீட்டிழுப்பு திகதி 21.09.2017 வியாழக்கிழமை
வெற்றி இலக்கங்கள்: 21 23 28 32
சுப்பர் இலக்கம்: 04
அதிர்ஷ்ட மாதம்: மே
ரூ. 17, 017, 622/= | ரூ. 3, 619, 004/= | ரூ. 2, 992, 088/=

இரண்டாவது சீட்டிழுப்பு வெற்றி இலக்கங்கள்
15 20 49 56
2017.09.23 ஆம் திகதி சனிக்கிழமை
அபிவிருத்தி லொத்தர் சபை
www.dlb.lk

## வெளியானது...

அதிகாரங்களைத் திரும்பப் பெறுவதற்கு மத்திய அரசுக்குக் கட்டுப்பாடுகள் விதிக்கும் யோசனைகளும் வைக்கப்பட்டுள்ளன. மாகாணப் பிரதிநிதி களைக் கொண்ட இரண்டாவது சபை ஒன்றை நிறுவவும் வலியுறுத்தப்பட்டுள்ளது. நாட்டை வழிப்படுத்த அரசமைப்புப் பேரவை ஒன்றை அமைப்பதற்கான முன்மொழிவும் உள்ளது. பெண்களுக்கு 50 வீத இடஒதுக்கீடு வழங்கப்படுவதற்கு வகை செய்யப்படவேண்டும் என்றும் கூறப்பட்டுள் ளது.

**இணக்கமில்லை**

புதிய அரசமைப்புக்கான வழிநடத்தல் குழுவின் உறுப்பினர்கள் இடையே இந்த இடைக்கால அறிக்கை தொடர்பில் இணக்கம் ஏற்படவேயில்லை. அவர்களின் கருத்துக்கள் மட்டுமே இடைக்கால அறிக்கையாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பல விடயங்களுடனும் ஒவ்வொரு கட்சியும் இணக்கமின்மையை வெளிப்படுத்தியுள்ளன. அவற்றை தத்தமது தனிப்பட்ட அறிக்கைகளில் பின்னிணைப்பாகச் சேர்த்துள்ளன. பின்னிணைப்புகளைச் சேர்த்துப் பார்க்கும்போது இடைக்கால அறிக்கையில் கூறப்பட்டுள்ள சிறப்பான விடயங்கள் எவையுமே இணக்கம் காணப்படாதவை என்பது தெளிவாகின்றது.

**116 பக்க அறிக்கை**

அறிக்கை 116 பக்கங்களைக் கொண்டிருக்கிறது. அதில் 44 பக்கங்கள் மட்டுமே வழிகாட்டல் குழுவால் தயாரிக்கப்பட்டவை. மிகுதி 72 பக்கங்களும் கட்சிகளின் இணைப்புகளால் நிரப்பப்பட்டுள்ளன. இதனையும் உள்ளடக்கிய 12 பகுதிகளாக அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. புதிய அரசமைப்பு எப்படிப்பட்ட அடிப்படைகளுடன் உருவாக்கப்படவேண்டும் என்பதற்கான வரையறையை இந்த அறிக்கை கட்டமைத்துள்ளது.

இலங்கை ஒற்றையாட்சி நாடாக இருக்க முடியாது என்று அது தெளிவுபடுத்தியுள்ளது. அதற்குப் பதிலாக சிங்களத்தில் ஏகிய ராஜ்ஜிய என்பதும் தமிழில் ஒருமித்த நாடு என்பதும் பயன்படுத்தப்படும் பதங்களாக இருக்கும். அதன் பொருள் பிரிக்கப்படாத, பிரிக்கப்பட முடியாத நாடு என்பதாகும் என்றும் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

**அதிகாரப் பகிர்வு**

அதிகாரப் பகிர்வு தொடர்பில் சாதகமான நிலைப்பாடுகள் காணப்பட்டாலும், தமிழ் மக்களின் எதிர்பார்க்கைக்குரிய வடக்கு -கிழக்கு மாகாணங்களின் இணைப்பு இந்த அறிக்கையில் இல்லை. ஆனால், அது பற்றி வழிகாட்டல் குழு தொடர்ந்து பரிசீலிப்பதற்கு அறிக்கையில் இடமளிக்கப்பட்டுள்ளது.

வடக்கு -கிழக்கு மாகாணங்களின் இணைப்புத் தொடர்பில் மூன்று தெரிவுகளை அறிக்கை முன்வைத்துள்ளது. தற்போதுள்ள அரசமைப்பில் சொல்லப்பட்டுள்ளமை போன்ற மாகாணங்களை இணைப்பது குறித்த முடிவை அந்த மக்களிடமிருந்தே பெறுவது. அதாவது இணைப்புத் தொடர்பில் மக்கள் கருத்தை அறிவது. மாகாணங்களை இணைப்பதற்குப் புதிய அரசமைப்பில் இடம் வழங்கக்கூடாது. வடக்கு -கிழக்கு மாகாணங்களை இணைப்பதை புதிய அரசமைப்பு உறுதிப்படுத்துவது ஆகிய தெரிவுகள் ஆராயப்பட்டன என்று அறிக்கை கூறு கின்றது. ஆனால் அது பற்றிய இறுதி முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை.

அந்தந்தப் பகுதிகளில் உள்ள சிறுபான்மை மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்படுவதை அரசமைப்பு உறுதி செய்யவேண்டும் என்று மக்கள் பேரவைகள் வலியுறுத்தியுள்ளன என்கிற விடயம் அறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ளது.

அதேநேரம், குடியரசின் ஆட்புல எல்லைக்கும் அதன் இறைமைக்கும் தெளிவான ஆபத்தை ஏற்படுத்துகின்ற ஆயுதக் கலவரத்தையோ அல்லது கிளர்ச்சியையோ ஊக்குவிக்கின்ற அல்லது அரசமைப்பு மீதான ஒரு பன்னாட்டு மீறலில் ஈடுபடுகின்ற நிலைமையொன்று மாகாண சபையால் தோன்றும் போது தலைமை அமைச்சரின் ஆலோசனையின் பேரில் அரச தலைவரின் அறிவிப்பு ஒன்றின் மூலம் மாகாண நிர்வாகத்தின் அதிகாரங்களை அரச தலைவர் பொறுப்பேற்கலாம் என்றும் கூறப்பட்டுள்ளது. அது மட்டுமல்லாது, அவசியமாகும் பட்சத்தில் மாகாண சபையைக் கலைக்கலாம் என்றும் முன்மொழியப்பட்டுள்ளது.

**பௌத்தத்துக்கு முன்னுரிமை**

இடைக்கால அறிக்கையில் பௌத்த மதத்துக்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது. ஏனைய மதங்கள் சமமாக மதிக்கப்படும் என்று கூறப்பட்டிருந்தாலும் பௌத்தத்தைப் பாதுகாப்பதும் பேணுவதும் அரசின் கடமை என்று சொல்லப்பட்டுள்ளது. ஏனைய மதங்களின் விடயத்தில் இவ்வாறு கூறப்படவில்லை.

தேசியம், மாகாணம், உள்ளூராட்சி ஆகிய மூன்று மட்டங்களில் அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்படும் என்று இடைக்கால அறிக்கை கூறுகின்றது. அது எப்படிப்பட்ட விதத்தில் அமைந்திருக்கும என்பதையும் விளக்குகிறது. உள்ளூராட்சியைப் பொறுத்தவரையில் மாநகரம், பிரதேசம் ஆகிய இரு பகுதிகள் மட்டுமே இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. நகர சபைகள் தகுதி நீக்கம் செய்யப்படுகின்றன.

அதிகாரங்கள் தேசிய நிரல், மாகாண நிரல் என்கிற அடிப்படையில் பகிரப்படும். ஒருங்கியை நிரல் வேண்டாம் என்று கூறினாலும் சிலவற்றை ஒருங்கியை நிரலில் வைத்துப் பரிசீலிப்பதற்கான அனுமதியையும் அறிக்கை வழங்கியுள்ளது.

மாகாண ஆளுநரின் அதிகாரங்கள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. அவர் ஒரு நிகழ்வுகளுக்கான தலைவராக மட்டுமே இருப்பார்.

பாதுகாப்பு, பொருளாதார ஒருங்கிணைப்பு, இறைமை, ஆள்புல ஒருமை ஆகிய விடயங்கள் தேசிய நிரலுக்குரியவை என்றும் ஏனையவை மாகாண நிரலுக்குரியவை என்றும் வகுக்கப்பட்டுள்ளன. ஆனால், தேசிய தரம் என்ற வகையில் ஏனைய விடயங்களில் தேசிய அரசு தலையிடுவதற்கான வாய்ப்புகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. உதாரணமாகக் கல்வி, சுகாதாரம் போன்றவற்றின் தேசிய தரத்தை தேசிய அரசே தீர்மானிக்கும்.

**பிரிவினை பற்றிப் பேசவே கூடாது**

எந்தவொரு கட்டத்திலும் பிரிவினை தடுக்கப்படுகிறது. பிரிந்து செல்லுதல் குறித்துப் பேசவே முடியாது என்று இடைக்கால அறிக்கை கூறுகின்றது. எந்தவொரு மாகாணத்தையோ பகுதியையோ தனிநாடாக்குவதற்காக வாதாடுவதோ அதற்காக நடவடிக்கை எடுப்பதோ செய்யப்படக்கூடாதவை என்கிறது அறிக்கை.

அரசமைப்பு நீதிமன்றம் ஒன்று உருவாக்கப்படும் என்று இடைக்கால அறிக்கை கூறுகின்றது.

காணிகள் அனைத்தும் தேசிய அரசுக்குரியவை எனினும் மாகாணங்களுக்கு உட்பட்ட காணிகள் அனைத்தையும், தேசிய அரசின் தேவைக்காகக் குறித்தொதுக்கப்பட்டவை தவிர அதாவது நீர்ப் பயன்பாடு போன்ற விடயங்களில் தேவைக்காக, பயன்படுத்தும் உரிமை மாகாணங்களுக்குரியது. அரச காணிகள் தனியாருக்கு வழங்கப்படும் போது காணியற்றநபர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். அதிலும் முதலில் அந்த மாவட்டத்தைச் சேர்ந்த குறிப்பிட்ட உப பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கும், அடுத்து மாவட்டத்தில் உள்ளவர்களுக்கும், அடுத்து மாகாணத்தில் உள்ளவர்களுக்கு இறுதியாக ஏனையவர்களுக்கும் வழங்கப்படும்.

**காணி அதிகாரம்**

காணி விடயத்தில் மத்திய மாகாண அரசுகளுக்கு இடையில் பிணக்கு ஏற்பட்டால் அதனைத் தீர்ப்பதற்கு நியாய சபை ஒன்ற அரச தலைவரால் அமைக்கப்படும். அதில் மத்திய அரசின் தலைமை அமைச்சர், மாகாண முதல் அமைச்சர் ஆகியோரின் பிரதிநிதிகள் நியமிக்கப்படுவர். தேசிய பாதுகாப்புக்காக நியாயமான காரணங்களைக் குறிப்பிட்டு தலைமை அமைச்சரின் பரிந்துரையின் பேரில் அரச தலைவர் காணிகளை மத்திய அரசின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரமுடியும். தேசிய காணி ஆணைக்குழு ஒன்று உருவாக்கப்படும்.

பகிரப்பட்ட அதிகாரங்கள் மாகாண சபைகளிடம் இருந்து ஒருதலைப்பட்சமாகத் திரும்பப் பெறப்படாமல் இருப்பதை உறுதிசெய்வதற்காக, அரசமைப்பு ரீதியாகப் போதிய காப்புகளை கடைப்பிடிக்காமல் மத்திய அரசு மாகாண சபை நிரலில் உள்ள கருமங்கள் மீதான சட்டவாக்கத்தை அத்தகைய சட்டவாக்கத்துடன் உடன்படாத மாகாணசபை ஏதேனும் தொடர்பாக அமைக்கக்கூடாது என்றும் அறிக்கை கூறுகின்றது.

**இரண்டாவது சபை**

பெரும்பாலும் மாகாண சபைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இரண்டாவது சபை ஒன்றை உருவாக்கவும் அறிக்கை பரிந்துரைக்கிறது. மாகாணங்களில் இருந்து 45 உறுப்பினர்களையும் நாடாளுமன்றம் நியமிக்கும் 10 உறுப்பினர்களையும் உள்ளடக்கிய 55 உறுப்பினர்களை அந்தச் சபை கொண்டிருக்கும். சட்டவாக்கத்தை நிறுத்தும் அதிகாரம் இந்தச் சபைக்குக் கிடையாது என்றபோதும் அதனை நாடாளுமன்றத்துக்குத் திருப்பி அனுப்ப இந்தச் சபையால் முடியும். அரசமைப்புத் திருத்தங்களைச் செய்யவேண்டும் என்றால் இரண்டு சபைகளிலும் மூன்றிலிரண்டு பெரும்பான்மையைப் பெறவேண்டும்.

நேரடி மற்றும் விகிதாசார முறைகளை உள்ளடக்கிய கலப்புத் தேர்தல் முறைமையொன்றே பரிந்துரைக்கப்பட்டுள்ளது. நாடாளுமன்றம் 233 ஆசனங்களைக் கொண்டிருக்கும். அதில் 140 ஆசனங்கள் நேரடி தேர்தல் மூலமும் 93 ஆசனங்கள் விகிதார பிரதிநிதித்துவம் மூலமும் தெரிவு செய்யப்படும். இடம்பெயர்வுகளால் ஏற்பட்டுள்ள ஆள்குறைவைக் கணக்கில் எடுத்து குறிக்கப்பட்ட காலத்துக்கு வடக்கு மாகாணத்துக்கு மேலதிக ஆசனங்கள் ஒதுக்கப்படவேண்டும்.

நிறைவேற்று அரச தலைவர் முறைமை நீக்கப்படவேண்டும், மாகாணங்களுடன் தொடர்புபட்ட அதிகாரங்கள் அரச தலைவருக்கு வழங்கப்படவேண்டும். அரச தலைவரை நாடாளுமன்றமே நியமிக்க வேண்டும் என்கிற பரிந்துரைகளும் செய்யப்பட்டுள்ளன.

**அரசமைப்புப் பேரவை**

அரசமைப்புப் பேரவை ஒன்றை உருவாக்கவும் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. சுயாதீன ஆணைக்குழுக்களின் உறுப்பினர்களை நியமிப்பது மற்றும் பொதுச் சேவை, நீதிச் சேவைகளில் உள்ள உயர் பதவிகளுக்கு அதிகாரிகளை நியமிப்பது ஆகியவற்றைச் செய்வதற்காக இந்தப் பேரவை உருவாக்கப்படவேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது. 50 வீதத்துக்கு மேற்பட்ட பெண்கள் பிரதி நித்துவக் கொள்கையை நடைமுறைப்படுத்தும் தேவையைக் கருத்திற்கொண்டு ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

எனினும் பின்னிணைப்புகளாகக் கொடுக்கப்பட்டுள்ள கட்சிகளின் அறிக்கைகளில் இந்த விடயங்களில் பலவற்றுடன் ஒவ்வொரு கட்சியும் தமது உடன்பாடின்மையை வெளிப்படுத்தியுள்ளன. ஒவ்வொரு கட்சியும் சில விடங்களில் இணக்கத்தை வெளிப்படுத்திய போதும் முக்கிய விடயங்களில் இணக்கம் எட்டப்படவில்லை என்பதை இணைப்புகள் உறுதிப்படுத்துகின்றன.

(உ)

## வடக்கு...

யாழ்ப்பாணம், செப். 22

வடக்கு - கிழக்கு இணைப்பு, கூட்டாட்சி என்பன புதிய அரசமைப்பில் உள்ளடக்கப்பட வேண்டும் எனத் தெரிவித்து, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இடைக்கால அறிக்கைக்கு பின்னிணைப்பு வழங்கியுள்ளது.

பின்னிணைப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

1. இலங்கை மாகாணங்களின் ஒன்றியமாக ஒன்றாக இருத்தல் வேண்டும். இலங்கை ஓர் ஐக்கியமான பிரிபடாத மற்றும் பிரிக்க முடியாத நாடு என்னும் சட்டகத்தினுள் கூட்டாட்சி அரசொன்றாக இருத்தல் வேண்டும். அரசமைப்பின் ஏற்பாடுகளுக்கு இணங்க மத்தியும் மாகாணங்களும் தமது தகவுப் பிரதேசங்களில் முழுமையான அதிகாரத்தைப் பிரயோகித்தல் வேண்டும்.
2. இலங்கை மதச்சார்பற்ற நாடாக இருத்தல் வேண்டும். பெரும்பான்மைக் கருத்தொருமிப்பு பௌத்த மதத்துக்கு முதன்மைத் தானம் வழங்கப்படுவதற்கு சார்பாக இருக்குமாயின், அது தொடர்பான நியதிகளும், நிபந்தனைகளும் குறித்துரைக்கப்படுதல் வேண்டும்.
3. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் ஒரு மாகாணமாக அமைதல் வேண்டும். வரலாற்று ரீதியாக வடக்கிலும் கிழக்கிலும் தமிழ் பேசும் மக்கள் குடியிருப்பதுடன் கூறப்பட்ட இரண்டு மாகாணங்களும் அந்த மாகாணங்களிலுள்ள ஒவ்வொரு மாவட்டமும் குடித்தொகை மாற்றங்களுக்கு மத்தியிலும், இன்றும் பெருமளவு தமிழ்ப் பேசும் பிரதேசங்களாகவே காணப்படுகின்றன. எவருக்கும் அநீதி இழைக்கப்படாதிருப்பதையும் அனைத்துக் குடிமக்களும் சமமான நடத்துகையைப் பெற்றுக் கொள்வதையும் உறுதிப்படுத்துவதற்காகப் போதிய பாதுகாப்பு நடவடிக்கைகள் உள்ளடக்கப்படுதல் வேண்டும்.
4. மாகாணங்களுக்கு குறித்தொதுக்கப்படவுள்ள தத்துவங்களும் பணிகளும்
மங்கள முனசிங்க தெரிவுக்குழுவின் அறிக்கை,
அரசமைப்பு சட்டவரைவு, 2000,
முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவால் நியமிக்கப்பட்ட பல்லின நிபுணர்கள் குழுவின் அறிக்கை மற்றும் மகிந்த ராஜபக்சவால் அங்கீகரிக்கப்பட்டதும், பேராசிரியர் திஸ்ஸ விதாரணவை தவிசாளராகக் கொண்டதுமான அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழுவின் அறிக்கை ஆகியவற்றின் விதப்புரைகளுக்கு இசைவானதாகவோ இருக்க வேண்டும். மேற்படி முன்மொழிவுகள் பற்றிய பரந்த மற்றும் கணிசமானதொரு கருத்தொருமிப்பு கட்டியெழுப்பப்பட்டுள்ளது.
5. பகிர்ந்தளிக்கப்பட்ட அதிகாரங்களைப் பிரயோகிப்பதற்குத் தேவைப்படும் நிதிகளைத் திரட்டுவதற்கு அவசியமான தத்துவங்களை மாகாணங்கள் கொண்டிருத்தல் வேண்டும்.
6. மாகாணம் ஒன்றின் ஆளுநர், அரச தலைவரின் பிரதிநிதியாக மத்திக்கும் மாகாணங்களுக்கும் இடையில் சீரான தொழில் உறவுமுறையொன்றை உறுதிப்படுத்துவதற்காக செயற்படுதல் வேண்டும் என்பதுடன் மாகாணத்தின் நிறைவேற்றுத் தத்துவத்தின் பிரயோகத்தில் தலையிடுவதற்கான தத்துவமெதனையும் கொண்டிருத்தல் ஆகாது. ஆனால் ஆளுநரின் தத்துவங்கள் அரசமைப்பில் தெளிவாக வரையறுக்க வேண்டும்.
7. மாகாணங்களைச் சேர்ந்த பிரதிநிதிகளைக் கொண்ட பிரதிநிதித்துவக் குழுவொன்றாக செனட் (இரண்டாம் சபை) இருத்தல் வேண்டும் என்பதுடன் பகிர்ந்தளிக்கப்பட்ட அதிகாரங்களை மாகாணங்களிலிருந்து திருப்பி எடுத்துக் கொள்ளல் அல்லது அவற்றைக் குறைப்பதற்கான சாத்தியம் ஆகியவற்றை மேற்பார்வை செய்வதற்கான தத்துவங்கள் இதற்கு அளிக்கப்பட்டிருத்தலும் வேண்டும்.
8. அரசமைப்பு மீயுயர் சட்டமாக இருத்தல் வேண்டும் என்பதுடன் அரசமைப்புத் தொடர்பான அனைத்து விடயங்களையும் பொருள்கோடல் செய்வதற்கு அனைத்துப் பிணக்குகளையும் தீர்த்து வைப்பதற்கும் அரசமைப்பு நீதிமன்றம் பொறுப்பாக்கப்படுத்தல் வேண்டும்.
9. ஏற்றுக் கொள்ளத்தக்கதொரு கருத்தொருமிப்பை அடைவதற்கான நலன்கருதி, இடைக்கால அறிக்கையில் வெளிப்படுத்தப்பட்டுள்ள முதன்மைக் கோட்பாடுகள் இரண்டு முதன்மைக் கட்சிகளும் ஏற்றுக் கொள்ளத்தக்கதாக இருக்குமாயின், அவற்றுடனான இணக்கத்தைப் பரிசீலிப்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தயாராக உள்ளது. (வ-5)

# வடமாகாண அணி அரையிறுதிக்குள்



யாழ்ப்பாணம், செப். 22
43ஆவது தேசிய விளையாட்டு விழாவின் ஒரு அங்கமான கால்பந்தாட்டத் தொடரில், ஆண்கள் பிரிவில் வடக்கு மாகாண அணி அரையிறுதிக்குத் தகுதி பெற்றது.

மாத்தறை பொது விளையாட்டு மைதானத்தில் நேற்று இடம்பெற்ற காலிறுதி ஆட்டத்தில் வடக்கு மாகாண அணியை எதிர்த்து வடமத்திய மாகாண அணி மோதியது. ஆட்டத்தின் ஆரம்பத்தில் இரண்டு அணிகளும் சிறந்த போராட்டத்தை வெளிப்படுத்தின. கோல் கணக்கு இல்லாமல் முடிவுக்கு வந்தது முதல் பாதி. இரண்டாம் பாதியிலும் மாற்றங்கள் ஏற்படவில்லை. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரண்டு அணிகளும் கோல்கள் எதையும் பதிவுசெய்யாததை அடுத்து சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. முடிவில் 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றது வடமாகாண அணி. (ம-23)

## அன்ரனிஸ், ஐயனார் அணிகள் வென்றன

யாழ்ப்பாணம், செப். 22
மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகம் வடமாகாண ரீதியாக அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையில் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில், நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களில் சென். அன்ரனிஸ், ஐயனார் அணிகள் வெற்றிபெற்றன.

அன்ரனிஸின் மைதானத்தில் இரவு 8 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் மன்னார் அந்தோனியார்புரம் சென். அன்ரனிஸ் அணியை எதிர்த்து வல்வெட்டித்துறை வல்வை அணி மோதியது. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரண்டு அணிகளும் தலா ஒரு கோலைப் பதிவுசெய்தமையால் சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. முடிவில் 3:2 என்ற கோல் கணக்கில் அன்ரனிஸ் அணி வெற்றிபெற்றது.

தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் வடமராட்சி சமரபாகு நியூட்டன் அணியை எதிர்த்து துறையூர் ஐயனார் அணி மோதியது. இதில் துறையூர் ஐயனார் அணி 5:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)




ஸ்பெய்னின் புகழ்பெற்ற கால்பந்தாட்டக் கழகமான ரியல் மட்ரிட், அந்த அணியின் நட்சத்திர வீரர் கார்வஜெல் இடையில் எதிர்வரும் 2022ஆம் ஆண்டு வரை ஒப்பந்தம் நீடிக்கப்பட்டுள்ளது. (ம)

## வீழ்ந்தார் சிந்து

ஜப்பான் பூப்பந்தாட்டத் தொடரில் இரண்டாவது சுற்றுடன் தோல்வியடைந்து வெளியேறினார் இந்தியப் பூப்பந்தாட்ட வீராங்கனை பி.வி.சிந்து.

நேற்று நடைபெற்ற இந்த ஆட்டத்தில் சிந்துவை எதிர்த்து ஜப்பான் வீராங்கனை ஒகுஹாரா மோதினார். மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. 21:18 என்ற புள்ளிகளின் அடிப்படையில் முதல் செற்றைக் கைப்பற்றினார் ஒகுஹாரா. அவர் தனது ஆதிக்கத்தை தொடர்ந்தும் நிலைப்படுத்தி இரண்டாவது செற்றை 21:8 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றினார்.

முடிவில் மூன்றாவது செற்றுக்கு வேலை வைக்காமல் 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றி பெற்று சிந்துவை வெளியேற்றினார் ஒகுஹாரா. (ம)

## ரியல் மட்ரிட் கடும் பயிற்சி



ஸ்பானியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கு இடையிலான லா லிகா தொடரில், தனது ஆதிக்கத்தை நிலைநாட்ட ரியல் மட்ரிட் அணி கடும் பயிற்சியில் ஈடுபட்டு வருகிறது.

ஸ்பானியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கு இடையிலான லா லிகா தொடர் தற்போது விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. இன்று ரியல் மட்ரிட், ரியல் பெடிஸ் அணிகளுக்கு இடையிலான ஆட்டம் நடைபெறவுள்ள நிலையில் இந்த ஆட்டத்துக்காக ரியல் மட்ரிட் அணி நேற்றுக் கடும் பயிற்சியில் ஈடுபட்டது.

கடந்த வருடம் ரியல் மட்ரிட் அணி சம்பியனாகியிருந்தது. இதனால் இந்த வருடத்திலும் தனது ஆதிக்கத்தை நிலை நாட்ட மட்ரிட் கடும் முனைப்புக் காட்டி வருகிறது என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம)

## வென்றது நியூஸ்ரார்

யாழ்ப்பாணம், செப். 22
மணற்காடு சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் நியூஸ்ரார் அணி வெற்றிபெற்றது.

சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் வட்டுக்கோட்டையூத் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வரணி நியூஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதியது. 2:0 என்ற கோல் கணக்கில் நியூஸ்ரார் அணி வெற்றிபெற்றது. பிரதீபன் ஆட்டநாயகனாகத் தெரிவானார். (ம-23)

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், செப். 22
இலங்கை பாடசாலைகள் கால்பந்தாட்டச் சங்கம் நடத்தும் 18வயதுப் பிரிவினருக்கான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டமொன்று சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இன்று இடம்பெறவுள்ளது. இந்த ஆட்டத்தில் கொழும்பு லுமினிக் கல்லூரி அணியை எதிர்த்து யாழ்ப்பாணம். சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி மோதவுள்ளது. (ம-23)



## யங்ஹென்றிஸ் அபார ஆட்டம்

யாழ்ப்பாணம், செப். 22
அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் இளவாலை யங்ஹென்றிஸ் அணி வெற்றிபெற்றது.

அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் டயமன்ஸ் அணியை எதிர்த்து இளவாலை யங்ஹென்றிஸ் அணி மோதியது. கோல்கள் இல்லாமல் முடிவுக்கு வந்தது முதல் பாதி.

இரண்டாம் பாதியின் 16ஆவது நிமிடத்தில் யங்ஹென்றிஸின் முதல் கோலைப் பதிவு செய்தார் டிலக்சன். 28ஆவது நிமிடத்தில் தனேஸ் மற்றொரு கோலைப் பதிவுசெய்ய முடிவில் 2:0 என்ற கோல் கணக்கில் யங்ஹென்றிஸ் அணி வெற்றிபெற்றது. (ம-23)

## அன்ரனிஸை வீழ்த்தியது நசரேத்

யாழ்ப்பாணம், செப். 22
அரியாலைசரஸ்வதிசனசமூக நிலையம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் நசரேத் அணி வெற்றிபெற்றது.

அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் நசரேத் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து பாசையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது. ஆட்டத்தின் 10ஆவது நிமிடத்தில் நசரேத்தின் முதல் கோலைப் பதிவுசெய்தார் ஒக்ஸ்போர்ட். 19ஆவது நிமிடத்தில் கிறிஸ்ரி மற்றொரு கோலைப் பதிவுசெய்து நசரேத்தின் கோல் கணக்கை இரண்டாக உயர்த்தினார். 2:0 என்று நசரேத்தின் ஆதிக்கத்துடன் முடிவுக்கு வந்தது முதல்பாதி. இரண்டாவது பாதியில் மாற்றங்கள் ஏற்படவில்லை. முடிவில் 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது நசரேத். (ம-23)

# முகுருசா காலிறுதியில்

ஜப்பான் ரென்னிஸ் தொடரில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் காலிறுதிக்குத் தகுதி பெற்றுள்ளார் ஸ்பெய்ன் வீராங்கனை முகுருசா.



நேற்று நடைபெற்ற காலிறுதிக்குத் தகுதி பெறும் ஆட்டத்தில் முகுருசாவை எதிர்த்து மோனிகா பியூங் மோதினார். மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதலாவது செற்றை 6:4 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றிய முகுருசா, தனது ஆதிக்கத்தைத் தொடர்ந்தும் தக்கவைத்து இரண்டாவது செற்றை 6:0 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றினார். இதனால் அவர் மூன்றாவது செற்றுக்கு வேலை வைக்காமல் 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்று காலிறுதிக்குத் தகுதி பெற்றார்.

கடந்த சில தொடர்களில் முகுருசா சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தவில்லை. இதனால் இந்தத் தொடரிலாவது அவர் கிண்ணம் வெல்வாரா என்பது தொடர்பில் பெரும் எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது. (ம)




# மத்தியூஸிக்கு மீண்டும் காயம்

பாகிஸ்தானுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில், இலங்கை அணியின் சார்பாக மத்தியூஸ் களமிறங்கமாட்டார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவுக்கு எதிரான தொடர் தோல்விகளை அடுத்து, இலங்கை அணி பாகிஸ்தானை எதிர்கொள்ளவுள்ளது. இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான இரண்டு ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடர், எதிர்வரும் 28ஆம் திகதி நடைபெறவுள்ளது. முதலாவது ஆட்டம் அபுதாபியில் நடைபெறவுள்ளது. இந்த ஆட்டத்தில் இலங்கை அணியின் சார்பாக மத்தியூஸ் விளையாடமாட்டார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.


இலங்கை அணி கடந்த ஜனவரி மாதம் தென்னாபிரிக்காவுக்குச் சுற்றுப் பயணம் செய்து விளையாடிய போது மத்தியூஸின் தொடைப் பகுதியில் காயம் ஏற்பட்டது. இதையடுத்து சுமார் 6 மாதங்கள் அவர் ஓய்வில் இருந்தால். தலைமைப் பதவியில் இருந்து அவர் விலகுவதற்கு உடல்தகுதியை நிரூபிக்க பெரும் சிரமப்பட வேண்டியிருந்ததும் முக்கிய காரணம். இந்த நிலையில் அவர் மீண்டும் காயமடைந்தமை இலங்கை வீரர்களின் உடல்தகுதியின் மட்டில் சில அதிருப்திகளை ஏற்படுத்தியுள்ளது.

**தரங்கவும் இல்லை**

பாகிஸ்தானுக்கு எதிரான தொடரில், இலங்கை அணியின் சார்பாக தரங்கவும் களமிறங்கமாட்டார் என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது. ஒருநாள் மற்றும் ரி-20 ஆட்டங்களின் தலைவரான அவர், மட்டுப்படுத்தப்பட்ட ஆட்டங்களில் இலங்கை அணியை மேம்படுத்த ஆறு மாத காலம் டெஸ்ட் ஆட்டங்களைப் புறக் கணித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

# தலைமைத்துவத்தில் தடுமாற்றம் இல்லை

## கிளார்க்குக்கு சிமித் பதிலடி




"எனது தலைமைத்துவப் பதவி மோசமான நிலையில் இல்லை" என ஆஸ்திரேலிய அணியின் தலைவர் ஸ்ரீவ் சிமித் தெரிவித்தார்.

சமீபத்தில் ஆஸ்திரேலிய அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரில் பங்களாதேஷ் 1:1 என்று சமநிலைப்படுத்தியது. கடந்த மார்ச் மாதம் இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரை ஆஸ்திரேலிய அணி 1:2 என இழந்திருந்தது. குறுகிய வடிவிலான ஆட்டங்களிலும் ஆஸ்திரேலிய அணியின் ஆதிக்கம் சமீபகாலமாக தளர்ந்து வருகிறது. இந்தியாவுக்கு எதிரான 5 ஒருநாள் ஆட்டங்கள் கொண்ட தொடரின் முதல் ஆட்டத்தில் ஆஸ்திரேலிய அணி 26 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வி கண்டது. இதனால் ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் தலைவர் கிளார்க், "சிமித்தின் தலைமைப் பணிக்கு சவால் ஏற்பட்டுள்ளது. வெற்றி பெறுவதற்கான வழிகளை அவ்ர், வரையறுக்க வேண்டும்" என்று தெரிவித்திருந்தார்.

அவரது கருத்து ஆஸ்திரேலிய அணியின் சமீபகால சாதனைகளை சற்றுத் திரும்பி பார்க்க வைத்துள்ளது. 2015ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்தை வென்ற பிறகு ஆஸ்திரேலிய அணியிடம் பெரிய அளவிலான திறன்கள் வெளிப்படவில்லை. கடந்த ஜூன் மாதம் இங்கிலாந்தில் நடைபெற்ற மினி உலகக்கிண்ணத் தொடரில் ஆஸ்திரேலிய அணி அரை இறுதிக்குக்கூட தகுதி பெறாமல் வெளியேறியிருந்தது. இதனால் ஆஸ்திரேலிய அணி ஒருவித நெருக்கடிக்கு உள்ளாகியிருப்பதாக கருதப்படுகிறது. இந்த நெருக்கடிகள், அழுத்தங்கள் அணியின் தலைவர் என்ற ரீதியில் சிமித் மீது சிறிது அதிகமான வைக்கப்பட்டன.

இந்த நிலையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில், "எனது தலைமைப் பதவிக்கு நெருக்கடி ஏற்பட்டுள்ளது என்று நான் கருதவில்லை. இந்தப் பதவியில் நான் மோசமான நிலையில் இல்லை" என்று சிமித் தெரிவித்தார். (ம)

# சிமித் 100

ஆஸி.அணியின் தலைவர் சிமித் நேற்று தனது 100 ஆவது ஒருநாள் ஆட்டத்தில் களமிறங்கினார்.

ஆஸ்திரேலிய அணி இந்தியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான இரண்டாவது ஆட்டம் கொல்கத்தாவில் நேற்று நடைபெற்றது. இந்த ஆட்டம் சிமித்துக்கு 100ஆவது ஆட்டமாக அமைந்தது. (ம)

# இந்திய - தென்னாபிரிக்கத் தொடர் ஜனவரியில் ஆரம்பம்

இந்தியா - தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையிலான கிரிக்கெட் தொடர் எதிர்வரும் ஜனவரி மாதத்தில் ஆரம்பமாக அதிக வாய்ப்புள்ளது என்று தெரியவருகிறது.

பன்னாட்டு கிரிக்கெட் சபையின் எதிர்காலத் திட்டத்தின்படி இந்திய அணி அடுத்த சில மாதங்களில் தென்னாபிரிக்காவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு 4 டெஸ்ட், 3 ஒருநாள், 3 ரி-20 ஆட்டங்களில் விளையாடவிருந்தது. கிறிஸ்மஸ் தினத்துக்கு அடுத்த நாளான டிசெம்பர் 26ஆம் திகதி இந்திய அணி தமக்கு எதிராக விளையாட வேண்டும் என்று தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை விரும்பியது. இலங்கைக்கு எதிரான தொடர் டிசெம்பர் மாதம் 24ஆம் திகதி நிறைவடைவதால் பொக்சிங் டே ஆட்டத்துக்கு (டிசெம்பர் 26ஆம் திகதி) சாத்தியமில்லை என்று இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை அறிவித்தது. அத்துடன் ஒரு டெஸ்ட் ஆட்டத்தைக் குறைத்துக் கொண்டு 3 டெஸ்ட், 6 ஒருநாள், 3 ரி-20 ஆட்டங்கள் என்று தொடரை வைத்துக்கொள்ளலாம் என்றும் அது அறிவுறுத்தியது. இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் ஆலோசனையை தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை ஏற்றதையடுத்து தொடரில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இரு அணிகளுக்கும் இடையிலான தொடர் டிசெம்பர் 26ஆம் திகதியல்லாமல் ஜனவரி மாதம் 5 அல்லது 6ஆம் திகதியில் நடைபெற வாய்ப்புள்ளது என்று கருதப்படுகிறது. (ம)







# 8 சதங்கள் விளாசி சங்கக்கார சாதனை

இலங்கை அணியின் முன்னாள் நடசத்திர வீரரான சங்கக்கார நடப்பு வருடத்தில் மட்டும் 8 சதங்கள் விளாசி சாதனை படைத்துள்ளார்.

கடந்த 2015ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதத்துடன் இலங்கை அணியில் இருந்து ஓய்வு பெற்றார். தற்போது அவர் இங்கிலாந்துக் கழகமான சர்ரேக்காக விளையாடி வருகிறார். எனினும் இந்த வருடத்துடன் சர்ரேயில் இருந்தும் அவர் விலகி முழுமையாக ஓய்வெடுக்கிறார். இந்த வருடம் சங்காவுக்குப் பொற்காலம் என்றே சொல்லலாம். 8 சதங்களை இந்த வருடத்தில் பதிவுசெய்துள்ளார். இதனால் சங்காவைத் தக்கவைப்பதற்கு சர்ரே அவருடன் பேச்சு நடத்தும் என்றே கருதப்படுகிறது. (ம)

# சுருட்டித் தள்ளப்பட்டது ஆஸ்திரேலியா

## குல்தீப் யாதவ் ஹற்றிக் பதிவு
## புவனேஸ்வர் மிரட்டல் பந்துவீச்சு





இந்தியா - ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான இரண்டாவது ஒருநாள் ஆட்டத்தில் ஆஸ்திரேலிய அணியை 202 ஓட்டங்களில் கட்டுப்படுத்தி 50 ஓட்டங்களால் அபார வெற்றிபெற்றது இந்திய அணி.

**இந்தியாவின் இன்னிங்ஸ்**

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. 7 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் ரோகித் சர்மா. எனினும், ரகானே - கோக்லி இணை ஆஸ்திரேலிய அணியின் பந்துவீச்சு வரிசையில் கணிசமான ஆதிக்கம் செலுத்தியது. நீண்டு நிலைபெற்றது இணைப்பாட்டம். பிறிதொரு இலக்கை இழக்காமல் 100 ஓட்டங்களை எட்டியது இந்திய அணி. இருவரும் அரைச்சதம் கடந்தனர். அணி 121 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் 55 ஓட்டங்களுடன் ரண்அவுட் முறையில் ஆட்டமிழந்தார் ரகானே. பாண்டே 3 ஓட்டங்களுடன் போல்ட் ஆனார். டோனி 5 ஓட்டங்களுடன் ஏமாற்றினார். கேதர் யாதவ் 24 ஓட்டங்களைப் பெற்றார். மறுமுனையில் சதத்தை நோக்கி விரைந்து கொண்டிருந்த கோக்லி 92 ஓட்டங்களுடன் போல்ட் முறையில் ஆட்டமிழந்து சென்றார். பாண்டியா, புவனேஸ்வர் குமார் இருவரும் 20 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழக்க 252 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது இந்திய அணி.

பந்துவீச்சில் கட்டர் நைல், ரிச்சாட்சன் இருவரும் தலா 3 இலக்குகளையும், கம்மின்ஸ், அகர் இருவரும் தலா ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

**ஆஸ்திரேலியாவின் இன்னிங்ஸ்**


பதிலுக்குக் களமிறங்கிய ஆஸ்திரேலிய அணிக்கு ஆரம்பத்தில் தடுமாற்றத்தை வழங்கினார் புவனேஸ்வர் குமார். ஈரலிப்பான ஆடுகளத்தை சாதகமாகப் பயன்படுத்தி உட்திரும்பல் தன்மையுடைய பந்துகளை அதிகம் வீசினார் புவனேஸ்வர் குமார். ஆரம்ப வீரர்களான கார்ட்ரைட், வோர்ணர் இருவரும் ஒரு ஓட்டத்துடன் புவனேஸ்வர் குமாரின் பந்துவீச்சில் வீழ்ந்தனர். சிமித், ஹெட் ஓரளவு தாக்குப்பிடித்து போராட எத்தனித்தனர். இணைப்பாட்டமாக 76 ஓட்டங்கள் பகிரப்பட்டன. 39 ஓட்டங்களுடன் ஹெட் ஆட்டமிழந்தார். மக்ஸ்வெல் ஏமாற்றினார். ஸ்ரொய்னிஸ் ஒரு முனையில் நிலைத்தார். எனினும் மறுமுனையில் ஆட்டமிழந்து சென்றார் சிமித். வேட், அகர், கம்மின்ஸ் ஆகியோரை 38ஆவது பந்துப்பரிமாற்றத்தின் இரண்டாம், மூன்றாம், நான்காம் பந்துகளில் வீழ்த்தி ஹற்றிக் படைத்து கடைசிக்கட்டத்தில் கச்சிதமான உதவியை வழங்கினார் குல்தீப். 202 ஓட்டங்களில் சுருண்டது ஆஸ்திரேலியா. 50 ஓட்டங்களால் வென்றது இந்தியா.

பந்துவீச்சில் குல்தீப், புவனேஸ்வர் குமார் இருவரும் தலா 3 இலக்குகளையும், பாண்டியா, சாகல் இருவரும் தலா 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

**புவனேஸ்வர் குமார் மிரட்டல் பந்துவீச்சு**

நேற்றைய ஆட்டத்தில் புவனேஸ்வர் குமார் மிகச் சிறந்த பந்துவீச்சை வழங்கினார். அவர் 6.1 பந்துப்பரிமாற்றங்களை வீசி 2 ஓட்டமற்ற பந்துப்பரிமாற்றங்கள் உள்ளடங்கலாக 9 ஓட்டங்களை மட்டுமே விட்டுக் கொடுத்து 3 இலக்குகளைக் கைப்பற்றியிருந்தார். அவர் மொத்தமாக வீசிய 37 பந்துகளில் 31 பந்துகளில் ஓட்டமெதுவும் பெறப்படவில்லை. (ம)

# இங்கிலாந்து - தீவுகள் ஆட்டம் கைவிடப்பட்டது



இங்கிலாந்து - மேற்கிந்தியத் தீவுகளுக்கு இடையிலான ஐந்து ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடரின், இரண்டாவது ஆட்டம் மழை காரணமாகக் கைவிடப்பட்டது.

மேற்கிந்தியத் தீவுகள் அணி இங்கிலாந்துக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான முதலாவது ஆட்டத்தில் இங்கிலாந்து வெற்றிபெற்றது. இந்த நிலையில் இரண்டாவது ஆட்டம் நேற்று நடைபெற்றது. இந்த ஆட்டத்தில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்தியத் தீவுகள் முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இங்கிலாந்து அணி வெறும் 2.2 பந்துப்பரிமாற்றங்களை எதிர்கொண்டு இலக்குச் சரிவில்லாமல் 21 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது மழை குறுக்கிட ஆட்டம் கைவிடப்பட்டது. (ம)


மாபெரும் புலமைப்பரிசில் திட்டம்
SMS Your Name & Course to 759520941 & Get School
*Mobile Phone Repairing. Ms office,Wed Design,DTP, organ-Keybord,
*AutoCAD,*Revit,*3D Max,*Maya*Multimedia,Net-Engineering-USA,
கற்றால் நாளந்தம் ரூபா 10,00க்கு மேற்பட்ட வருமானத்தை பெறக்கூடிய கற்கை நெறிகள்.
*Qualified Lectures From American Institute-AICT-Colombo
ஆடியபாத வீதி, கல்வியங்காட்டு சந்தியில்
Bus Route: Point Pedro (750/751)
MCAI CAMPUS

ALLIANCE FRANÇAISE DE JAFFNA-
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி

- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANÇAISE மட்டுமே
- அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
- யாரும் படிக்கலாம்.
www.ambafrance-lk.org
021 222 8093 61,கச்சேரி-நல்லூர் வீதி,யாழ்ப்பாணம்

### மரண அறிவித்தல்

மண்ணில் 30 11 1932



விண்ணில் 20 09 2017

**அ. லூயிஸ் பொனிபஸ்**

*(இளைப்பாறிய சுங்கத்துறை அதிகாரி)*

ஊர்காவற்றுறையைப்பிறப்பிடமாகவும் 70/6, பழைய பூங்காவீதி, யாழ்ப்பாணம், 426/16, 1/4, சிறில் பெரேரா மாவத்தை, கொழும்பு 13 இனை வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோனிப்பிள்ளை லூயிஸ் பொனிபஸ் கடந்த (20.09.2017) புதன்கிழமை பாலைக்குழி, நானாட்டான், மன்னாரில் காலமானார்.

அன்னார் பிறிம்றோஸின் அன்புக் கணவரும் டெனீஸ், டொனால்ட், டொறின், டொலறஸ், காலஞ்சென்ற அன்ரன் டென்சில் மற்றும் அன்ரன் டயஸ் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் பொரளை, ஜயரத்ன மலர்ச்சாலையில் இன்று 22.09.2017 முதல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இறுதிச் சடங்குகள் 23.09.2017 சனிக்கிழமை பி.ப.3.00 - 4.00 மணியளவில் பொரளை கனத்தை பொது மயானத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

077 778 8127,
011 236 0975

தகவல்: பிறிம்றோஸ் (மனைவி)
அன்ரன்டயஸ் (மகன்)

போட்டிப் பரீட்சை வகுப்புகள்
SLAS Ltd.
Oct. 8,14 இல் பரீட்சை நடைபெறவுள்ளது.
வகுப்புக்கள் சனி, ஞாயிறு தினங்களில் காலை 9.00 → 3.30 மணிவரை
வடமாகாண ஆசிரியர்
ஞாயிறு காலை 9.00 → 4.00 மணிவரை
கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர்
சனி 9.00 → 2.00
சட்டமாணி நுழைவு
சனி, ஞாயிறு 9.00 → 3.00
அதிபர்EB
வகுப்புக்கள் நடைபெறவுள்ளது.
தொடர்புகளுக்கு
076 688 3394
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு யாழ்.நகர்.

Oct. 08.14 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள
SLAS [LIMITED]
விசேட இறுதிக் கருத்தரங்குகள்
☆ காலம் :-
23/09 (சனி), 24/09 (ஞாயிறு), 30/09 (சனி), 01/09 (ஞாயிறு), 05/10 (வியாழன்)
☆ நேரம் :- 09.00 - 02.00P.M
சகல பாடங்களும் முற்றிலும் எதிர்பார்க்கை வினா விடைகளுடன் முன்னணி விரிவுரையாளர்களினால்.
விரிவுரையாளர் :
P.உமாசங்கர் P.கமல்தாசன்
நாவலர் கல்வி நிலையம்
ஆனைப்பந்தி, யாழ்.நகர். T.P. 077 469 6695

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 22.09.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.